875
16·X·07

வெளியீடு : 1-8-2007

Issued : 1-8-2007

தமிழ்நாடு ... செயலகம்
சென்னை-600 009

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 13, 2007—தொகுதி 28—எண் 1

Friday the 13th April, 2007 —Volume 28—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

22781 8

13–4–2007

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் iii-viii

Governor and Council of Ministers ix-xiii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xv-xviii

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xix-xxix

**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-38

**2. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

விவசாயிகள் உரிய காலத்தில் கரும்பை சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்ப முடியாத நிலை 38-46

**3. தகவல் கோரல்—**

(அ) அரியலூர் தொகுதி மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மின் தடை 46-50

(ஆ) பண்ருட்டி தொகுதி, முந்திரிக் காட்டில் பெண் கொலை செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள அச்ச நிலை 50-51, 54-55

(இ) நாங்குநேரி–திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டம்—தனி மின் பாதை அமைத்தல் 51-53

(ஈ) உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.பி. கலைராஜன், பொள்ளாச்சி வி. ஜெயராமன், இரா. விசுவநாதன், சி.வி. சண்முகம் ஆகியோரை அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி வேண்டுதல் 53,57-60

| | பக்கங்கள் |
|---|---|
| **3. தகவல் கோரல்**—தொடர்ச்சி | |
| (ஈ) சிதம்பரம், மாணவி சேட்னா தற்கொலை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை | 55-57 |
| **4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | 60-175 |
| (அ) கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம் | |
| (ஆ) கோரிக்கை எண் 33—சட்டத் துறை | |
| *மாண்புமிகு திரு. துரைமுருகன் | 61,82,94, 145-146,147, 150,157-172 |
| *திரு. ஆ. அருண்மொழிதேவன் | 90,95-108 |
| டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் | 108,109-116 |
| திரு. த. தியோடர் ரெஜினால்டு | 117-122 |
| *திரு. த.அ. மேகநாதன் | 122-129 |
| *திரு. கே. மகேந்திரன் | 129-134 |
| *திரு. எஸ். இராசசேகரன் | 135-139 |
| திரு. வீர. இளவரசன் | 75-76,139-143 |
| *திரு. ஞா. செந்தமிழன் | 143-150 |
| திரு. சி. ஞானசேகரன் | 69,89-90, 151-156 |
| **5. அறிவிப்புகள்**— | |
| (அ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களுக்குப் பேசும் வாய்ப்பு | 152-157 |
| (ஆ) பேரவைத் தலைவரின் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள் | 175-176 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 176 |


## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள, இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227568
சென்னை-600 008
நூலகம்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்-அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

13. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

14. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறை முகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR —THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Statistics and Ex-Servicemen** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Statistics and welfare of Ex-Servicemen

6. Minister for Agriculture .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. Minister for Public Works and Law .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. Minister for Higher Education .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. Minister for Transport .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. Minister for Backward Classes .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. Minister for Rural Industries .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. Minister for Revenue and Prisons .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. Minister for Tourism .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. Minister for Information .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. Minister for Food and Co-operation .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation

16. Minister for Housing and Slum Clearance .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. Minister for Health .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare .

**18. Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

**19. Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

**20. Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

**21. Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

**22. Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

**23. Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

**24. Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



**25. Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

**26. Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

**27. Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

**28. Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

**29. Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

**30. Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

**31. Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

### செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2007 **அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு**

| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. துணைச் செயலாளா (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம்., | .. குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி அ. லெற்றிஸால், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. பிரேமா, பி.காம்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

திரு. கே. பாலசுப்ர்மணியன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து, | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ் ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ .. வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. .. பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. .. ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. .. நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. .. பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. .. திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். .. ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. .. சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. .. அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. .. தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. .. பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்
42. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
44. கண்ணப்பன், திரு. மு. .. தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. .. தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. .. செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. .. காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. .. தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. .. முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. .. அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. .. மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. .. எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். .. கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. .. குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. .. திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. .. அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. .. உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. .. திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
74. சந்திரகாசி, திரு. மா. .. வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. .. ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். .. மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. .. தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. .. விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்
105. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். .. முசிறி
107. செல்வராஜ், திரு. து. .. ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. .. திருவெறும்பூர்

110. சேகர், திரு. எஸ்.வி. .. மயிலாப்பூர்

111. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. .. மதுரை மத்தி

113. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி

114. சௌந்திரபாண்டியன், திரு. அ. .. குன்னூர் (செ.வ.)

115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

116. ஞானதாஸ், திரு. ஆர். .. சிவகாசி

117. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)

118. தங்கமணி, திரு. பி. .. திருச்செங்கோடு

119. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை

120. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி

121. தண்டபாணி, திரு. மா. .. வேடசந்தூர்

122. தமிழரசி, திருமதி ஆ. .. சமயநல்லூர் (செ.வ.)

123. தமிழரசு, திரு. அ. .. ஓமலூர்

124. தமிழ்செல்வன், திரு. சி. .. ஏற்காடு (ஆவா.)

125. தம்பிதுரை, முனைவர் மு. .. பர்கூர்

126. தர்மலிங்கம், திரு. எல்.பி. .. சத்தியமங்கலம்

127. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு

128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. .. பத்மநாபபுரம்

129. திருநாவுக்கரசு, திரு. கே. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

130. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. .. திருவையாறு

132. துரைசாமி, திரு. வீ.பெ. .. சங்கரி (செ.வ.)

133. துரைமுருகன், திரு. .. காட்பாடி

134. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி

135. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

136. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு

137. நெடுஞ்செழியன், டாக்டர் க. .. கபிலர்மலை

138. நெடுஞ்செழியன், திரு. ரெ. .. புதுக்கோட்டை

139. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி-2

140. பதர் சயீத், திருமதி .. திருவல்லிக்கேணி

141. பத்மாவதி, திருமதி பி. .. நன்னிலம் (செ.வ.)

142. பரஞ்ஜோதி, திரு. மு. .. ஸ்ரீரங்கம்

143. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

144. பலராமன், திரு. பி. .. பொன்னேரி (செ.வ.)

145. பழனிசாமி, திரு. ஆர்.எம். .. மொடக்குறிச்சி

146. பன்னீர்செல்வம், திரு. எம். .. சீர்காழி (செ.வ.)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்

149. பாண்டுரங்கன், திரு. கு. .. அணைக்கட்டு

150. பாபு, திரு. வி.எஸ். .. புரசைவாக்கம்

151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. .. திருவிடைமருதூர்

152. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்

153. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | திருப்பத்தூர் |
| 160 | பெரியசாமி, திரு. இ. | ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | சேந்தமங்கலம் (ஆவா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | பெருந்துறை |
| 168. | போளூர் ம. வரதன், திரு | செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | கும்பகோணம் |
| 175. | மணி. திரு. ஜி.கே. | மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | திருவாரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 177. | மலரவன், திரு. தா. | கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | சேலம்-I |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | கோவில்பட்டி |
| 195. | ராமச்சந்திரன், திரு. கா. | கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | பவானி |
| 197 | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | தொட்டியம் |

| | | |
|---|---|---|
| 200. | ராஜன், திரு. அ. | .. நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்கேகே.பி. | .. ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | .. திருப்பத்தூர் |
| 203. | லட்சுமணன், திரு. ச. | .. போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | .. குடியாத்தம் |
| 205 | லீமா றோஸ், திருமதி ரா. | .. திருவட்டாறு |
| 206. | வசந்தகுமார், திரு. எச். | .. நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | .. விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | .. காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | .. விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கே.எஸ். | .. கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. பெ.சு. | .. போளூர் |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | .. செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | .. பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. சேலம்-2 |
| 216. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | .. தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | .. தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | .. பேரூர் |
| 221. | வேல்துரை, திரு. பா. | .. சேரன்மகாதேவி |
| 222. | வேல்முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |



| | | |
|---|---|---|
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |
| 224. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | .. விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | .. அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | .. குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | .. வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | .. இராமநாதபுரம் |
| 234. | ஆஸ்கார் சி. நிகலி, டாக்டர் | .. நியமனம் |
| 235. | (வெற்றிடம்) | .. மதுரை மேற்கு |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. இரா. விடுதலை | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 30, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 13, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்"

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**51—**

### கட்டட வசதி

***746—திரு. கு. சீனிவாசன்:**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னைப் பெருநகரக் காவல் துறை ஆணையாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2007 ஏப்ரல் 13

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னைப் பெருநகரக் காவல் ஆணையர் அலுவலகம் தற்போது மிகவும் பழமை வாய்ந்த கட்டடத்திலே இயங்கி வருகின்றது. சென்னைப் போக்குவரத்துக் காவல் அலுவலக வளாகத்தில் சென்னை காவல் ஆணையாளர் புதிய அலுவலகம் கட்ட அனுமதித்து, அரசு ஆணை எண் 223, உள் துறை, 12-2-2007 அன்று பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சீனிவாசன்.

**திரு. கு. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இடத்தைத் தேர்வு செய்திருப்பதாகக் கூறியுள்ளார்கள். அந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு எவ்வளவு திட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது? மேலும், அந்தத் திட்டத்தை முடித்திட கால நிர்ணயம் ஏதாவது செய்து இருக்கிறீர்களா? மேலும், மாநகரக் காவல் ஆணையாளர் அலுவலகத்திலேயே இணை ஆணையாளர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இணை ஆணையாளர் அலுவலகங்கள் அந்தந்தச் சரகத்திலேயே செயல்படுத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு சற்று விரிவாகவே பதிலளிக்க விரும்புகின்றேன். சென்னை மாநகரக் காவல் ஆணையாளர் அலுவலகம் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாளாக இருந்து வருகிறது. 30-8-2006 அன்று நான் சட்டமன்றப் பேரவையிலே காவல் துறை மானியம் குறித்து பதில் அளிக்கும்போது, சென்னை எழும்பூர், பாந்தியன் சாலையிலே உள்ள சென்னை மாநகரக் காவல் ஆணையாளர் அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தில் இடவசதி போதுமானதாக இல்லை. தற்போது போக்குவரத்துப் பிரிவு செயல்படுகின்ற பழைய கட்டடத்தைக் காவல் துறை வீட்டு வசதிக் கழக அதிகாரிகள் ஆய்வு செய்து பயன்படுத்த அது ஏற்றது அல்ல என்று அறிவித்துள்ளார்கள். அந்த வளாகத்தில் 5.5 ஏக்கர் காலி இடம் உள்ளது. அங்கே அனைத்து மாநகரக் காவல் அலுவலகங்களும்



2007 ஏப்ரல் 13]

ஒருங்கே செயல்படும் வகையில், அவர்கள் கேட்ட அந்தப் புதிய கட்டடம் உட்பட ஒருங்கே செயல்படும் வகையில் அடுக்குமாடிக் கட்டடம் ஒன்று ரூபாய் 15 கோடி திட்ட மதிப்பீட்டில் 2 கட்டங்களாகக் கட்டப்பெறும். இந்த நிதி ஆண்டிலேயே 10 கோடி ரூபாய் செலவில் முதல் கட்ட வேலைகள் தொடங்கும் என்று அறிவித்திருந்தேன். அதன் தொடர்ச்சியாகக் காவல் துறைத் தலைமை இயக்குநர் அனுப்பிய கோப்பில் தரை மற்றும் 9 மாடிகள் கொண்ட கட்டடம் ஒன்றை சென்னை மாநகரக் காவல் ஆணையர் அலுவலகத்திற்காகப் போக்குவரத்துப் பிரிவு வளாகத்தில் 23.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்குப் பரிந்துரை செய்திருந்தார்கள். ஆனால், 20.65 கோடி ரூபாய் அதற்கு அனுமதிக்கலாம் என்று நிதித் துறை பரிந்துரை செய்திருக்கிறது. 6-2-2007 அன்று அதை ஏற்றுக்கொண்டு, கையெழுத்திடப்பட்டு, வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சீனிவாசன்

**திரு. கு. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்னைப் பெருநகரக் காவல் துறை ஆணையாளர் அலுவலகம் இயங்கி வந்த இடத்தை அரசு என்ன செய்யப்போகிறது என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிவுடன் கவனிக்க வேண்டிய ஒரு விஷயத்தை எடுத்துக்கூற விரும்புகிறேன். காவல் நிலையங்களுக்கு உதவி ஆய்வாளரையோ ஆய்வாளரையோ சந்திக்க அந்தப் பகுதியில் உள்ள முக்கியஸ்தர்கள் செல்லும்போது அவர்களை உபசரிக்கும் விதமாக...

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி, கட்டடம் கட்டுவது சம்பந்தமானது.

**திரு. கு. சீனிவாசன்:** இது காவல் துறை சம்பந்தப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவல் துறைதான். மூலக் கேள்வி, கட்டடம் கட்டுவது சம்பந்தமானது.

**திரு. கு. சீனிவாசன்:** நான் சொல்லிவிடுகிறேன். பதில் சொல்லட்டும். இல்லை என்றால் விட்டுவிடுங்கள். முக்கியஸ்தர்கள் அத்தகைய அதிகாரிகளைக் காணச் செல்லும்போது உபசரிக்கும்

[2007 ஏப்ரல் 13

விதமாக அவர்களுக்கு டீ, காபி போன்ற பானங்களை அந்த அதிகாரிகள் வாங்கித் தருகிறார்கள். அத்தகைய பானங்களை முக்கியஸ்தர்கள் இருக்கும் அறைக்கு எடுத்து வந்து தருவது அந்தக் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்கள்தான். விசாரணைக் கைதிகளுக்கும் அவர்கள்தான் உணவு வாங்கி வருகிறார்கள். போலீஸ் வேலைக்குப் போகும்போது மிடுக்குடன் செல்லும் அவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடும்போது அவர்களுடைய தன்மானம் பாதிக்கப்படுகிறது. எல்லாத் துறைகளிலும் அலுவலக உதவியாளர்கள் இருக்கிறார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது.

**திரு. கு. சீனிவாசன்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம், பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லிவிடுகிறேன். எல்லா அலுவலகங்களிலும் O.As. இருக்கிறார்கள். அதுபோல் எல்லாக் காவல் நிலையங்களுக்கும் அலுவலக உதவியாளர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். காவலர்களின் தன்மானம் காக்கப்பட வேண்டும், இதற்கு அரசு என்ன செய்யப் போகிறது என்பதையும் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எண்ணுவதுபோல, தன்மானம் காப்பாற்றப்படுகின்ற அளவுக்கு இனி கட்டப்படுகின்ற காவல் நிலையங்கள் கட்டப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். தன்மானம் காப்பாற்றப்பட வேண்டுமேயானால், கண்ணாடி வீடுகளாகத்தான் அவை கட்டப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. ஆட்சியில் தற்போதுள்ள D.G.P. அலுவலகத்தை இடித்துவிட்டு வேறு அலுவலகம் கட்டுவதாக அறிவிப்புச் செய்தார்களே, அது என்னவாயிற்று என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.



2007 ஏப்ரல் 13]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, D.G.P. அலுவலகம் ஏற்கெனவே இருந்ததை இடிப்பதற்கு கடந்த கால ஆட்சியிலே முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதற்கான டெண்டர் எல்லாம் விடப்பட்டது. அதை இடிப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றபோது, முன்னாள் I.G. -ஆக இருந்த அருள் போன்றவர்கள் எனக்குக் கடிதம் எழுதினார்கள். 'அந்தக் கட்டடம் பழைய காலத்துக் கட்டடம், வரலாற்றுப் புகழ்பெற்ற கட்டடம், இந்தியாவிலே கடற்கரை ஓரத்தில் இப்படியொரு அழகான கட்டடம் எங்கும் இல்லை காவல் துறைக்காக, அதை இடிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று எழுதினார்கள். உடனேயே அந்த வேலையை நிறுத்திவிட்டு, அதை இடிப்பதை நிறுத்தச்சொல்லி, மீண்டும் அந்தக் கட்டடத்தைப் புதுப்பிக்கின்ற பணியிலே ஈடுபட்டு, அந்தக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு, இப்போது மக்கள் அனைவரும் பார்த்து வியக்கின்ற அளவுக்கு ஒரு சுற்றுலாக் கேந்திரமாக அது அமைந்திருப்பதை யாரும் கவனித்து அதைப்பற்றி புகழ் பாடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை காவல் நிலையங்கள் உள்ளன; அதில் எத்தனை காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் இருக்கிறது; எத்தனை காவல் நிலையங்கள் வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன? அதேபோல, எங்களது அரியலூர் தொகுதியில் நீண்ட நாட்களாக வி.கே. கேட்டில் ஒரு காவல் நிலையம் கேட்டேன். அதற்கும் தங்கள்வாயிலாக மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் தலைஞர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு உரிய பதில் சற்று விரிவாக. மகளிர் காவல் நிலையங்கள் உட்பட மொத்தம் 1,432 காவல் நிலையங்கள் உள்ளன. இவற்றில் 1,148 காவல் நிலையங்கள் அரசுக் கட்டடங்களிலும், 248 காவல் நிலையங்கள் தனியார்க் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. மகளிர் காவல் நிலையங்கள் 196 இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.

[2007 ஏப்ரல் 13

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததைப்போல, புதிதாக D.G.P. அலுவலகக் கட்டடம் கட்டுகின்ற செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் louder-ஆகக் கேளுங்கள். கொஞ்சம் சத்தமாகக் கேளுங்கள்.

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, D.G.P. அலுவலகம் புதிதாகக் கட்டுகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போதிருக்கின்ற D.G.P. அலுவலகமே தாஜ்மகாலுக்கு இணையாகப் பேசப்படுகின்றது. அதனால் புதிதாகக் (மேசையைத் தட்டும் ஒலி) கட்ட வேண்டிய அவசியம் இல்லை. கூடுதலாகப் புதிய கட்டடம் ஒன்று கட்டப்படவுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரக் காவல் ஆணையர் அலுவலகம் கட்டப்படும் பணி தற்போது எந்த நிலையில் உள்ளது; எப்போது முடிவடையும் என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது குறித்து ஏற்கெனவே பதில் சொல்லியாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பார்க்காமல் வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். ரொம்பவும் நன்றி. கொடுக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தேன், கொடுத்துவிட்டீர்கள். மாண்புமிகு பேரவைத்



2007 ஏப்ரல் 13]

தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், புவனகிரி காவல் நிலையம் மிகவும் பழுதுபட்டுள்ளது. அதேபோன்று காவலர் குடியிருப்பும் இல்லாமல் அங்குள்ள காவலர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு புதிய காவல் நிலையமும், காவலர் குடியிருப்பும் அமைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, புதிய காவல் நிலையங்கள் கட்டுகின்ற முயற்சி எடுக்கப்படும்பொழுது புவனகிரியும் கவனத்தில் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டக் கண்காணிப்பாளர் அலுவலகம் போதிய இடவசதி இல்லாமல் இருக்கிறது. அதேபோன்று, D.I.G. அலுவலகமும் ஒரு சிறிய இடத்திலே இயங்கிக்கொண்டிருக்கிறது. அவற்றையெல்லாம் புதிய கட்டடங்களாகக் கட்டுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன் வருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே தொடர்ந்து கூறி வருகிற சிங்கப்பெருமாள்கோவில், பொன்விளைந்தகளத்தூர் பகுதிகளிலே புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்படுமா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய காவல் நிலையங்களுடைய பட்டியலில் அவை இடம் பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்; மேற்கொள்வதற்குப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *52*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 13

**52—**

### துணை மின் நிலையம்

***503—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கத்தரிப்புலம் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கத்தரிப்புலம் கிராமத்தில் புதிய 33/11 கிலோவோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. தேவை அடிப்படையில் மேற்படி துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வேதாரண்யம் தொகுதியில் மின் அழுத்தக் குறைபாடு பரவலாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக கத்தரிப்புலத்தைச் சார்ந்த, அதைச் சுற்றியுள்ள வட்டாரப் பகுதியிலேயுள்ள ஊராட்சிகள் அனைத்திலும் இந்தக் குறைபாடு இருக்கிறது. (குறுக்கீடு) மைக் இல்லை, கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். சொல்லுங்கள் இங்கே கேட்கிறது.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** ஆகவே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆயக்காரன்புலம் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம்



2007 ஏப்ரல் 13]

தொடங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் தொடங்காமல் இருக்கின்றன. அதையும் விரைவில் தொடங்கி, உடனடியாக இந்த மின் அழுத்தக் குறைபாட்டைச் சரி செய்ய ஆவன செய்யப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கத்தரிப்புலம், காரியாப்பட்டினம் மற்றும் அதனைச் சார்ந்துள்ள பகுதிகளுக்கு சுமார் 17 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வாய்மேடு 66/33/11 கிலோவோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. கத்தரிப்புலத்தில் புதிய 33/11 கிலோவோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதன்மூலம் மின் பாதைகளின் நீளம் குறைக்கப்பட்டு, அதன் மூலம் மின் இழப்பு குறைக்கப்படும். அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம் எனது தொகுதி ஜவ்வாது மலையிலே 34 மலைக் கிராமங்கள் இருக்கின்றன. அங்கே 25,000-க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வசிக்கிறார்கள். விவசாயம் செய்து வாழ்கிறார்கள். அங்கே அடிக்கடி மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. கீழேயிருந்துதான் மின்சாரம் செல்ல வேண்டும். நீண்டகாலமாக ஒரு துணை மின் நிலையம் ஜவ்வாது மலையில் புதூர்நாட்டிலே அமைக்க வேண்டுமென்று கோரி வந்தேன். இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஜவ்வாது மலைவாழ் மக்களுடைய வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடைய துணை மின் நிலையம் அமைத்துத் தருவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையிலே புதிய மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடிதம்

[2007 ஏப்ரல் 13

கொடுத்தால், 2008 ஆம் ஆண்டு அந்த துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், திருப்பூர் பகுதியினுடைய மின்சாரப் பற்றாக்குறை குறித்து கடந்த ஆண்டு அவருடைய கவனத்திற்குக் கொண்டுசென்றபோது அங்கு ஒன்பது துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு உடனடியாக அனுமதி வழங்கினார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். ஆனால், அப்படி அறிவிக்கப்பட்ட ஒன்பது துணை மின் நிலையங்களில் ஒன்றில்கூட இந்த ஓராண்டுக் காலத்தில் பணிகள் தொடங்கப்படாத நிலை தொடர்ந்து நீடிக்கிறது. கடுமையான மின்வெட்டால் திருப்பூர் பாதிக்கிறது. ஆகவே, அந்த மின் நிலையம் அமைப்பதற்கான இடம் வாங்குவதிலே ஒரு சரியான வழிகாட்டுதல் இல்லை என்று அதிகாரிகள் மட்டத்திலே தெரிவிக்கிறார்கள். தற்சமயம் சாயப்பட்டறை உரிமையாளர்கள் அமைக்கக்கூடிய பொது சுத்திகரிப்பு நிலையம்மூலம், இடம் வாங்கித்தர வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். ஏற்கெனவே அவர்கள் சிரமத்தில் இருக்கின்றபோது இதற்கு இடம் வாங்குவதில் அவர்களுக்கு சிரமம் இருக்கிறது. ஆகவே, அந்த இடம் வாங்குவதற்கு, அரசு சரியான வழிகாட்டுதலைத் தந்து, உடனடியாக அந்த ஒன்பது துணை மின்நிலையங்கள் தொடங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் தெரிவித்ததைப்போல, திருப்பூரில் வளர்ந்துவரும் பனியன் தொழிலை முன்னிட்டு ஒன்பது துணை மின் நிலையங்கள் தொடங்குவதற்கான அனுமதியை மின்சார வாரியம் ஏறக்குறைய 150 கோடி ரூபாயிலே திட்டம் தீட்டி அமல்படுத்தியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்ததைப்போல மின் நிலையம் அமைக்கவேண்டுமென்று சொன்னால், நிலம் தேவை. திருப்பூரிலே எங்கேயும் இரண்டு ஏக்கர் அல்லது மூன்று ஏக்கர் நிலம் தேர்வு செய்வதற்கான வாய்ப்பே இல்லை. அரசுக்குச் சொந்தமான நிலமாக



2007 ஏப்ரல் 13]

இருந்தாலும் அல்லது ஆலயங்களுக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும் அல்லது தனியாருக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும், எந்த நிலத்தை நீங்கள் சுட்டிக்காட்டினாலும், அதற்குத் தேவையான மார்க்கெட் ரேட்டைக் கொடுத்து, இன்னும் சொல்லப்போனால், அவர்கள் எவ்வளவு கேட்கிறார்களோ அந்தப் பணத்தை கொடுத்து வாங்கி, துணை மின் நிலையம் அமைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. நீங்கள் நிலத்தைத் தேர்வு செய்து தாருங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே நானும் தெரிவித்திருக்கிறேன். அவரிடத்திலே சொன்னதோடு மட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் சொல்லியிருக்கிறேன். மேலும், எங்களது தலைமைப் பொறியாளரிடத்திலும் சொல்லி, விரைவில் இடத்தைத் தேர்வு செய்யும்படி கேட்டிருக்கிறேன். அந்த இடம் தேர்வு செய்யப்பட்டால், ஆறு மாத காலத்திற்குள்ளாக துணை மின் நிலையங்கள் கட்டி முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரு மாதக் காலமாக எப்போது மின்சாரம் வருகிறது என்ற நிலை, எப்போது வருவதில்லை என்ற நிலை விவசாயிகள் மத்தியிலும், தொழில் செய்பவர்கள் மத்தியிலும் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், மின்தடை ஏற்படுகிறபோது மின் வெட்டு இருக்கிறது என்பதை அந்தந்தப் பகுதியிலே அறிவித்துவிட்டு, அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் சரியான முறையிலே மின்சாரத்தை வழங்குவதற்கு முன்வந்தால், விவசாயிகள் குறிப்பிட்ட அந்த நேரத்திலே தங்களுடைய் மின் மோட்டார்களை இயக்குவதற்கும், தொழில் செய்பவர்களுக்கும் வசதியாக இருக்கும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, துணை மின் நிலையம் சம்பந்தப்பட்டது. சம்பந்தப்பட்ட கேள்வியினைக் கேளுங்கள். (குறுக்கீடு) எந்த வகையில் அது சம்பந்தப்பட்டிருக்கிறது?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஆக்வே அறிவிக்கப்படாத மின்வெட்டு இருக்கிற காரணத்தினாலே, அறிவிக்கப்பட்ட மின்வெட்டாகவே அறிவித்து இந்த அரசு நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட நேரத்தில் மின்சாரத்தை வழங்குமா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2007 ஏப்ரல் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வெட்டு என்ற ஒன்று இருக்குமானால் அதை அறிவிக்கலாம். கடந்த கால ஆட்சியிலே ஆங்காங்கே சில நேரங்களிலே மின்சாரத் தடை இருந்தது. மின்சாரத் தடை இருப்பதற்கும், மின்வெட்டு இருப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆனால், சில இடங்களிலே டிரான்ஸ்பார்மர்கள் இல்லாத காரணத்தினாலே 20 நிமிடம் அல்லது 1/2 மணி நேரம் மின்தடை ஏற்படுகிறது. அதையும் சரிசெய்வதற்கு இந்த அரசு, ஏற்கெனவே நான்கு ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் வாங்கி எல்லா மாவட்டங்களுக்கும் பிரித்துக் கொடுத்திருக்கிறது. மேலும், மூன்று ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் வாங்கி அண்ணா பிறந்த நாளில் அல்லது அதற்குள்ளாக அமைத்து இப்படிப்பட்ட குறைபாடுகளே வராமல் இருப்பதற்கான நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்து வருகிறோம் என்பதையும் இந்த அவையிலே நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். எனவே, மின்சார வெட்டு என்பது தமிழகத்திலே இல்லை. மின்தடை ஒருசில இடங்களிலே இருக்கிறது.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த ஆண்டுகூட, இதை துணைக் கேள்வியின்மூலம் எழுப்பினேன். என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்குள்ளடங்கிய கீழக்குப்பம் கிராமத்தில், துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, அரசாணை வழங்கப்பட்டு, எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன, ஆனால், இதுநாள் வரையில் மின்சார வாரியத்தினுடைய துறை அதிகாரிகள், அங்கு அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணியைத் தொடங்காமல், காலதாமதம் செய்து வருகிறார்கள். ஆகையால், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாக நான் கேட்க விரும்புவது, இந்த ஆண்டே எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டு அந்தத் திட்டத்தை, இந்த ஆண்டே தொடங்கி, மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2007 ஏப்ரல் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப்போல, இந்த ஆண்டே வேலைகள் தொடங்கி, இந்த ஆண்டே பணிகள் முடித்து, இந்த ஆண்டே திறப்பு விழா செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, மாண்புமிகு உறுப்பினர் அ. ராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**53—**

## வேளாண்மைக் கல்லூரி

***12646—திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் வேளாண்மைக் கல்லூரி அமைத்திடும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம், நாகர்கோவிலில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டியது முக்கியமான ஒன்றாகும். காரணம், குமரி மாவட்டத்தில், தென்னை விவசாயம் 26,000 ஹெக்டேர்; நெல் விவசாயம் ஆண்டிற்கு 24,000 ஹெக்டேர்; வாழை 6,000 ஹெக்டேர்; இரப்பர், நல்ல இரப்பர் 18,900 ஹெக்டேர்; மர சீனி 5,000 ஹெக்டேர்; கத்திரி, மிளகாய் 400 ஹெக்டேர்; முந்திரி 3,000 ஹெக்டேர்; பயறு, உளுந்து 2,000 ஹெக்டேர். . .

[2007 ஏப்ரல் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. அ. ராஜன்:** கேள்விதான். பலவகைப் பூக்கள் உட்பட இதர விவசாயப் பொருட்கள் சுமார் 8,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றன. மேலும், இங்கு ஓராண்டில் 1,450 மில்லி மீட்டர் மழை கிடைக்கின்றது. வண்டல் மண், மணல் கலந்த மண், கரிசல் மண், செம்மண் ஆகிய விவசாயத்திற்கு ஏற்ற மண் இங்கே கிடைக்கிறது. சிறப்பு அம்சமாக 24 இரகங்கள் சுவையான வாழை, வேறு எங்கும் இல்லாதபடி எங்களுடைய மாவட்டத்தில் கிடைக்கிறது. இயற்கை விவசாய உரமான மண் புழு உரம் 400 டன் தயாரிக்கப்படுகிறது. கயிறு கழிவுகளிலிருந்து வரும் உரம் சுமார் 100 டன் தயாரிக்கப்படுகிறது. வேளாண்மைக் கல்லூரி நாகர்கோவிலில் வரும்பட்சத்தில் இந்த உற்பத்தி இன்னும் அதிகரிக்கும். கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்ற தொழில்களும் அதிகரிக்கும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜன், இது கன்னியாகுமரியிலே வேளாண்மைக் கல்லூரி பற்றிய கேள்வி.

**திரு. அ. ராஜன்:** நான் முடித்துவிட்டேன். நாகர்கோவிலிலே அரசு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் கல்லூரி அமைப்பதற்கான போதிய இட வசதி உள்ளது. எனவே, தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அரசு, நாகர்கோவிலில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்பொழுது 10 வேளாண்மைக் கல்லூரிகள் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அருகிலுள்ள தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிகுளத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி இயங்கி வருகின்றது. கன்னியாகுமரி மாவட்ட மாணவர்கள் மேற்கண்ட கல்லூரியில் சேர்ந்து படிக்க ஏதுவாக உள்ளது. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள திருப்பதிசாரத்தில் ஒரு வேளாண்மை ஆராய்ச்சி நிலையமும், பேச்சிப்பாறையில் ஒரு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையமும் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட ஆராய்ச்சி நிலையங்களும், வேளாண் அறிவியல் நிலையமும் கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன. இவை தவிர, தோவாளையில் புதியதாக



2007 ஏப்ரல் 13]

ஒரு மலரியல் ஆராய்ச்சி நிலையம் தொடங்க அரசு முடிவு எடுத்துள்ளது. இந்த நிலையில், மேலும் வேளாண்மைக் கல்லூரி ஒன்று அங்கு தொடங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது வேளாண்மைக் கல்லூரி. எங்கள் குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், படித்தவர்கள் அதிகம் உள்ளவர்கள் என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால், எங்கள் மாவட்டத்தில் அரசு சார்பில் ஒரு கலைக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ, சட்டக் கல்லூரியோ, வேளாண்மைக் கல்லூரியோ இதுவரை அமைக்கப்படவில்லை. தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமை வேண்டும் என்கின்ற காரணத்திற்காக, எங்களுடைய மாவட்டத்தில் 7 சட்டமன்றத் தொகுதிகளையும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு மக்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே, தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அரசு, எங்களுடைய மாவட்டத்தில் மக்கள் எதிர்பார்ப்பிற்கிணங்க, ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைத்துத்தர முன்வருமா என்பதை மீண்டும் தங்கள்வாயிலாக அமைச்சரிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி தாராளமாகக் கிடைக்கின்ற காலம் வந்தால் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டப் பேரவைத் தொகுதி, நூற்றுக்கு நூறு சதவீதம் விவசாயிகள் நிறைந்து இருக்கிற தொகுதி. அங்கே சில நவீன அரிசி ஆலைகள், இரண்டு ஜல்லி மிஷின்களைத் தவிர வேறு எந்தவிதமான தொழிலும் இல்லை. எனவே, போளூர் சட்டப் பேரவைத் தொகுதியிலே கேளூர் சமத்துவபுரம் பகுதியிலே 350 ஏக்கர் அரசு நிலம் உள்ளது. அரசு அங்கே விவசாயக் கல்லூரி அமைத்துத் தருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உத்தேசம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகளில் சேலம் மாநகராட்சியும் ஒரு பெரிய மாநகராட்சி. எங்களது மாவட்ட அமைச்சரான வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய சேலம் மாவட்டத்திற்கு ஒரு வேளாண்மைக் கல்லூரியை— இப்பொழுது கோயம்புத்தூரிலே இருக்கிறது Agri College என்று, அதேமாதிரி சேலம் மாவட்டத்தில் ஏதேனும் ஒரு பகுதியில் அதாவது— மேட்டூரிலேயோ அல்லது ஆத்தூரிலேயோ, தலைவாசலிலேயோ ஏதேனும் ஒரு பகுதியில் இந்த வேளாண்மைக் கல்லூரியை அமைத்துத் தருவாரா? அதேபோல் தமிழகத்தில் மாவட்டத்திற்கு ஒரு வேளாண்மைக் கல்லூரி என்று அமைக்க ஏதேனும் அரசிடம் செயல் முறை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, தற்போது சேலத்தில் கே.வி.கே. ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. ஏத்தாப்பூரில் மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம் பல்கலைக்கழகத்தின் சார்பாக நடத்தப்படுகிறது. வேளாண்மைக் கல்லூரி தொடங்குகின்ற உத்தேசம் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**54—**

## சார்பதிவாளர் அலுவலகம்

***2539—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





பனமரத்துப்பட்டியில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பனமரத்துப்பட்டி கிராமத்தில் புதியதாக ஒரு சார்பதிவாளர் அலுவலகம் தோற்றுவிக்க சாத்தியக்கூறு இல்லை, ஆதலால் அதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனமரத்துப்பட்டி பேரூராட்சியைச் சுற்றிலும் பல்வேறு கிராமங்கள் அமைந்திருக்கின்றன. அதேபோல அருகிலே இருக்கிற மல்லூர் பேரூராட்சியைச் சுற்றிலும் பல்வேறு கிராமங்கள் அமைந்திருக்கின்றன. இந்த இரண்டு பேரூராட்சிகளைச் சுற்றி இருக்கிற கிராமப் பகுதிகளிலிருந்து சேலத்திற்கு வந்து பத்திரப் பதிவுகளைச் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. ஏறத்தாழ 35, 40 கிலோமீட்டர் தொலைவில் இருந்துகூட இங்கே வந்து பதிவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, மல்லூர் பேரூராட்சியை மையமாகக் கொண்டோ, அல்லது பனமரத்துப்பட்டி பேரூராட்சியை மையமாகக் கொண்டோ ஒரு சார்பதிவாளர் அலுவலகம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிற்கு இரண்டாயிரம் ஆவணங்களுக்குக் குறையாமல் பதிவு செய்யப்படும் இடங்களில் மட்டுமே புதியதாக சார்பதிவாளர் அலுவலகங்கள் அமைக்க இயலும். பனமரத்துப்பட்டி சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் கிராமமானது தாதகாப்பட்டி சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் அமைந்துள்ளது. பனமரத்துப்பட்டி கிராமத்திற்கு கிழக்குப் பகுதியில் 9 கிலோ மீட்டர் தொலைவில் 14 கிராமங்கள் அமைந்துள்ளன. மேற்கண்ட கிராமங்களை உள்ளடக்கி, பனமரத்துப்பட்டிக்குப் புதியதாக சார்பதிவாளர் அலுவலகம் அமைக்கப்பட்டால் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் ஆவணங்களின் பதிவு 479-க்குக் குறைவாகவே

இருக்கும். அங்குள்ள சார்பதிவாளர் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்குப் போதிய பணிகளும் இருக்காது. அரசுக்கு வருவாயை விடச் செலவு அதிகமாகும் என்பதால் பனமரத்துப்பட்டியில் புதியதாக சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் அறவே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மல்லூர் மற்றும் பனமரத்துப்பட்டி பேரூராட்சிகளைச் சுற்றி இருக்கிற பல்வேறு கிராமங்களுக்கு அந்தப் பகுதியிலே சார்பதிவாளர் அலுவல்கம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை என அறிவித்து இருக்கிறார்கள். மல்லூர் பேரூராட்சி, பனமரத்துப்பட்டி பேரூராட்சி இவற்றிற்கு அருகிலே அமைந்திருக்கிற, இவற்றைச் சுற்றி அமைந்திருக்கிற பல்வேறு கிராமங்கள் இவற்றையெல்லாம் இணைத்து அந்தப் பகுதியிலே சார்பதிவாளர் அலுவலகம் அமைப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** கடந்த அ.தி.மு.க ஆட்சியில் 40 சார்பதிவாளர் அலுவலகங்கள் வருவாயைக் கணக்கிட்டு மூடப்பட்டன. அதனால் இந்த ஆண்டு 10 இடங்களில் மீண்டும் திறப்பதற்குக் கோரிக்கை எழுப்பப்பட்டதன் காரணமாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10 அலுவலகங்களை மீண்டும் திறப்பதற்கு அனுமதி அளித்துள்ளார்கள். உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வரிடம் கலந்து பரிசீலித்து, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசு.



**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தொகுதியிலே, தருமபுரி மாவட்டத்திற்கு அருகிலே, பொம்மிடிக்கும் அருகிலே, இராமமூர்த்தி நகரில் இருக்கின்றவர்கள் அந்தப் பகுதியிலேயிருந்து ஓமலூர் பதிவு அலுவலகத்திற்கு வந்து பதிவு செய்ய வேண்டிய நிலையிலே நீண்டகாலமாக இருந்து வருகிறார்கள். நான் கல்வி மானியத்திலே பேசும்போதுகூட, காடையாம்பட்டி ஒன்றியத்திற்கு என்று தனியாக ஒரு பதிவு அலுவலகம் வேண்டுமென்று குறிப்பிட்டுப் பேசியிருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காடையாம்பட்டியிலே ஒரு பதிவு அலுவலகத்தைப் புதிதாக அமைத்துக் கொடுப்பார்களா என்று தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு 2,000 ஆவணங்கள் பதியப்படுகின்ற ஒரு வாய்ப்பிருந்தால் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**55—**

## தொழிற்பேட்டை

***202—மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொழிற்பேட்டையில் ஆட்டோ தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஏப்ரல் 13

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்தில் ஆட்டோ தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது சிட்கோவின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைசாமி.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி பேரூராட்சி என்பது, தமிழகத்தில் பேருந்துகளும், லாரிகளும் அதிக எண்ணிக்கையில்கொண்ட ஒரு பேரூராட்சியாகும். இந்தப் பேரூராட்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிறது. மாசுக் கட்டுப்பாடு மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகளிலிருந்து விடுபட இந்தத் தொழிற்பேட்டை சங்ககிரியிலே அவசரமாக அமைய வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தத் தொழிற்பேட்டையில் பேருந்து மற்றும் லாரி body கட்டுவதற்கு, Painter, Fitter, Tinker, லேத்துப் பட்டறை, Body Building, Oil Shop, Mechanic Shop இவையெல்லாம் ஒரே இடத்தில் அமைந்தால் பொருளாதார விரயம் குறையவும், காலநேரத்தை மிச்சப்படுத்தவும் வாய்ப்பு இருப்பதால், இதனைக் கருத்தில்கொண்டு ஆட்டோ நகர் அமைவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்று தங்கள்மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும் தொழில் தொடங்க ஆர்வமுள்ள கணிசமான தொழில் முனைவோர்கள் முன்வந்தால் புதிதாக தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியருடன் கலந்து, கருத்தாய்வு செய்து, தொழிற்பேட்டை தொடங்க எதிர்காலத்திலே நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி.



2007 ஏப்ரல் 13]

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு நாமக்கல் பகுதி மக்களுடைய வேண்டுகோளை ஏற்று, இந்தியாவிலேயே நமது தமிழக முதல்வர் முதன்முதலாக 'ஆட்டோ நகர்' நாமக்கல்லுக்கு வழங்கினார்கள். அதன் பிறகுதான் ஆந்திர மாநிலம், விஜயவாடாவிலே இது அமைக்கப்பட்டது. இதற்கு அரசிடமிருந்து அதிக நிதியாதாரம் தேவையில்லை; 30 ஏக்கர் நிலம் இருந்தால் போதும். அதிலே அந்த Lorry Body Association, அவர்களை வைத்துக்கொண்டு, இதர வசதிகளையெல்லாம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். மாநில அரசிடமிருந்து குடிநீர் வசதியும், மின்சார சப்ளை வசதியும் செய்து கொடுத்தால் போதும். Lorry Body Association மூலமாக இதர வசதிகளையும் செய்துகொள்ளக்கூடிய வாய்ப்பு இருப்பதனால் அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு--தனியார்மூலமாகக்கூட நிலம் வாங்கிக் கொடுப்பதற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம் என்பதைக் கருத்தில்கொண்டு--இந்த ஆட்டோ நகர் இந்தப் பகுதியிலே விரைவிலே அமைய முன்னுரிமை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜ்குமார்.

**திரு. ம. இராஜ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரமான பெரம்பலூரிலே தொழிற்பேட்டை அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டு 2 வருடங்கள் ஆகின்றன. டாக்டர் கலைஞர் தலைமையிலான இந்த அரசு மாவட்டத் தலைநகரமான பெரம்பலூரிலே விரைவில் தொழிற்பேட்டை அமைய ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, தொழில் முனைவர்கள், அதேபோல நிலம் குறைவான விலையிலே கிடைப்பது ஆகியவற்றைக் கருத்திலேகொண்டு, முன்னுரிமை கொடுத்து,

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எதிர்காலத்திலே அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம், மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**56—**

## கட்டட வசதி

***5893—திரு. எம்.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதி, வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆத்தூர் தொகுதி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து புதிய கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் நகரப் பகுதியிலே அமைந்துள்ள வட்டாட்சியர் அலுவலகம் 1873 ஆம் ஆண்டு கட்டப்பட்டது; கிட்டத்தட்ட 134 ஆண்டுகள் ஆகின்றன; பழமைவாய்ந்த கட்டடமாக உள்ளது. அங்கேயுள்ள கோப்புகள் எல்லாம் மழைக் காலங்களிலே நனைகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. அது 112 கிராமங்களைக்கொண்ட ஒரு பெரிய தாலுகாவாகும். அங்கே கிட்டத்தட்ட 77 கிராம நிர்வாக அதிகாரிகள் பணி புரிகிறார்கள். அதேசமயத்திலே மலைவாழ் மக்கள் அதிகமாக உள்ள பகுதி. அப்பகுதியிலேயிருந்து சாதிச் சான்றிதழ் மற்றும் இப்பொழுது நமது தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ள முதியோர் தொகை பெறுவதற்கும் அல்லது பொங்கல் நாளிலே இலவச வேட்டி, சேலை பெறுவதற்கும் மக்கள் அங்கே வந்தவண்ணம்





உள்ளார்கள். அந்தச் சூழ்நிலையிலே, அந்த வட்டாட்சியர் அலுவலகம் ஒரு சின்னக் கட்டடமாக உள்ளது. மழைக் காலங்களிலும், வெயில் காலங்களிலும், பொதுமக்கள் ஒதுங்குவதற்கு இடமில்லாத காரணத்தாலும், பழமைவாய்ந்த கட்டடமாக இருப்பதாலும் அரசு பரிசீலனை செய்து, அந்த வட்டாட்சியர் அலுவலகத்தைப் புதுமைப்படுத்தித் தர வேண்டுமென்று தங்கள்வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் கடந்த ஆண்டுதான், நவம்பர்-டிசம்பரிலே அரசின் சார்பாக ஐந்து இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டுகின்றபொழுது அந்த அலுவலகம் சிறியதாக இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். வருகிற காலத்திலே, வருகின்ற ஆண்டிலே, அடுத்த நிதியாண்டிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகம் மிகப் பழமைவாய்ந்த கட்டடம். அந்தக் கட்டடத்தில் மாஜிஸ்ட்ரேட் கோர்ட், சிறை, கருவூலம், வட்டாட்சியர் அலுவலகம் ஆகியவை இயங்கி வருகின்றன; இடம் போதாத குறை. இந்த வட்டாட்சியர் அலுவலகத்தைத் தனியாகப் பிரித்து ஒரு புதிய கட்டடம் கட்டிக் கொடுக்குமாறு உங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 13

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் வாடகைக் கட்டடத்திலே இருக்கின்ற அத்தனை வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் புதிய கட்டடம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அடுத்த நிதியாண்டிலே, தேவைப்படின், பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**57—**

## செவிலியர் பயிற்சிக் கல்லூரி

***10561—திருமதி பி. பத்மாவதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதியில் செவிலியர் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதியில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதி முழுக்க முழுக்க கிராமப்புறங்களை மையமாகக்கொண்ட தொகுதி. அதைச் சுற்றியுமே, அடுத்த தொகுதியிலே எடுத்துக்கொண்டாலும்கூட, எல்லாமே கிராமம்தான். எனவே, அந்தப் பகுதியிலே படித்திருக்கின்ற பெண்கள், 12 ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்ற பெண்கள், 10 ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்ற பெண்கள் எல்லாம், பத்திரிகை விளம்பரங்களைப் பார்த்து, செவிலியர்



2007 ஏப்ரல் 13]

அல்லது துணைச் செவிலியர் பயிற்சிக்காக பல்வேறு மாவட்டங்களுக்கு, எங்கெங்கே வாய்ப்பு இருக்கிறதோ அங்கேயெல்லாம், கடுமையான செலவுகளைச் செய்து, படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தவகையில் செவிலியர் அல்லது துணைச் செவிலியர் பயிற்சியை நமது அரசுத் தரப்பில் அவர்களுக்கு வழங்கி, அப்படிப்பட்ட செலவு செய்து சிரமத்திற்கிடையில் அவர்கள் படிப்பதைத் தவிர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர் பள்ளி ஆரம்பிப்பதற்கு குறைந்தது 150 படுக்கை வசதி இருந்தால்தான் ஆரம்பிக்க முடியும். நன்னிலம் தாலுகா மருத்துவமனை; headquarters மருத்துவமனையில் மட்டும்தான் இப்போது செவிலியர் பள்ளி இருக்கிறது. இந்தத் தாலுகா மருத்துவமனையிலே 58 படுக்கை வசதிதான் இருக்கிறது. ஆகவேதான் அங்கே ஆரம்பிக்க முடியவில்லை. எதிர்காலத்திலே இதைப்பற்றி யோசிக்கலாம்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எதிர்காலத்தில் பரிசீலிப்போம்' என்று நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். நிச்சயமாக அந்த ஏழையெளிய குழந்தைகளைப் பாதுகாக்கக்கூடிய வகையில், அந்தத் துணைச் செவிலியர் அமைப்பையாவது அங்கு அவர்கள் கொண்டுவர வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை நான் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் பல காரியங்களைக் கருணையோடு பரிசீலிக்கிறார்கள். அப்படி இந்த மருத்துவமனையிலே, Nursing school

[2007 ஏப்ரல் 13

ஆரம்பிப்பதற்கு வேண்டிய கருத்துருக்களை, எதிர்காலத்திலே நிதிநிலைமைக்கேற்றாற்போல அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 நாட்களாக நான் கேள்வி கேட்க முயற்சி செய்துகொண்டிருந்தேன். இப்போது வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இதெல்லாம் வேண்டியதில்லை.

**திரு. அருள் அன்பரசு:** சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, காவேரிப்பாக்கத்தில் ஒரு பொது நல மருத்துவமனை வேண்டுமென்பது, தொகுதி மக்களின் நீண்ட நாளையக் கோரிக்கையாகும். இங்கு ஏற்கெனவே ஒரு துணைச் சுகாதார மையம் இருந்தாலும், மருத்துவ உபகரணங்களோ அல்லது உயிர் காக்கும் மருந்துகளோ சரியாக இல்லை. இதனால் தேசிய நெடுஞ்சாலையில் ஒரு விபத்து ஏற்பட்டால், 40 கி.மீ. தொலைவிலுள்ள அடுக்கம்பாறைக்கோ அல்லது வேலூருக்கோ, அங்குள்ள அரசு பொது மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. தூரம் அதிகமாக உள்ள காரணத்தால், உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கமுடியாமல், பலர் உயிர் இழக்கும் அபாயம் ஏற்படுகின்றது. இதைக் கருத்தில்கொண்டு, எங்கள் சோளிங்கர் தொகுதி மக்கள் தமிழக அரசின்மேல் வைத்துள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையை நிறைவேற்ற, அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கேற்றாற்போல அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் தொடங்குவதற்கு, Indian Nursing Council-ல், 5 ஏக்கர் நிலம் இருந்தால் போதும் என்ற நிபந்தனை இருந்தாலும், நம்முடைய தமிழக Nursing



2007 ஏப்ரல் 13]

Council-ல், city என்றால் 10 ஏக்கர் என்றும், semi-rural என்றால் 20 ஏக்கர் என்றும், rural என்றால் 30 ஏக்கர் என்றும் இருக்கிறது. தமிழகமெங்கும் நிலவும் நிலத்தின் விலையைக் கருத்தில்கொண்டு, இதைக் குறைக்க இந்த அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேபோல, தனியார் செவிலியர் பயிற்சிக் கல்லூரிகளில் உள்ள மாணவிகளுக்கான clinics-க்கு இப்போது நீங்கள் சொன்னீர்கள்; தாலுகா மருத்துவமனையில் 150 beds இருக்கவேண்டும் என்று. அதை இந்தக் clinics-க்கு, D.M.E. side-ல் உள்ள மருத்துவக் கல்லூரிகளைத் தருவதற்கு இந்த அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல, கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. பொதுவாக, நாம் tie-up கொடுப்பது, Medical College Hospital-ல் tie-up கொடுப்பதில்லை. அரசு மருத்துவனையிலே மட்டும் வழங்குகிறோமேயொழிய, Medical College-க்குக் கொடுப்பதில்லை. ஆகவே, Medical College-ல் கொடுத்தால், கொஞ்சம் குழப்பம் வரும் என்று சொல்லி, அதை ஒதுக்கி வைத்திருக்கிறோம். எங்கே, தகுதிவாய்ந்தவர்கள் கேட்கிறார்களோ, அந்த அரசு மருத்துவமனைகளை நாங்கள் tie-up கொடுக்கவிருக்கிறோம். நீங்கள் சொன்ன கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் படித்து முடித்தவர்களுக்கு மட்டுமே அரசுப் பணி என்பது கடந்த காலத்திலே வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. 2,000 பேர்களுக்கான தேர்விலேகூட, அரசு பயிற்சிக் கல்லூரியில் படித்து முடித்த செவிலியர்களுக்குத்தான், அத்தகைய பணி என்பது வழங்கப்பட்டது. இதுவரை, தனியார் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சியை முடித்திருக்கக்கூடிய செவிலியர்கள், அரசு சார்பான பணிக்குத் தேர்வு செய்யப்படவில்லை.

[2007 ஏப்ரல் 13

எதிர்காலத்தில் அவர்களுக்கும் முன்னுரிமை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக வழக்கு உயர் நீதிமன்றத்திலே இருக்கிறது. அரசுக் கல்லூரிகளிலே படித்து வருகிற குழந்தைகள், நாங்கள் stipend வாங்கி, உங்களிடம் படிக்கிறோம்; Merit students ஆகிய எங்களுக்குத்தான் தரவேண்டும் என்று சொல்லி அவர்களும் வழக்குக்குப் போயிருக்கிறார்கள். அதேபோல, தனியார் நடத்துகிற Nursing College-ல் படிக்கிற குழந்தைகள், நாங்களும் அரசு அங்கீகாரம் செய்த கல்லூரிகளில்தானே படித்திருக்கிறோம் என்று சொல்லி, இரண்டு பேருமே, உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். வழக்கு முடிவாகிற நேரத்தில், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அரசு மருத்துவமனை, கிராமப் பகுதி மக்களின் ஆதரவு பெற்ற மருத்துவமனை. குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சையிலே மாநிலத்திலே முதலிடத்தில் இருக்கின்ற மருத்துவமனை. அங்கே செவிலியர்கள் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால், பல மாவட்ட மருத்துவமனைகளிலே தொடங்கியிருப்பதைப்போல, திருவண்ணாமலையிலே ஒரு செவிலியர் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய nursing school ஆரம்பிக்கிற நேரத்திலே இந்தக் கருத்துரு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 13]

**58—**

### தேர்வு மையம்

***20868—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, சத்தியமங்கலம் மேல்நிலைப் பள்ளியில் தேர்வு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேல்மலையனூர் தொகுதி, சத்தியமங்கலம் மேல்நிலைப் பள்ளியில் தேர்வு மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், எனது மேல்மலையனூர் தொகுதிக்குட்பட்ட சத்தியமங்கலம் மேல்நிலைப் பள்ளி, அதைச் சுற்றியிருக்கிற மாணவர்கள் ஏறக்குறைய கடந்த ஆண்டிலே 139 மாணவர்கள் அங்கே +2 தேர்வினை பக்கத்தில் இருக்கிற, 15 கிலோ மீட்டர் தூரம் இருக்கிற ஆலம்பூண்டிக்குச் சென்று தேர்வு எழுதினார்கள். எனவே, அந்தப் பகுதி மாணவர்கள் 15 கிலோ மீட்டர் தூரம் சைக்கிள்களிலும், பேருந்து இல்லாத நிலையிலும் சென்று தேர்வு எழுதுவது அவர்களுக்கு பெரிய மன உளைச்சலை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. எனவே, சிறப்புக்கூறுகள் அடிப்படையிலே வரும் கல்வி ஆண்டிலாவது அங்கே தேர்வு மையம் அமைத்துத் தர அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய தேர்வு மையங்கள் அமைப்பதற்கு சில விதிமுறைகள் அரசினால் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே

குறைந்தபட்சம் 150 மாணவர்கள் அந்தப் பள்ளியிலே பயில வேண்டும்; தேர்வினை எழுதிட வேண்டுமென்றும் இருக்கிறது. இந்தத் தேர்வு மையத்தைப் பொறுத்தமட்டிலே, அருகே இருக்கக்கூடிய ஆலம்பூண்டியிலே இந்த மாணவர்கள் தேர்வினை எழுதி வருகிறார்கள். இந்த ஆண்டில்தான் முதல் முறையாக +2 தேர்விலே அந்தப் பள்ளியிலிருந்து மாணவர்கள் முதல் முறையாகத் தேர்வு எழுதியிருக்கிறார்கள். எனவே, வரக்கூடிய கல்வி ஆண்டிலே இங்கே தேர்வு மையம் அமைப்பதற்கு முறையான கருத்துருக்கள் அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டால், உரிய நடவடிக்கையை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் ஏறக்குறைய 141 மாணவர்களும், அதேபோன்று அதற்குப் பக்கத்தில் இருக்கிற நல்லான்பிள்ளைபெற்றாள் என்கிற ஊரிலிருக்கிற பள்ளியிலிருந்து 100 மாணவர்களும் சேர்ந்து அதே பள்ளியில்தான் தேர்வு எழுதவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் பார்த்தால் ஏறக்குறைய 241 மாணவர்கள் இந்த ஆண்டிலே +2 தேர்வு எழுத வேண்டிய ஒரு நிலை இருக்கிற காரணத்தினால், சிறப்புக்கூறுகள் அடிப்படையில் அங்கே தேர்வு மையம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று தமிழகம் முழுவதிலும் இதுபோன்று தேர்வு மையத்திற்கு விண்ணப்பித்திருக்கிற அனைத்துப் பள்ளிகளுக்கும் இந்த ஆண்டிலே தேர்வு மையம் அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் பள்ளி, மற்ற பள்ளிகளிலிருந்து சென்று ஆலம்பூண்டியிலே இப்போது தேர்வு எழுதிக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய பள்ளிகளையெல்லாம் சேர்த்து 315 பேர் இந்த ஆண்டு தேர்வினை எழுதியிருக்கிறார்கள். அங்கே போதுமான இடவசதி இருக்கிறது. எனவே, வரக்கூடிய கல்வியாண்டிலே, நான் ஏற்கெனவே





தெரிவித்ததைப்போல தூரங்கள் மற்றும் சிறப்புக்கூறுகளின் சாத்தியங்களின் அடிப்படையில் ஒரு புதிய தேர்வு மையம் அமைப்பதற்கு முறையான முன்மொழிவுகள் பெறப்படுமென்று சொன்னால் அரசு பரிசீலிக்க முடியும்.

இன்னொன்றையும் சொன்னார்கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துப் பள்ளிகளிலுமே அந்தமாதிரி தேர்வு மையங்கள் அமைக்கப்படுமா என்று கேட்டார்கள். அனைத்துப் பள்ளிகளிலும் அமைக்க முடியாது. ஏனென்றால் எல்லாப் பள்ளிகளிலும் அமைப்பது என்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை. முக்கியமான காரணம், ஒவ்வொரு பள்ளியிலும் அமைக்கின்றபோது தேர்வு மையங்கள் எல்லாமே copying centres ஆக மாறிவிடக்கூடாது. அதற்காகத்தான் இப்போது ஒவ்வொரு பள்ளியிலுமேகூட clubbing schools என்ற முறையிலே இன்னொரு பள்ளியையும் சேர்த்து வைத்திருக்கிறோம். எனவே, முக்கியமாக தேர்வுத் துறையிலே அத்தகைய நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய காரணத்தால் எல்லாப் பள்ளிகளையுமே தேர்வு மையங்களாக அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் நிச்சயமாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியிலே அமைந்திருக்கின்ற ஆதமங்கலம்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 300-க்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலரும் படிக்கின்ற அரசு மேல்நிலைப் பள்ளியில் வருகின்ற ஆண்டில் தேர்வு மையம் அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, ஒரு பள்ளியிலே 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தேர்வு எழுதக்கூடிய சூழ்நிலை இருக்குமென்று சொன்னால் நிச்சயமாக வரக்கூடிய கல்வியாண்டிலே அரசு அதைப் பரிசீலித்து ஆவன செய்வதற்கு முயற்சிக்கும்.

[2007 ஏப்ரல் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கபிலர்மலை தொகுதியிலே, கபிலர்மலை உயர்நிலைப் பள்ளியிலே, 398 குழந்தைகள் மொத்தமாகப் படிக்கிறார்கள். அதிலே 10-ஆவது வகுப்பு படிப்பவர்கள் மொத்தம் 65 பேர். இந்த கபிலர்மலை உயர்நிலைப் பள்ளியைச் சுற்றி ஏழு கிலோமீட்டர் தூரமுள்ள, அது பரமத்தியிலே இருந்தாலும் சரி, அல்லது பாண்டமங்கலத்திலே இருந்தாலும் சரி, அல்லது ஜேடர்பாளையத்திலே இருந்தாலும் சரி, மேல்நிலைப் பள்ளிக்குச் சென்றுதான் +1 வகுப்பைத் தொடர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மேலும், அந்தப் பகுதிக்கு பஸ் வசதி இல்லை. குழந்தைகள் அங்கிருந்து சைக்கிளிலேதான் செல்லவேண்டும் என்ற சூழ்நிலை இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியிலே இருக்கின்ற கபிலர்மலை உயர்நிலைப் பள்ளியை இந்த ஆண்டு தரத்தை உயர்த்தி, மேல்நிலைப் பள்ளியாக ஆக்க அரசின் பரிசீலனையில் இருக்கிறதா அல்லது இன்று காலையிலே செய்தித்தாளில் படித்ததைப்போல மாண்புமிகு முதல்வர் அவர்கள் 80 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணையிட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையிலே....

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர், மூல வினா தேர்வு மையம் பற்றியது. நீங்கள் பள்ளிக்கூடம் பற்றிக் கேட்கிறீர்கள். சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லுங்கள்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** கபிலர்மலை உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 80 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி அறிவித்து அதற்கு நேற்று அரசு ஆணையும் வெளியிட்டிருக்கிறார்கள். எனவே, அத்தகைய பள்ளிகளைத் தரம்



2007 ஏப்ரல் 13]

உயர்த்துகிறபோது முறையான முன்மொழிவுகள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களிடத்திலிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும். அப்படி அவை அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளக்கூடிய பட்டியலிலே அவர் குறிப்பிடக்கூடிய அந்தப் பள்ளியையும் எடுத்துக்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**59—**

## ஆற்றுப் பாலம்

***11866—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதி, காலையாறு சாலையில் முண்டன்துறை பகுதியில் புதிய ஆற்றுப்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதியில், அம்பை, பாபநாசம், காலையாறு செல்லும் சாலையில் உயர்மட்டப் பாலம் கட்டுவதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். உயர்மட்டப் பாலம் கட்டுவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும், இந்தப் பணியை எடுத்துச் செய்வதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வரவில்லை. மற்ற பகுதிகளிலே பாலங்களைக் கட்டுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வராததற்குக் காரணம் இருக்கிறது. அதேநேரத்தில், இது வனப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், வன விலங்குகள் இருக்கும் என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கும்போல் தெரிகிறது. இருந்தாலும் அடுத்த மாதம், அதாவது மே மாதம் இரண்டாவது வாரத்திற்குள் மீண்டும் ஒரு முறை இதற்காக ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்பட்டு, அதிலேயும் ஒப்பந்தக்காரர்கள் செய்ய முன்வரவில்லை என்று சொன்னால் நிச்சயமாக துறையே நேரடியாக இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும். மாமன்ற உறுப்பினர்கள் கேட்டு

திட்டங்களைப் பெறக்கூடிய இந்த மாமன்றத்தை நடத்திக்கொடுக்கின்ற தங்கள் தொகுதியிலா, இந்தப் பாலம் கட்டுவதற்கு அரசு தயங்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, நிச்சயமாக அந்தப் பாலம் கட்டுவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் செய்யுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** விளாத்திகுளம் தொகுதியில் மழைக் காலங்களில் வெள்ளம் ஏற்படும்போதெல்லாம் வைப்பாற்றிலே வெள்ளம் ஏற்படும்போதெல்லாம் விளாத்திகுளம் நகரம் தீவுபோல மாறிவிடுகிறது. எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே எட்டு கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அங்கே மேம்பாலம் கட்டுவதற்கான திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆகையால், வெள்ளம் ஏற்படும்போதெல்லாம் பக்கத்து கிராமங்களில் இருந்து படிக்கின்ற அத்துணை குழந்தைகளும் பள்ளிகளுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையையும், பயணிகள் கிராமங்களுக்குச் செல்லமுடியாத சூழ்நிலையையும் தவிர்க்கும்பொருட்டு, எங்கள் அம்மா ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்ட அந்தப் பாலத்திற்கான திட்டப் பணியை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியை தனிக் கேள்வியாக இல்லாமல், துணைக் கேள்வியாக எழுப்பியிருக்கின்றார். தனிக் கேள்வியாக எழுப்பினால் நிச்சயமாகப் பதில் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியில், தேன்கனிக்கோட்டை வழியாக ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்திற்குச் செல்கின்ற நெடுஞ்சாலையில், அஞ்சட்டி நாட்ராபாளையம்



இடையிலே காட்டாறு தரைமட்டப் பாலம் அமைந்துள்ளது. அங்கே கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, மழைக் காலங்களிலே ஏற்பட்ட வெள்ளத்தில் இரண்டு நபர்களும், இருபது கால்நடைகளும் அந்த ஆற்றிலே அடித்துச் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டது. ஆகவே, ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்திற்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கான வாகனங்களிலே, பல்லாயிரக்கணக்கான மக்கள் வருவதால், அந்த ஆற்றிலே புதிய பாலம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினருடைய கோரிக்கை இந்த நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை நகர் மையப் பகுதியில் ஒரு இரயில்வே லைன் செல்வதால் நகரத்தினுடைய இருபுறங்களிலும் இருக்கிற மக்கள் காலையிலும், மாலையிலும் செல்வதற்கு மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே, அந்த இடத்தில் இரயில்வே மேம்பாலம் ஒன்று அமைத்துத் தரப்படுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இரயில்வே கடவில் மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அந்த வழியாகச் செல்லக்கூடிய இரயில்களின் எண்ணிக்கையையும், அந்தச் சாலையில் செல்லக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கையையும் பெருக்கினால், 24 மணி நேரத்தில் ஒரு இலட்சம் T.V. Unit, அதாவது, Train Vehicle Unit வரவேண்டும். அந்த அடிப்படையில் வந்தால்தான், நம்முடைய இரயில்வே துறையும் அதற்கு அனுமதி தருகிறது. அந்தச் சாலை நெடுஞ்சாலைத் துறைக்குச் சம்பந்தப்பட்ட சாலையாக இருந்தால், அந்தப் பணியை நெடுஞ்சாலைத் துறை செய்யும். எனவே, அந்த அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடம்,

அந்த விதிமுறைகளுக்கு ஒத்துவந்தால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**60—**

**கால்நடை மருத்துவமனை**

***11595—திருமதி எஸ். தேன்மொழி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, எஸ். தும்மலப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த எஸ். தும்மலப்பட்டி கிராமத்தில் புதியதாகக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்குச் சிகிச்சை தேவைப்பட்டால் எஸ். தும்மலப்பட்டியிலிருந்து 6 கிலோமீட்டர் தூரத்திலுள்ள நிலக்கோட்டைக்குத்தான் செல்லவேண்டும். எஸ். தும்மலப்பட்டியைச் சுற்றி, வடக்கு விராலிப்பட்டி, தெற்கு விராலிப்பட்டி, பெருமாள்கோவில்பட்டி, சீத்தாபுரம், சேவுகன்பட்டி, சின்னமநாயக்கன்கோட்டை ஆகிய கிராமங்கள் உள்ளன. இங்குள்ள கால்நடைகள் அனைத்தும் சிகிச்சைக்காக நிலக்கோட்டைக்குத்தான் வரவேண்டும். எனவே, எஸ். தும்மலப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதி, எஸ். தும்மலப்பட்டி கிராமத்திற்கு அருகில், ஒரு கிலோமீட்டர் தூரத்தில் நிலக்கோட்டை கால்நடை மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமல்ல, மேற்படி எஸ். தும்மலப்பட்டி கிராமத்தில் கிட்டத்தட்ட 4,200 கால்நடைகள்தான் உள்ளன. அதாவது, பசுவினம், எருமையினம், செம்மறியாடு, வெள்ளாடு உள்ளிட்ட 4,200 கால்நடைகள்தான் உள்ளன. ஆதலால், அருகில் செயல்படும் கால்நடை மருத்துவமனையின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாக இருப்பதால், புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்சமயம் வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிலோமீட்டர் தூரத்தில் கால்நடை மருத்துவமனை இல்லை. பொதுமக்கள் நலன் கருதி, அவசியமாக, கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளின் எண்ணிக்கை பத்தாயிரத்திற்குமேல் இருந்தால், முதற்கட்டமாக கால்நடை மருந்தகங்களை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது, 10 கால்நடை மருந்தகங்களையும், 30 கிளை நிலையங்களையும் அமைக்க அனுமதியளித்தார்கள். அதனால், கால்நடைகளின் எண்ணிக்கை பத்தாயிரத்திற்கு மேல் இருந்தால்தான், அந்தப் பகுதியிலே கால்நடை மருந்தகம் அமைக்க இயலும். அதனால், கால்நடை மருந்தகம் அமைக்க தற்சமயம் வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள். (குறுக்கீடு) திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பரதராமி பகுதி, மலை சார்ந்த பகுதி. அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று ஏற்கெனவே கேட்டிருந்தேன். சாத்தியமில்லை என்று கூறினார்கள். இருந்தாலும், நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான ஏற்பாட்டினை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வாகனம் வாங்கித் தருவதாகவும், நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்றும் ஏற்கெனவே கோரிக்கை வைத்துள்ளார்கள். நிச்சயமாக இந்த நிதியாண்டில் அன்னாரது கோரிக்கையை இவ்வரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### விவசாயிகள் உரிய காலத்தில் கரும்பை சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்ப முடியாத நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லாம் கேட்கப்படும். பேரவை விதி 56-ன்கீழ், தமிழகத்தில் சில மாவட்டங்களில் கரும்பை சர்க்கரை ஆலைகளுக்கு உரிய காலத்தில் அனுப்ப முடியாமல் ஏற்பட்டுள்ள நிலை குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆர்.கே. பாரதி மோகன், கோ. அரி, கு. பாண்டுரங்கன் மற்றும் இரா. துரைக்கண்ணு ஆகியோரும், அதேபோன்று, இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின்





சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சு. சிவராஜ் மற்றும் சி. ஞானசேகரன் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஜி.கே. மணி மற்றும் தி. வேல்முருகன் ஆகியோரும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாகப் பேசலாம். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், முதலில் அ.இ.அ.தி.மு.க சார்பாக, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

*முற்பகல் 10-30*

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவிடைமருதூர் தொகுதியில், கோட்டூர் அம்பிகா சர்க்கரை ஆலையை நம்பி, சுமார் 6,500 விவசாயிகள், 20 ஆயிரம் ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்துள்ளார்கள். கரும்பு விவசாயிகளிடம், இந்த வருடம் ஆலையின் அரைவைத் திறன் 4,000 டன் என்று சொன்னார்கள். தற்போது, 2,500-லிருந்து 2,800 டன் கரும்பு மட்டுமே அரைக்கப்படுகிறது. இதுவரை சுமார் 2 இலட்சம் டன் கரும்பு மட்டுமே அரைவை செய்யப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். மேலும், 5 இலட்சம் டன் அரைவை செய்யவேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. 14, 15 மாதங்கள் ஆகியும், கரும்பு காய்ந்து தட்டையாகப்போகிறது. அருகிலுள்ள அவர்களின் சர்க்கரை ஆலையான திருமண்டங்குடி, ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு அனுப்ப அனுமதி கேட்டால், அதையும் அளிக்க மறுக்கிறார்கள். காவிரி டெல்டா பகுதியில் மே மாதத்திற்கு கரும்பு வெட்டப்பட்டு வெளியில் வரவேண்டும். கரும்பு வயல்களில் பாசனத்திற்குத் தண்ணீர் வந்துவிட்டால், விவசாயிகள் சிரமத்திற்குள்ளாவார்கள். தற்பொழுது குருங்குளம் அண்ணா சர்க்கரை ஆலையிலிருந்து நாளொன்றுக்கு 500 முதல் 1000 டன் வரை திருமண்டங்குடி ஆலைக்கு அனுப்பப்படுவதாக நாளேடு செய்தியில் வந்துள்ளது. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க முயற்சிகளை எடுத்துள்ள இந்த அரசு, எங்களுடைய விவசாயிகளையும் கவனத்தில் கொண்டு, உடனடியாக ஆணையாளர் மற்றும் தஞ்சாவூர் ஆட்சியர்--திரு ஆரூரான் ஆலை, பெண்ணாடம் ஆலை, அவர்களின் சித்தூர் ஆலைக்கு எட்டு மண்டலப் பகுதிகள் உள்ளன. எட்டு மண்டலப் பகுதிகளிலுள்ள பாப்பாக்குடி, டி. பழூர் இரண்டு டிவிஷன் கரும்புகளையும் பெண்ணாடம், சித்தூர் ஆலைகளுக்கு அனுப்ப வேண்டும். இல்லையென்றால் இந்தக் கரும்பு விவசாயிகள் மிகவும்

பாதிப்புக்குள்ளாவார்கள். பலமுறை கேட்டும், அந்தத் தனியார் ஆலை நிர்வாகிகள் விவசாயிகளின் நிலைபற்றிக் கண்டுகொள்வதே இல்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், விவசாயிகளின் அவலத்தைப் போக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய விழுப்புரம் மாவட்டத்திலே மட்டும் நான்கு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. குறிப்பாக, செங்கல்வராயன் சர்க்கரை ஆலை இந்த ஆண்டு ஒரு 6¼ இலட்சம் டன் கரும்பு பிழிவதற்கு அவர்கள் திட்டமிட்டிருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் பதிவு செய்துள்ள கரும்போ 8½ இலட்சம்.

அதைப்போல, மற்ற ஆலைகளிலேயும் அவர்கள் தேவைக்கு அதிகமாகப் பதிவு செய்து, இப்போது அந்தக் கரும்புகள் எல்லாம் எடுப்பதற்கு பல நாட்கள் ஆகின்றன. அதைப்போல பதிவு செய்யாத கரும்புகளும் இருக்கின்றன. அதைத் தனியார் ஆலைகள் மிகக் குறைந்த விலைக்குக் கேட்கின்ற காரணத்தினாலே, குறிப்பாக ஒரு டன் 100 ரூபாய்க்கும் குறைவாகவே கேட்கின்ற காரணத்தினாலே விவசாயிகள் தங்கள் கரும்பு வயல்களைத் தீயிட்டுக் கொளுத்தக்கூடிய அளவிற்கு எங்களுடைய மாவட்டத்திலே நிலைமை மிகவும் தீவிரமாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இதற்கு ஒரு தீர்வு காண்கின்றவகையில் கரும்பு ஆலைகளை இன்னும் திட்டமிட்ட காலத்திற்கு மேலாக நீடித்து, அந்த ஆலைகள் எல்லாக் கரும்பையும் அரைக்கின்றவகையிலே அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் அரசை உங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கரும்பு விவசாயிகளுக்கு மிகப் பெரிய சோதனை காலமாக ஏற்பட்டிருக்கிறது. கரும்பு பயிரிட்ட விவசாயிகள், அதனை வெட்டி, ஆலைகளுக்கு அனுப்ப முடியாமல் ஆலைகளிலேயும் அரைக்க முடியவில்லை என்று சொல்லியிருக்கக்கூடிய காரணத்தால், இன்று பல்வேறு



மாவட்டங்களிலே கரும்பைத் தீயிட்டு கொளுத்தக்கூடிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டம், விழுப்புரம், கடலூர், தஞ்சை, கிருஷ்ணகிரி போன்ற இன்னும் பல்வேறு மாவட்டங்களிலே இந்த நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அந்தக் காரணங்கள், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 25 விழுக்காடு கரும்பு கூடுதலாகப் பயிரிடப்பட்டிருக்கிறது. அப்படிக் கூடுதலாகப் பயிரிடப்பட்ட காரணத்தினால்தான் ஆலைகளிலே வெட்டியெடுத்து அரைவைக்கு எடுத்துக்கொள்ள முடியவில்லை. அப்படிக் கூடுதலாகப் பயிரிடுவதற்குக் காரணம், கடந்த ஆண்டு தனியார் ஆலைகளும், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளும் போட்டி போட்டுக்கொண்டு கரும்பை வாங்கினார்கள்.

கடந்த ஆண்டு மழை அதிகம். அதைப்போல, விலையும் கூடுதலாக இருந்தது. பதிவு செய்யப்பட்ட கரும்பையும் ஆலைகள் எடுத்துக்கொண்டன; பதிவு செய்யப்படாத கரும்பையும் எடுத்து அரைத்தார்கள். இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு இந்த ஆண்டும் எப்படியாவது கரும்பை எடுத்துக்கொள்வார்கள் என்று விவசாயிகள் நிறைய பயிரிட ஆரம்பித்தார்கள். அப்படிக் கூடுதலாகப் பயிரிட்ட காரணத்தினால்தான், இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந்த விவசாயிகள் தினமும் எங்களுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களைச் சந்தித்து, நீங்கள் எங்கள் பகுதிக்கு வந்து பாருங்கள், கரும்பு விவசாயிகள் நெருக்கடி கட்டத்திலே இருக்கிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்ல வேண்டுமென்று நீண்டநாட்கள் கேட்டுக்கொண்ட காரணத்தால், நேற்று திருக்கோவிலூர் பகுதிக்குச் சென்றார்கள். அங்கு சுமார் 8,000 கரும்பு விவசாயிகள் சூழ்ந்துகொண்டு 500-க்கு மேற்பட்ட மனுக்களையும் கொடுத்தனுப்பியிருக்கிறார்கள். அந்த மனுக்களை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறோம்.

கரும்பு விவசாயிகள் நெருக்கடியான கட்டத்திலேயிருந்து மீளவேண்டுமென்று சொன்னால், இப்பொழுது பதிவு செய்யப்படாத கரும்பையும் எடுத்து அரைப்பதற்கு வழி செய்யவேண்டும். பதிவு செய்யப்பட்ட கரும்பும் வேண்டாம் என்று மறுக்கப்படுகிறது. அதையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இதிலே அரசை நாங்கள் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, ஒரு நல்ல பேச்சுவார்த்தைக்கு

அழைக்கவேண்டும். மாவட்ட நிர்வாகத்தின்வாயிலாக தனியார் சர்க்கரை ஆலை, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலை நிர்வாகம், கரும்பு பயிரிட்ட விவசாயி இவர்களையெல்லாம் ஒன்றாக அழைத்துப் பேசி, அவரவர்களுக்கு இவ்வளவு பகுதியை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பிரித்துக் கொடுத்து, அதை உடனடியாக வெட்டி அரைப்பதற்கு ஆரம்பிக்கவேண்டும்.

*முற்பகல் 10-35*

இப்போது திருவண்ணாமலை மாவட்டத்திலேகூட, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் அழைத்துப் பேசி ஒரு நல்ல நிலையை உருவாக்கினார்கள். ஆனால், அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை. நடைமுறைப்படுத்தாத காரணத்தினாலே, விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

கடலூர் மாவட்டத்திலேகூட எங்களுடைய உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் பலமுறை அந்த ஆலைகளுக்குச் சென்று விவசாயிகளின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லியும்கூட, ஒரு தீர்வு ஏற்படவில்லை. ஆகவே, நாங்கள் அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, இப்படிப் பதிவு செய்யப்படாத கரும்பு பயிரிட்ட விவசாயிகள், சிறு குறு விவசாயிகள் 50 சென்ட், 1 ஏக்கர், 2 ஏக்கரில் இதைப் பயிரிட்டு, வெட்ட முடியாத காரணத்தினாலே அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. பதிவு செய்த விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகளால் கடன் கொடுக்கப்படுகிறது. பதிவு செய்யாத விவசாயிகளுக்கு வங்கிகளிலே கடன் மறுக்கப்படுகிறது. ஆகவே, தனியாரிடம் அவர்கள் கடன் பெற்றார்கள். இப்பொழுது கரும்பு வெட்டாத காரணத்தினால், அந்தக் கடனையும் திருப்பி அடைக்க முடியவில்லை. இந்த நெருக்கடியான சூழ்நிலை ஒரு பக்கம்.

அதேநேரத்தில் இப்போது கரும்பு ஆலைகள் நட்டத்திலே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்குப் பல காரணங்கள் சொன்னாலும்கூட, நட்டத்தைத் தவிர்ப்பதற்கு பல வழிகள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் கரும்பு என்று சொன்னால் சர்க்கரை மட்டும் தயாரிக்கப்படும் என்ற நிலை இருக்கிறது. ஆனால், பிற மாநிலங்களில் சர்க்கரை அல்லாமல், எத்தனால் தயாரிக்கப்படுகிறது; மின்சாரம் தயாரிக்கப்படுகிறது; எரிசாராயம் தயாரிக்கப்படுகிறது; காகிதம் தயாரிக்கப்படுகிறது. இப்படிப் பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. சர்க்கரை



உற்பத்தி ஓர் உப தொழிலாக இருக்கிறது. உப உற்பத்தியாக இருக்கிறது. ஆகவே, மற்றவற்றையும் உற்பத்தி செய்தால் அரசுக்கு அதிக வருமானம் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அரசு இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதேநேரத்தில் இப்போது இருக்கிற கூட்டுறவு, பொதுத் துறை ஆலைகள் பழைய இயந்திரங்களைக் கொண்டே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அரைவைத் திறன் குறைவாக இருக்கிறது. நவீன இயந்திரங்களைக் கொண்டு அரைத்தால் இன்னும் கூடுதலாக அரைவைத் திறனைப் பெருக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இதையெல்லாம் அரசு கவனத்திலேகொள்ள வேண்டும். இப்பொழுதுகூட, கரும்புச் சக்கைக்கு வெளியிலே 250 ரூபாய் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சுருக்கமாகச் சொல்லுங்கள்,

**திரு. ஜி.கே. மணி:** ஆனால், அரசு விற்பது வெறும் 25 ரூபாய், விவசாயச் சங்கம் சொல்கிறது. மொலாசஸ் 800 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இப்போது வெளியிலே கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலே, 250 ரூபாய்க்கு விற்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதைப்போல வியாபாரிகள் அங்கே சங்கம் வைத்துக்கொண்டு கூட்டாகச் சேர்ந்து இப்படி முட்டுக்கட்டையிடுகின்ற காரணத்தினாலே நமக்குக் கூடுதலான விலை கிடைப்பதில்லை. இதையெல்லாம் கவனத்தில்கொள்ள வேண்டும். பீகார், உத்திரப் பிரதேசம், அரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் கரும்புக்கு ரூ.1,300/-லிருந்து, ரூ.1,600/- வரையிலே விலை கொடுக்கிறார்கள். நம்முடைய விலை மிகக் குறைவாக இருக்கிறது. இதை ஒரு காரணமாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது உத்திரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களிலே அங்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதாவது கரும்பு வழங்கல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து (Sugarcane Supply and Régulation Act) முறைப்படுத்தி, கரும்பு விவசாயிகளைப் பாதுகாக்கக்கூடிய நிலையிலே இருக்கின்ற காரணத்தினால், அதையெல்லாம் பின்பற்றுவோமா இல்லையா என்று தெரியவில்லை. எப்படியாவது, பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டும். பதிவு செய்த கரும்பு, பதிவு செய்யப்படாத கரும்பு எல்லாவற்றையும் எடுத்துக்கொள்வதற்கு அரசு ஒரு நல்ல தீர்வினை உண்டாக்க வேண்டும் என்று சொல்லி அரசின் கவனத்திற்கு நான் இதைக் கொண்டு வருகின்றேன்.

[2007 ஏப்ரல் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கூட்டுறவு ஆலைகளும், பொதுத் துறை ஆலைகளும், தனியார் ஆலைகளும் இப்போது செயல்படுகின்றன. இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப்போல கூட்டுறவு, பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்யப்பட்ட கரும்புகள் முழுவதும் வருகின்ற ஜுலை மாதம்வரை அரைவை செய்யப்படும். இதில் கூட்டுறவுத் துறை, பொதுத் துறை ஆலைகள் முழுமையாகப் பதிவு செய்யப்பட்ட கரும்புகளை எடுத்து அரைவை செய்துவிட்டாலும், பதிவு செய்யாத மற்ற கரும்புகளை வைத்திருந்தாலும் அல்லது தனியார்களிடத்திலே பதிவு செய்யப்பட்டு ஆலைகளுக்குப் பதிவு செய்யப்பட்ட கரும்புகள் வந்து அரைவை செய்யாமல் இருந்தாலும் அந்தக் கரும்புகளையும் கூட்டுறவு, பொதுத் துறை ஆலைகளுக்கு நாம் அனுப்பி, அரைவை செய்யச் சொல்லி ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

முற்பகல் 10-40

இதிலே ஒன்று, இப்பொழுது கூட்டுறவு, பொதுத் துறை ஆலைகளில் பதிவு செய்யப்பட்ட கரும்புகளுக்குப் பிரச்சினையே இல்லை. ஆனால், பதிவு செய்யாமல் கரும்பு போட்ட விவசாயிகள் எங்கள் கரும்பையும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். இப்பொழுது அரசாங்கத்தின் சார்பிலே சர்க்கரைத் துறை என்ன சொல்கிறது என்றால், முதலிலே பதிவு செய்யப்பட்ட கரும்புகளை எடுத்து அரைவை செய்துவிட்டுத்தான் மற்றதைப் பார்க்க முடியும். பதிவு செய்யப்பட்ட கரும்புகளை எடுத்துக்கொள்ளாமல், பதிவு செய்யாத கரும்புகளை விவசாயிகளிடமிருந்து எடுத்து அரைவை செய்தால், அது ஒரு பெரிய பிரச்சினையாக வந்துவிடும். ஆகவேதான், பதிவு செய்தவற்றை முதலிலே எடுத்து அரைவை செய்து முடித்துவிட்ட ஆலைகள், பதிவு செய்யாத கரும்புகளை அல்லது தனியாரிடத்திலே பதிவு செய்த கரும்புகள் அதிக அளவிலே இருக்குமேயானால், அவற்றை எடுத்து அரைவை செய்யுங்கள் என்று சில ஆலைகளுக்குக்கூட--இப்பொழுது திருவண்ணாமலையிலேகூட, அந்தப் பகுதியிலே அருணாச்சலம் சர்க்கரை ஆலைப் பகுதியிலேயிருந்து 4, 5 ஆலைகளுக்கு நாம் கரும்புகளை அனுப்பி, அவற்றை எடுத்து அரைவை செய்யச் சொல்லியிருக்கின்றோம். அவர்கள் இப்பொழுது அரைவை செய்துகொண்டிருக்கின்றார்கள்.



2007 ஏப்ரல் 13] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

இதிலே இன்னொன்று, தனியார் நடத்தக்கூடிய ஆலைகளில் சில தவறுகள் நடக்கின்றன. அவை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. அந்தத் தனியார் ஆலைகள் பதிவு செய்யப்பட்ட கரும்புகளை அரைவைக்கு வெட்டி எடுத்துக்கொள்ளாமல், பதிவு செய்யாத கரும்புகள் இருக்குமானால், அவற்றைக் குறைந்த விலைக்கு வாங்கி, அரைவை செய்கின்ற ஒரு காரியத்திலே அவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். அப்படி எங்கெங்கே நடைபெறுகின்றது என்று அரசாங்கத்திற்குத் தகவல் வருகிறதோ, அந்த ஆலை நிர்வாகத்திற்கு சர்க்கரைத் துறை மூலம் கடுமையான எச்சரிக்கை விடப்பட்டு, அப்படி நீங்கள் செய்வீர்களேயானால் நாங்கள் நடவடிக்கை எடுப்போம்; உங்கள் ஆலைகளுக்குப் பதிவு செய்யப்பட்ட கரும்புகளைத்தான் முதலிலே நீங்கள் வெட்டி அரைவை செய்ய வேண்டுமென்று எச்சரிக்கையும் விடப்பட்டிருக்கின்றது. அப்படி இந்த நடவடிக்கையையும் மீறி யாராவது செய்வார்களேயானால், அது எங்களுடைய கவனத்திற்கு வருமானால், உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

இங்கே நம்முடைய திரு. கோ.க. மணி அவர்கள் சொன்னதைப்போல, அரைவை செய்யாத கரும்புகளையெல்லாம் இந்தப் பதிவு செய்யாத கரும்புகளையெல்லாம் எடுத்து, நீங்கள் அரைவை செய்ய வேண்டும் என்று இங்கே சொன்னார்கள். அது அவ்வளவு சாத்தியமே இல்லை. ஏனென்றால், capacity-க்கு மேலே இரண்டு பங்கு கூடுதலாக இந்த ஆண்டு கரும்பு உற்பத்தி ஆகி இருக்கின்றது. ஆகவே. கூட்டுறவுத் துறை, பொதுத் துறை ஆலைகளுக்கு எவ்வளவு கரும்பு தேவையோ, அந்தக் கரும்புக்கு பதிவு செய்ததிலேயே உற்பத்தி கூடுதல். பதிவு செய்த கரும்பிலேயே 25 சதவிகிதம், 30 சதவிகிதம் கூடுதலாக கரும்பு உற்பத்தி ஆகி இருக்கிறது. ஆகவே, அந்தக் கரும்பை, எந்தக் காரணத்தைக் கொண்டும் வெட்டாமல் விட்டுவிடக் கூடாது. ஜுலை மாதம் வரைக்கும் ஆலைகளுக்கு அரைவைக் காலம் இருக்கிறது என்றால், இன்னும் ஒரு மாதக் காலம் ஆனாலும் பரவாயில்லை, நீடித்து நீங்கள் அரைவை செய்ய வேண்டுமென்று இந்த அரசாங்கத்தின் சார்பிலே நாங்கள் சொல்லி இருக்கின்றோம். ஆகவே, எந்தவிதமான பிரச்சினையும் விவசாயிகளுக்கு ஏற்படாது. ஆகவே, பதிவு செய்யாத கரும்புகளுக்குத்தான் கொஞ்சம் பிரச்சினை இருக்கிறது. இருந்தாலும், நம்முடைய கூட்டுறவு, பொதுத் துறைகளிலே அரைவை

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2007 ஏப்ரல் 13

முடிந்துவிட்டால், அந்தக் கரும்புகளையும், அந்தந்தப் பகுதியிலேயுள்ள ஆலைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன். இந்த matter தானே சார்? இந்த matter தானே?

**திரு. மு. கண்ணப்பன்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. வேறு matter என்றால் உட்காருங்கள்.

## 3. தகவல் கோரல்

### (அ) அரியலூர் தொகுதி மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மின் தடை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, விதி 56-ன்கீழ் பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தொகுதி மற்றும் சிவகங்கை மாவட்டத்திலே ஏற்பட்டுள்ள மின் தட்டுப்பாடு காரணமாக மக்கள் மத்தியிலே ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. து. அமரமூர்த்தி, திரு. கரி. இராமசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. சு. சிவராஜ், திரு. அருள் அன்பரசு ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமாக அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து சுருக்கமாக ஒருவர் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தொகுதியிலே, அதேபோல (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன் நீங்களும் கொடுத்திருக்கிறீர்களா? குறிப்பாக இதுபற்றி இல்லை. பொதுவாக மின் தட்டுப்பாடு என்று சொல்லியிருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் பெயரையும் சேர்த்துக்கொள்வோம்.

*முற்பகல் 10-45*

**திரு. து. அமரமூர்த்தி:** சிவகங்கை மாவட்டத்திலும் பல நாட்களாக கடுமையான மின் தட்டுப்பாடு ஏற்பட்டு, விவசாயிகள் மிகவும்



2007 ஏப்ரல் 13] [திரு. து. அமரமூர்த்தி]

பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகள், தங்களது விவசாயப் பொருட்களை அரைவை செய்ய முடியாமல் மிகவும் அல்லலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதை சில சமூக விரோதிகளும், சில எதிர்க் கட்சிகளும் தவறாகத் திசைதிருப்ப முனைகிறார்கள். அங்கே ஒரு தனியார் சர்க்கரை ஆலை தற்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆலை 5 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதிலே தங்களுக்கு 2 மெகாவாட் எடுத்துக்கொண்டு 3 மெகாவாட்டை அரசாங்கத்திற்குக் கொடுக்கிறது. ஆனால், அங்கிருக்கின்ற சில சமூக விரோதிகள், தமிழக அரசு ஒட்டுமொத்த மின்சாரத்தையும் அந்தத் தனியார் சர்க்கரை ஆலைக்குக் கொடுத்து விட்டது," அதனால்தான் விவசாயிகளுக்கு மிகப் பெரிய மின் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று விவசாயிகளைத் திசைதிருப்ப முயற்சிக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், எங்கள் பகுதியிலே, திருமானூர், டிபழூர் பகுதிகளிலே டெல்டா விவசாயிகள் இருக்கிறார்கள். அந்த டெல்டா விவசாயிகளுக்குத் தடையில்லாச் சான்று வாங்குவதற்கு பொதுப் பணித் துறையிலே அனுமதி வாங்க வேண்டும். தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு அந்தத் தடையில்லாச் சான்று வாங்குவதற்கு வற்புறுத்தப்படுவதில்லை. ஆனால், குறிப்பாக, திருமானூர், ஜெயங்கொண்டம் விவசாயிகளுக்கு மட்டும், விவசாயிகள் புதிதாக மின் இணைப்புக் கோரினால், பொதுப் பணித் துறையிலே சென்று தடையில்லாச் சான்று வாங்க வேண்டுமென்று மின் துறையிலே வற்புறுத்துகிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், ஆண்டிமடம், அரியலூர் தொகுதிகளில் mines நிறைய இருக்கின்றன, சிமெண்ட் ஆலைகள் நிறைய இருக்கின்றன. அதனால் தண்ணீர் அதிக ஆழத்திலிருந்து எடுக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்குக் குறைந்த அளவு குதிரைத்திறன் கொண்ட மின் இணைப்புதான் கொடுக்கிறார்கள். அதை மாற்றி, அதிக அளவு குதிரைத்திறன் கொண்ட மின் இணைப்பு கொடுப்பதற்கும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொடர்ந்து மின்வெட்டு ஏற்பட்டுள்ளது.

அதன்காரணமாக, சீரான மின் விநியோகம் செய்யப்படவில்லை. ஒரு மணி நேரத்திற்குள் 2, 3 முறை மின் தடை ஏற்படுவதால், தொழில் உற்பத்தி பாதிக்கப்படுகின்றது, வேலைநிறுத்தம் ஏற்படுகின்றது. அதுபோல, விவசாயிகளும் சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். பொதுவாக, விவசாயிகள் இரவு நேரத்தில்தான் பயிர்களுக்குத் தண்ணீர் கட்டுவார்கள். மோட்டாரை இயக்கிவிட்டு, கடைமடைப்பகுதிக்குச் செல்வதற்குள் மூன்று முறை, நான்கு முறை மின்சாரம் நிறுத்தப்படுவதால், விவசாயிகள் சலிப்பும், களைப்பும் அடைகிறார்கள். சீரற்ற, ஒழுங்கற்ற, குறைந்த மின் அழுத்தம் கொண்ட மின்சாரம் வருவதால், மோட்டாருடைய காயிலும் தீய்ந்துப் போகிறது. 10 எச்.பி. மோட்டார், அதற்கு 8 கிலோ காயில் தேவை. ஒரு கிலோ 500 ரூபாய். அதற்கு கட்டுக்கூலி ஒரு கிலோ காயிலுக்கு 120 ரூபாய். ஆக, 10 எச்.பி. மோட்டார் காயில் தீய்ந்துப் போனால், 5,000 ரூபாய் வரைக்கும் விவசாயி செலவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார். சமீபத்தில் பத்திரிகையில் பார்த்தேன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள்; தமிழ்நாட்டில் மொத்த உற்பத்தி 10,100 மெகாவாட் மின்சாரம்; நமக்குத் தேவை 8,600 மெகாவாட் மின்சாரம்; 1,500 மெகாவாட் மின்சாரத்தை பஞ்சாப் மற்றும் மராட்டிய மாநிலங்களுக்கு 5 ரூபாய் 2 பைசாவிற்கு விற்கின்றோம் என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அறிவிக்கப்படாத இந்த மின்வெட்டைத் தளர்த்த வேண்டும். உண்மையிலேயே மின்சாரத் தட்டுப்பாடு இருந்தால் தெளிவாகச் சொல்லிவிடலாம். பகலில் இவ்வளவு மணி நேரம் நாம் . . . (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துவிடுகிறேன். அவ்வளவுதான், உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன், சப்ஜெக்ட்டை மாத்திரம் சொல்லுங்கள். கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No discussion. விஷயத்தை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பேசுகிறவர்கள் யாராக இருந்தாலும் எழுந்து நின்று பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசுகிறவர்கள் எழுந்து நின்று பேசுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஆகவே, பகலில் இத்தனை மணி நேரம் மின்சாரம் வழங்கப்படும், இரவில் இத்தனை மணி நேரம் மின்சாரம் வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விழைகின்றேன்.





*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அமரமூர்த்தி அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொல்லி, வேண்டுமென்றே, திட்டமிட்டு சில சமூக விரோதிகள், இந்த அரசாங்கத்தின்மீது தவறான பிரச்சாரத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பகுதியிலே 20 நிமிடங்கள் அல்லது 25 நிமிடங்கள் மின்சாரத் தடை ஏற்படுவது உண்மை. ஆனால், அங்கே உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தை, அவர்களுக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் விற்பதாகவும், அதனால்தான் அந்தப் பகுதிக்கு மின்சாரம் கிடைப்பதில்லை என்றும் ஒரு தவறான தகவலை, பிரச்சாரத்தை எதிர்க்கட்சிக்காரர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்தவுடன், விவரங்களைச் சேகரித்தபோது, கோத்தாரி சர்க்கரை ஆலை, அவர்களாகவே தங்களுக்குத் தேவையான* co-generation *மூலமாக, அவர்கள் சர்க்கரை உற்பத்தி செய்கின்ற நேரத்திலே வரக்கூடிய கோர்வையை வைத்துக்கொண்டு, மின்சாரம் தயாரிக்கின்றார்கள். 5 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்துவிட்டு, 2 மெகாவாட் மின்சாரத்தை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு, கூடுதலாக இருக்கக்கூடிய 3 மெகாவாட் மின்சாரத்தை மின்சார வாரியத்திற்கு அவர்கள் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது மின்சார வாரியம்* Kothari Sugar Mill-*க்கு மின்சாரம் விற்கின்றது என்று சொல்வது உண்மைக்கு மாறானது. எனவே, அப்படிப்பட்ட நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இருந்தாலும்கூட அந்தத் தடை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குரிய நடவடிக்கைகளைத்தான் நாங்கள் எடுத்து வருகின்றோம் என்று பலமுறை இங்கேயே சொல்லியிருக்கின்றேன்.*

*மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் பேசும்போது சொன்னார். அவர் சொன்னதுபோல், நான் பேசியது உண்மை. தமிழ்நாட்டிலே 10,100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகின்றது. நம்முடைய தேவை, 8,600 மெகாவாட். நமக்கு 1,500 மெகாவாட் மின்சாரம் உபரியாகத்தான் இருந்தது. அதை பஞ்சாப் மற்றும்*

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2007 ஏப்ரல் 13

மராட்டிய மாநிலங்களுக்கு 5 ரூபாய் 2 காசு என்று விற்றுக்கொண்டிருந்தோம். ஆனால், மார்ச் மாதம் 15 ஆம் தேதியிலிருந்து மே மாதம் 15 ஆம் தேதி வரையிலே, காற்றினுடைய வேகம் குறைவாக வீசுகின்ற காரணத்தினால், காற்றாலைமூலமாகக் கிடைத்துக்கொண்டிருந்த மின்சாரம் நமக்கு இப்போது கிடைப்பதில்லை. அதனாலே அந்த மாநிலங்களுக்கு விற்றுக் கொண்டிருந்த மின்சாரத்தை நிறுத்திவிட்டு, முழு மின்சாரத்தையும் நம்முடைய மாநிலத்திற்கேதான் நாம் பயன்படுத்துகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னார், அப்படிப் பயன்படுத்துகின்ற நேரத்திலே, இரவு நேரங்களிலேகூட தடை ஏற்படுகின்றது என்று. பகல் நேரத்திலே 20 நிமிடங்கள் அல்லது அரை மணி நேரம் தடை ஏற்படுமே தவிர, இரவு நேரத்திலே நிச்சயமாக தடையே ஏற்படாது. ஏனென்றால், தொழிற்சாலைகள் பெரும்பாலும், 100-க்கு 99 சதவிகித தொழிற்சாலைகள் பகலில்தான் இயங்குகின்றனவே தவிர, இரவிலே எந்தத் தொழிற்சாலையும் அதிகமாக இயங்குவதில்லை. எனவே, அப்படிப்பட்ட நேரத்திலே ஏராளமான விவசாயிகளுக்கு, இரவு நேரங்களில் 8 மணி நேரம் என்று அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திலே தண்ணீரைப் பாய்ச்சுகின்றார்கள். பகலிலே அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 6 மணி நேர மின்சாரத்திலேதான் சில குறைபாடுகள் இருக்கின்றன. அதையும் போக்குவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது.

### (ஆ) பண்ருட்டி தொகுதி, முந்திரிக் காட்டில் பெண் கொலை செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள அச்ச நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியை ஒட்டி, பல்வேறு கிராமங்களில் தற்போது முந்திரி விவசாயம் செய்கின்ற ஒரு காலப் பருவம். இந்தக் காலப் பருவத்திலே, முந்திரி அறுவடை செய்வதற்கு என்னுடைய தொகுதியிலே பல்வேறு பெண்கள் அந்த வேலையைச் செய்வதற்கு, முந்திரிக் காட்டுக்குச் சென்றபோது, லட்சுமி என்ற 25 வயதுப் பெண், கற்பழிக்கப்பட்டு, மர்மமான முறையிலே படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார். படுகொலை செய்யப்பட்ட அந்தப் பெண்ணின் உடலை, அவருடைய உறவினர்கள் கொண்டு வந்து, காடாம்புலியூர் சரகக் காவல் நிலைய வாசலில் வைத்து, குற்றவாளியைக் கைது செய்யவேண்டும் . . .



2007 ஏப்ரல் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், அதுபற்றி எனக்கு தகவல் எதுவும் வரவில்லை, கொஞ்சம் பொறுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) ஆய்விலே இருக்கிறது, உட்காருங்கள். தகவல் வரட்டும். தகவல் சேகரித்ததற்குப் பிறகு கேட்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) அறையிலே வந்து என்னிடம் சொல்லுங்கள். தகவல் வந்த பிறகு நான் சொல்கிறேன், உட்காருங்கள். உட்காருங்கள் வேல்முருகன்.

### (இ) நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டம்-தனி மின்பாதை அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், தாமிரபரணி, நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு, பல துணை மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் எடுக்கப்படுவதால், குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க, தனி மின்பாதை அமைப்பது குறித்தும், Generator பொருத்துவது குறித்தும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**•மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்ட நீரேற்று நிலையங்கள் அனைத்தும் களக்காடு, வள்ளியூர், ராதாபுரம், கோட்டை கருங்குளம், திசையன்விளை மற்றும் கறந்தநேரி ஆகிய 6 துணை மின் நிலையங்களிலிருந்து குடிநீருக்காக தனிப்பட்ட மின் பாதைகள்மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மொத்த நீளம் 65 கிலோமீட்டர் இருப்பதால், அதில் உள்ள 7 பிரதான நீரேற்று நிலையங்களுக்கும் ஒரே துணை மின் நிலையம் மூலம், ஒரே மின் பாதையில் மின்சாரம் வழங்குவதற்கு தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இல்லை. எனவேதான், அந்தந்தப் பிரதான நீரேற்று நிலையங்களுக்கு, அருகிலுள்ள, துணை மின் நிலையங்களிலிருந்து தனிப்பட்ட மின் பாதைகள்மூலம் தடையற்ற மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2007 ஏப்ரல் 13

மேலும், மாதாந்திர பராமரிப்பின்போது நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் வரும் மேற்கண்ட 6 துணை மின் நிலையங்களுக்குமே ஒரே நாளில் முன்னறிவிப்பு, பத்திரிகைகள்மூலமாகத் தெரிவித்து, ஒரே சமயத்தில்தான் மின் நிறுத்தம்-shut down செய்யப்பட்டு, பராமரிப்புப் பணிகள் மிகக் குறைந்த நேரத்தில் முடிக்கப்பட்டு, மீண்டும் மின் இணைப்பு வழங்கப்படுகிறது. இவ்வாறு பராமரிப்புப் பணிகள் செய்யப்படுவதால், மின் தடை ஏற்படுவது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் ஜெனரேட்டர் வசதி அமைத்துத் தருவது பற்றிக் கேட்டார்கள். ஜெனரேட்டர் வசதி அமைத்துத் தருவது உள்ளாட்சித் துறையைப் பொறுத்தது. எனவே, இந்த இலாகாவிற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன். (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5-4-2007 அன்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கண்ணப்பன் சார், கொஞ்சம் இருங்கள். அவர் ஏதோ கேட்க விரும்புகிறார். திரு. மு. அப்பாவு, சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நான்காவது முறையாகப் பொறுப்பேற்றபோது நாங்குநேரி-ராதாபுரம் பகுதியினுடைய வறண்ட அந்த மழைமறைவுப் பிரதேசத்திற்கு குடிநீருக்காக பத்தமடையிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு 43 கோடி ரூபாய் நிதியைத் தந்து எங்கள் தாகத்தைத் தீர்த்தார்கள். அந்தத் தண்ணீர் வருகின்ற பாதையில் 7 பிரதான மின் நீரேற்று மூலம் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. பலநேரங்களில் மின் தடை ஏற்படுவதை நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு ஆய்வுக்கு வந்தபோது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள், உள்ளாட்சித் துறை பிரதிநிதிகள், அதிகாரிகள் அனைவரையும் வைத்து ஆய்வு செய்தபோது, இந்தத் தனி மின் பாதையினுடைய அவசியத்தை



2007 ஏப்ரல் 13] [திரு. மு. அப்பாவு]

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிந்து அதற்காக நேற்றுகூட நம்முடைய உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே தமிழகத்திலுள்ள . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** தமிழ்நாட்டிலுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கெல்லாம், தனி மின் பாதை அமைப்பதாக கொள்கை முடிவு எடுத்து அறிவித்திருக்கின்றார்கள். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மேற்படி திட்டத்திற்கு தாமிரபரணி-நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மேம்பாட்டிற்காகவும், 17 கோடி ரூபாய் நிதியையும் தந்த நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கொள்கை முடிவின்படி இதை மறு பரிசீலனை செய்துதர வேண்டுமென்று கேட்டு, செய்து தருவார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

## (ஈ) உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.பி. கலைராஜன், பொள்ளாச்சி வி. ஜெயராமன், இரா. விசுவநாதன், சி.வி. சண்முகம் ஆகியோரை அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி வழங்க வேண்டுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

***திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் 5 ஆம் தேதியன்று சட்டமன்றத்தில் எழுந்த ஒரு பிரச்சினையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. வி.பி. கலைராஜன், திரு. சி.வி. சண்முகம், திரு. நத்தம் இரா. விசுவநாதன் ஆகியோர் இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் சபை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளக் கூடாது என்று தாங்கள் தீர்ப்பை வழங்கியிருக்கிறீர்கள். அந்தத் தீர்ப்பை அன்புகூர்ந்து பரிசீலனை செய்து மீண்டும் அவர்கள் சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பை அவர்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2007 ஏப்ரல் 13

### (ஆ) பண்ருட்டி தொகுதி, முந்திரிக் காட்டில் பெண் கொலை செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள அச்ச நிலை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டதைப்போல, இப்போது முந்திரி சீசன் என்கிற காரணத்தினாலே முந்திரி விவசாயத்தை நம்பி, முந்திரிக் காடுகளுக்கு முந்திரிக்கொட்டை பறிக்கப் போகின்ற அப்பாவிப் பெண்களை மர்மமான முறையில் ஒரு கும்பல் பல்வேறு பகுதிகளில் கற்பழித்துக் கொலைசெய்வது போன்ற ஒருசில நிகழ்வுகள் அங்கே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. அப்படிக் கொலை செய்யபபட்ட லட்சுமி என்பவருடைய உடலை அந்தப் பகுதி மக்கள் காடாம்புலியூர் காவல் நிலையத்தினுடைய வாசலிலே கொண்டுபோய் வைத்துவிட்டு குற்றவாளிகளைக் கைது செய்தால்தான் நாங்கள் பிணத்தை அடக்கம் செய்வோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அப்போது காவல துறை அதிகாரிகள் எனக்குத் தகவல் கொடுத்து, நான் அங்கு சென்று நம்முடைய சட்டப் பேரவை நடந்து கொண்டிருக்கிறது; நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நிச்சயம் நான் எடுத்துச்சென்று அந்த உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கிறேன்; நீங்கள் தயவுசெய்து பிணத்தைப் பெற்று அடக்கம் செய்யுங்கள் என்று வேண்டுகோள் வைத்தேன். அதனடிப்படையில் அவர்களும அடக்கம் செய்திருக்கிறார்கள். ஆனால், இத்தனை நாட்கள் ஆகியும் காவல் துறையினுடைய அந்தப் பகுதியினுடைய துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் இதற்கான எந்தவொரு தனிப்படையையும் அமைத்து குற்றவாளிகளைக் கைது செய்வதறகான நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தால் அந்தப் பகுதிகளினுடைய பெண்கள் எல்லாம் முந்திரிக் காடுகளுக்குச் சென்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Short-ஆகச் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** முந்திரிக் காடுகளுக்குச் சென்று தங்களுடைய தொழிலில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு அச்சத்திற்கு உள்ளாகியிருக்கிற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குக் கடுமையான நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்பதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



2007 ஏப்ரல் 13]

முற்பகல் *11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து அவையிலே எழுப்பிய பிறகுதான், எனக்கே தகவல் தெரிகிறது. ஆனால், இது தங்கள் அறையில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ள ஒரு செய்தி என்ற காரணத்தாலும், அவர்கள் இங்கே பேசிய பிறகு எனக்குத் தகவல விவரமாகக் கிடைத்த காரணத்தாலும், இதைப்பற்றி அங்கே விசாரித்து, காவல் துறையினர் இதுபற்றி என்ன கூறுகிறார்கள் என்பதையும், மாவட்ட ஆட்சித் தலைவர் இதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்தார் என்பதையும் விசாரித்து, அதற்கு மேல் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை நான் நிச்சயமாக எடுப்பேன். யாரும் அங்கே செல்ல முடியாத அளவிற்கு ஒரு பீதி இருப்பதாகச் சொன்னாாகள். எங்கே, யாரால் பீதி கிளப்பப்பட்டாலும் அதற்கெல்லாம் இந்த அரசும் பணியாது, அப்படி பீதி கிளப்பப்படுகின்ற நிலையில் பொதுமக்களும் இருக்க வேண்டாம். அவர்களும் துணிவோடு அந்தப் பகுதிககுச் சென்று தங்களுக்குச் சரியான பாதுகாப்பு இருக்கிறது என்பதை உணர்ந்து, பாதுகாப்பான ஒரு அரசிலேதான் வாழ்கிறோம் என்ற உணர்வோடு (மேசையைத் தட்டும் ஒலி)—வேல் முருகனே, முருகன் சாதாரணமாகக்கூட அல்ல, பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் வேலோடு இருக்கின்ற முருகன்—யாரும் பயப்படாமல் அங்கே செல்லலாம் என்று கூறி, இது கவனிக்கப்படும், நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (உ) சிதம்பரம் மாணவி சேட்னா தற்கொலை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே சேட்னா என்ற மாணவி தற்கொலை செய்துகொண்டார். அதற்குப் பொறுப்பான ஆசிரியர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. அது ஓரளவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் அறிகிறேன். ஆனாலும், தொடர்ந்து அந்த அண்ணாமலைப்

பல்கலைக்கழகத்திலே இப்படிப்பட்ட மரணங்கள் சம்பவித்துக் கொண்டே இருக்கின்றன. மாணவ, மாணவிகள் இறக்கின்ற சூழ்நிலைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிர்வாகம் என்பது ஓர் ஒளிவுமறைவற்ற நிர்வாகமாக இல்லை என்ற கருத்து பரவலாக வந்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக அந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் வருகிறபொழுது அதை மூடி மறைப்பதற்கான முயற்சியை அந்த நிர்வாகம் எப்படியாவது பயன்படுத்தி விடுகிறது. அதற்கு உடந்தையாக மற்றவர்களும் செயல்படுகிறார்கள் என்று தொடர் நடவடிக்கையாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இப்படிப்பட்ட மரணங்கள் மாணவ, மாணவிகளுக்கு ஏற்படாதவண்ணம் அவர்களைப் பாதுகாப்பதற்கான முயற்சியும், சேட்னாவினுடைய மரணத்திற்குக் காரணமாக இருந்தவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்குரிய முயற்சியையும் இந்த அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதே சப்ஜெக்ட்டிலே பேசுகிறீர்களா? இந்த சப்ஜெக்ட்தானா? (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) வேறு வேலை இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இந்தப் பிரச்சினையைக் கொடுத்து அன்றையதினம் நான் எழுப்பி ஓரிரு வார்த்தைகள் சொல்வதற்கான நேரத்தை எனக்கு நீங்கள் கொடுக்காமல் தடுத்து நிறுத்திவிட்டீர்கள். நானும் இதுசம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் தந்திருக்கிறேன். இந்த சேட்னாவினுடைய கொலையில் இருக்கின்ற பின்னணிகள் 2,900 எஸ்.எம்.எஸ். ஒரு பேராசிரியரால் அனுப்பப்பட்டு அந்தப் பெண் மன உளைச்சலுக்கு ஆளாகி, பாலியல் ரீதியான பாதிப்புக்குள்ளாகி அவர் இறந்திருக்கிறார். புகாரைக்கூட அவருடைய பெற்றோர்கள் அங்கு சென்று காவல் நிலையத்தில் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு நான் இந்த அவையில் கொண்டு வந்த பிறகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு உடனடியாக அங்கே ஒரு பேராசிரியர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இதற்குப் பின்னணியில் என்ன இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் த்லைவர் அவர்களும், காவல் துறை அதிகாரிகளும் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, அதற்குக் காரணமாக இருந்ததாகக் கருதப்படுகிற பேராசிரியர் அவர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அந்தத் தொடர்பு குறித்து மேலும் இங்கே விசாரணைகள், புலன் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது பல்கலைக்கழகம் மூடப்பட்டு, பிறகு ஒரு வாரத்திற்குப் பின்னால் பல்கலைக்கழகம் திறந்து நடைபெற்றுக் படிப்படியாக. ஆகவே, இந்தப் பிரச்சினை குறித்து அரசு உரிய கொண்டிருக்கிறது. அது ஒரு தனியார் பல்கலைக்கழகம். கவனம் செலுத்தி வருகிறது. அந்த மாவட்ட நிர்வாகம் அதற்குரிய இருந்தாலும்கூட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஈ) உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.பி. கலைராஜன், பொள்ளாச்சி வி. ஜெயராமன், இரா. விசுவநாதன், சி.வி. சண்முகம் ஆகியோரை அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி வழங்க வேண்டுதல்**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், என்ன சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் வலியுறுத்தியதைப்போல 5-4-2007-ல் நான்கு சட்டமன்ற உறுப்பினர்களை கூட்டத்தொடர் முடியும் வரையிலும் நீங்கள் நீக்கி வைத்திருக்கிறீர்கள். இந்தச் சட்டமன்றத்திலே ஒரு கூட்டத்தொடர் முடியும் வரையிலும் உறுப்பினர்கள் நீக்கப்படுவதும், அதை மீண்டும் 4, 5 நாட்கள் கழிந்ததற்குப் பிறகு மறுபரிசீலனை செய்வதும் நடைமுறையிலே இதுவரையிலும் இருந்திருக்கிறது. ஆகவே, அவர்களை இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் நீக்கப்பட்டவர்களை, மீண்டும் சட்டமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டு மக்கள் பணியாற்றுவதற்கு,

இன்றோ அல்லது திங்கட்கிழமையிலிருந்தோ பணியாற்றுவதற்கு நீங்கள் அழைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன், அன்றைக்கு நடந்த நிகழ்ச்சி; ஒரு சட்டமன்ற உறுப்பினர் செருப்பைக் கையில் எடுத்துக்கொண்டு இங்கே வந்தது போன்றது, அதே மாதிரி, (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பின்னாலே இருந்து இங்கே ஓடி வந்து கத்துவது, இந்த மாதிரி வேலையெல்லாம் இருந்தால் நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். இந்த மாதிரிச் சம்பவம் நடந்ததற்கு அவர்கள் வருத்தம் தெரிவித்தால், அதற்குப் பிறகுதான் அதை consider பண்ண முடியும்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுவரை அந்த மாதிரி கூட்டத்தொடர் முழுவதும் suspend செய்யப்பட்டதில்லை என்று சொல்கிறார். இங்கே நடைபெற்ற ஒரு காரணத்திற்காக, காவல் துறையே சென்று கைது செய்த நிகழ்வுகள் எல்லாம்கூட இந்தச் சட்டமன்றத்திலே நடைபெற்றிருக்கின்றன. பரிதி இளம்வழுதி அவர்கள் கூட்டத்தொடர் முழுவதுமாக நீக்கி வைக்கப்பட்டிருக்கிற நடவடிக்கையெல்லாம் நடைபெற்றிருக்கிறது. அப்போது செங்கோட்டையன் உறுப்பினராக இல்லை. இதைவிட மோசமான சூழ்நிலையையெல்லாம் நாங்கள் அனுபவித்துக்கொண்டுதான் இருந்திருந்தோம்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதை அமைச்சர் அவர்கள் மாற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கூட்டத்தொடர் முழுவதும் நீக்கி வைப்பதும், அதை மறுபரிசீலனை செய்வதும் நடைமுறையிலே இருந்திருக்கிறது என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மன்னிப்புக் கேட்க வேண்டுமென்ற நிலையிலே நீங்கள் செல்லக் கூடாது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறபோது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று சொல்லவில்லை, வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** வருத்தம்தான். வருத்தம், மன்னிப்பு எல்லாம் ஒன்றுதான். பிறகு, இதில் என்ன இருக்கிறது? ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த மன்றத்தின்வாயிலாக நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டத்தொடர் முழுவதும் உறுப்பினர்களை suspend செய்து வெளியே அனுப்புவது மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையனுக்குத் தெரியாததல்ல. எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நானும், ரகுமான்கானும் வேறு ஒருவரும், மூன்று பேரும் கிட்டத்தட்ட 12 நாட்கள் இந்தச் சபையிலிருந்து suspend செய்யப்பட்டு வெளியிலே மூவர் உலாவாக நாங்கள் சென்று வந்திருக்கிறோம். அது அவருக்குத் தெரியும். இது ஒருமுறை இரண்டு முறையல்ல. ஆனால், அப்போது ஒன்று. எங்களை suspend செய்தார்கள் என்பதற்காக எங்களுடைய கட்சியினர் முழுவதும் சட்டசபைக்கு வராமல் மானம் காத்தார்கள். அது தி.மு.க.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சட்டமன்றம் நடக்கின்ற காலங்களிலே, என்னைப் பற்றி பத்திரிகைகளில் செய்தி வருகின்றபோது, பரிதி இளம்வழுதி வெளியேற்றப்பட்டார், பரிதி இளம்வழுதி தூக்கியெறியப்பட்டார், பரிதி இளம்வழுதி அப்புறப்படுத்தப்பட்டார், இப்படி, பட்டார், பட்டார் என்றுதான் வந்ததே தவிர, பரிசீலனை செய்து, மறுபடியும் உள்ளே அழைத்துக்கொள்ளப்பட்டார் என்று வந்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் மகிழ்ச்சியாக சில வார்த்தைகளை இங்கே சொல்லி அளவளாவினார்கள். கடந்த ஐந்து

ஆண்டுக் காலம், அவர் எந்த அளவிற்குப் படம் எடுத்து ஆடினார் என்பதை நாங்கள் நன்றாகவே அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்று மாண்புமிகு அமைச்சர் ஆனதற்குப் பின்னால், மிகவும் பெட்டிப் பாம்பாக, அடங்கி ஒடுங்கி (மேசையைத் தட்டும் ஒலி) பொறுப்பாக நடந்துகொள்கின்றார். ஆனால், அவர் கடந்த ஐந்து ஆண்டுக் காலம் நடந்தவிதம் எங்களுக்கு நன்றாகவே தெரியும் என்பதை நான் இந்தச் சபைக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படம் எடுத்து ஆடியதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்த அளவுக்கு நீங்கள் மகுடி வாசித்ததால்தான் நாங்கள் ஆடினோம். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மகுடிக்கு அவர் படம் எடுத்து ஆடியது உண்மை என்பதை அவரே சொல்லிவிட்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்
### (ஆ) கோரிக்கை எண் 33 – சட்டத் துறை

---

### (அ) கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 3 - நீதி நிருவாகம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.226,12,54,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 107, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 170, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 296, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1011, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1144, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1332, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 202, திரு. டி. ஜெயக்குமார்

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1992, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெடடுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2016, திரு. ஆர். சின்னசாமி.



**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2673, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெடடுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1850, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3605, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெடடுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுககப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2486, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2855, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3801, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3920, திரு. கே.வீ. ராமநாதன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4068, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4373, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2920, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி திருச்செங்கோட்டில் புதிய சப்-கோர்ட் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 650, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிப் பகுதிகளிலும் ஏழை மக்களுக்குப் பயன்படும் வகையில் இலவச சட்ட உதவி முகாம்கள் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 895, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடியலில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1117, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதி, போளூரிலுள்ள நீதிமன்றக் கட்டடம் பழமையானது. இந்தக் கட்டடத்தைப் புதுப்பித்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1205, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் சப்-கோர்ட் தொடங்க அரசு அனுமதி அளித்தும், இதுவரையில் சப்-கோர்ட் செயல்படவில்லை. விரைவில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1285, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூரில் வழக்கறிஞர்கள் சங்கத்திற்கு நூலகக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1513, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல்லில் பெண்களுக்காக குடும்ப நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 461, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதிமன்றங்களில் உள்ள காலிப் பணியிடங்களை உடன் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 593, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிற நீதிமன்றங்களுக்கு அரசுமூலம் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 559, திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2091, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையில் உள்ள நீதிமன்றத்தில் இலவச சட்ட முகாம்களின் மூலம் தினந்தோறும் கிராம மக்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2264, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் விரைவு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 375, திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் நூலகங்கள் அமைத்து சட்டப் புத்தகங்கள் அனைத்தையும் இடம்பெறச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3498, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் உள்ள அனந்தபுரத்தில் அரசு சட்ட ஆலோசனை மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2401, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் சட்ட திட்டங்களை அறிந்துகொள்ளும் வகையில் அனைத்து நிலைகளிலும் உள்ள காவல் துறையினருக்கும் ஆண்டுதோறும் பயிற்சி கொடுப்பது குறித்தும் மற்றும் அவர்களுக்கு சட்ட திட்டங்களைப் பற்றித் தேர்வு நடத்தி பரிசோதிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2620, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு நடத்தும் இலவச சட்ட முகாம்களில் அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து மக்கள் குறை கேட்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3026, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசு இலவச சட்ட ஆலோசனை மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4910, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசின் சார்பில் நீதிமன்றங்களில் வாதாட அரசு நியமிக்கும் வழக்கறிஞர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3557, டாக்டர் க. நெடுஞ்செழியன்.



**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வழக்கறிஞர்கள் சங்கம் என்று ஒவ்வொரு நீதிமன்றத்திலும் வைத்துக்கொண்டு அந்த வழக்கறிஞர்களில் யாராவது ஒருவரின் தனிப்பட்ட நலனுக்காக நீதிமன்றத்தைப் புறக்கணிப்பது, நீதிமன்றத்தில் அவ்வழக்கறிஞருக்கு எதிராக யாரும் வழக்காடக் கூடாது என்ற நிலை எடுப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3262, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு அரசு நடத்தும் இலவச சட்டமுகாமில் அந்தந்தத் தொகுதி சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து மக்கள் குறை கேட்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4032, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்டந்தோறும் குடும்ப கோர்ட் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3691, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டத் துறையில் ஏற்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3866, திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளத்தில் உள்ள நீதிமன்றக் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ள கட்டடம், இடிந்து விழும் சூழ்நிலையில் உள்ளது. எனவே உடனடியாக புதிய நீதிமன்றக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4686, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதிமன்றத் தீர்ப்புகளைக் கண்டிப்பாகத் தமிழில் வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4534, திரு. சு.ப. வேலுமணி.



**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் உள்ள ஏழையெளிய மக்களுக்கு எளிதில் இலவச சட்ட உதவி கிடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5523, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகத்தில் நீதிமன்றத்திற்கான இடம் ஒதுக்கப்பட்டு, ஆனால் இன்றுவரை கட்டடப் பணிகள் தொடங்கப்படவில்லை. உடன் பணிகள் தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1471, திரு. இரா. இராம்பிரபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1718, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட காவேரிப்பாக்கத்தில் நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1773, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதியில் ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில் இலவச சட்ட உதவி மையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1959, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் நீதிமன்றங்களில் காலியாக உள்ள நீதிபதி பதவியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2087, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, பெருந்துறையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1634, திரு. ஆர்.டி. கணேசன்.



**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் பணி புரியும் அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1735, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதி, வானூரில் நீதித் துறைக் கட்டடம் அரசுக் கட்டடத்தில் இயங்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1342, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தொகுதி, ஓமலூரில் உள்ள நீதிமன்றத்தில் தாரமங்கலம் தொகுதி, சிவில் வழக்குகள் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1792, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் நகரத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4749, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் தனித்தனியே வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. பொது மக்கள் நலன் கருதி ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4859, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4972, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவைகுண்டம் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4208, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் நகர முன்சீப் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4311, திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2727, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரியலூர் தொகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3171, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வழக்கறிஞர்கள் எழுத்தர்கள் நலன் பாதுகாக்கப்பட இவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை உயர்த்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2456, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதித் துறையில் காலியாக உள்ள அனைத்துத் தட்டச்சர் பணியிடங்களையும் உடன் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3593, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, இலுப்பூரில் வட்டாட்சியர் அலுவலகம் செயல்படுமிடத்திலேயே நீதிமன்றம் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3666, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலத்தில் உயர் நீதிமன்றக் கிளை அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3657, திரு. எஸ் ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3153, திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4402, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி, நீதித் துறை நடுவர் நீதிமன்றக் கட்டடத்தை விஸ்தரிப்புச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும், நீதித் துறைப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4598, திருமதி மு. சந்திரா.



**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதியில் புதிதாக முன்சீப் கோர்ட் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3336, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவையில் உள்ள மாவட்ட நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3185, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் ஒரு புதிய குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4437, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி வளர்ந்து வரும் நகரமாக உள்ளதால் வழக்குகள் தேங்காமல் இருக்கவும், கோவில்பட்டி தொகுதி மக்கள் நலன் கருதியும் விரைவு நீதிமன்றம் புதிதாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3369, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் நகரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டித்தரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 746, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் இயங்கி வரும் நீதிமன்றங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1407, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவாக முடிக்க கூடுதலாக நீதிபதிகளை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2420, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்ட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4128, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி நகரில் இயங்கிவரும் நீதிமன்றங்களை ஒருங்கிணைத்திடும் வகையில், புதிய நீதிமன்ற வளாகம் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4116, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3353, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதித் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.226,12,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 33–சட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33, சட்டத் துறை - பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,23,34,000/- மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 171, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 300, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 907, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1147, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1339, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1727, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11158, திரு. து. அமரமூர்த்தி, இருக்கையில் இல்லை

வெட்டுத் தீர்மானம் எண் 1422, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4129, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1811, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3606, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1973, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2017, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழக்தண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கை பின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2392, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2873, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2953, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3494, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க,. நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3926, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4067, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4907, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1958, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டத்தில் சட்டக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1734, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியில் சட்டக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4436, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி பகுதியில் உள்ள மாணவ மாணவியர் பயன்பெறும்வகையில் கோவில்பட்டியில் அரசு சட்டக் கல்லூரி அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4535, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்திலுள்ள அரசு சட்டக் கல்லூரியில் காலியாகவுள்ள பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4229, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டப் புத்தகங்கள் அனைத்தும் தமிழாக்கம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4305, திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3361, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சட்டக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3261, திரு. த.அ. மேகநாதன்.



**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெங்களூரில் இருப்பது போன்று சென்னையிலும் தேசிய சட்டக் கல்லூரி ஆரம்பிக்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3029, திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 561, திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1787, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி நகரத்தில் அரசு சட்டக் கல்லூரி அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 357, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் அரசு சட்டக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3804, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3377, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் சட்டக் கல்லூரி ஒன்று அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1763, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதியில் புதிதாக சட்டக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2619, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும், உதவி ஆட்சியர் அலுவலகங்களிலும், வட்டாட்சியர் அலுவலகங்களிலும் சட்ட ஆலோசகர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2458, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதியில் அரசின் சார்பில் ஒரு சட்டக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2433, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினத்தில் சட்டக் கல்லூரி அமைப்பதற்கு நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3465, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குறிப்பிட்ட சில அடிப்படை சிவில் மற்றும் கிரிமினல் சம்பந்தப்பட்ட சட்டங்களைத் தொகுத்து பள்ளி மாணவர்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *231*, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டக் கல்வி இயக்குநரக கட்டுப்பாட்டில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் நீண்ட காலமாக விரிவுரையாளராக பணிபுரிபவர்களின் பணியினை வரன்முறை (Regularise) செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1512*, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டம் பயிலும் மாணவர்களுக்கு, சட்ட நூல்களை தமிழில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1582*, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1284*, திரு. ஆர். சாமி.



**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூரில் வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1206*, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நீதிமன்றத்திலுள்ள (Bar Association) வழக்கறிஞர்களுக்கு கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *747*, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் சட்டக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *654*, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3174, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டு உள்ளன. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சட்டத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அறிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்மொழிதேவன் அவர்கள்.

---

@ 177 முதல் 218 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



***திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய எளிய தொண்டனான எனக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருண்மொழிதேவன், அட்வகேட்டா நீங்கள்?

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** ஆம். கிளைக் கழகச் செயலாளர் முதல் இன்றைக்கு கழகத்தினுடைய மாவட்டக் கழகச் செயலாளர் வரை பல்வேறு பொறுப்புகளை வழங்கி சிதம்பரம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக என்னை வெற்றி பெறச் செய்ய வைத்து, வழக்கறிஞரான என்னை இன்றைக்கு நீதி நிருவாகம் மற்றும் சட்டத் துறை மானியத்திலே பேச வாய்ப்பளித்து அழகுபார்த்துக் கொண்டிருக்கின்ற ஒரு கோடி கழகத் தொண்டர்களுடைய ஒப்பற்ற அன்னை எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்மீதும், தமிழ் மக்கள்மீதும், தமிழகத்தின்மீதும் கொண்ட பாசத்தால், பற்றால் எவ்வளவோ சோதனைகள் வந்த போதிலும் அவற்றையெல்லாம் தூள் தூளாக்கி மக்கள் பிரச்சினை என்றால் அது எந்தப் பிரச்சினையானாலும், மக்களுக்காகக் குரல் கொடுத்து, மக்களுடைய பிரச்சினைகளான பொதுமக்களுடைய, தமிழகத்தினுடைய ஜீவாதாரப் பிரச்சினை என்றாலும் சரி அல்லது சாதாரண ஒரு தனி மனிதப் பிரச்சினை என்றாலும் சரி அல்லது எங்களது மாவட்டத்தில் இருக்கக்கூடிய நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் தனியார்மயமாக்குகின்ற அந்தச் சம்பவத்திலும் சரி அல்லது இந்திய இறையாண்மைக்குப் பங்கம் ஏற்படுத்தும் என்று கருதப்படுகின்ற இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் என்றாலும் சரி, உடனடியாகக் குரல் கொடுத்து மக்கள் நலனே முக்கியம் என்று சொல்லி, போராடி, அதிலே வெற்றியும் பெற்று வருகின்றார் எங்களுடைய வீரத்தாய். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாஅவர்கள்தான், பேறிஞர் அண்ணா அவர்களுக்கும், இப்போது பல்வேறு சோதனைகளுக்கு இடையே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் பாராளுமன்ற வளாகத்திலே சிலை அமைத்து, புரட்சித் தலைவர் அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் எதிரிகள் எல்லாம்கூட அவர்களுடைய புகழைப் பாடக்கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்தினார். புரட்சித் தலைவருடைய புகழைக் கட்டிக் காத்து வருகின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி, தலைவர்

அவர்களுடைய ஒரே அரசியல் வாரிசான எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் தொட்டு வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியினுடைய ஒரு சில பிரச்சினைகளை இங்கு கூற விழைகின்றேன்.

*முற்பகல் 11-20*

சென்ற முறை பொது விவாதத்தின்போது பேச எனக்கு வாய்ப்பளிக்கப்பட்டபோது, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதிக்கான பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தேன். எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற முறையிலோ என்னவோ ஒரு கோரிக்கையைக்கூட இந்த **நிறைவேற்றவில்லை... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடுகள்)*

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** இன்றைக்கு சட்டம் மற்றும் நீதி நிருவாகம், சட்டப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிற அரசு **என்பதைத் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடுகள்)* நீங்கள் அட்வகேட், ஒரு Government நடக்க வேண்டுமென்றால், மெஜாரிட்டி இருந்தால்தான் ஆட்சி நடத்த முடியும் என்பது தெரிந்த விஷயம்தானே. *(குறுக்கீடுகள்)*

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** அட்வகேட் என்பதால்தான் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்குள்ளே மாண்புமிகு உறுப்பினர்கள் .. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அமைதியாக உட்காருங்கள். அமைச்சர் பேசுகிறார், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள்.... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அமைச்சர் பேசுகிறார், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, அமைதியாக உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் எலலோரும் அமைதியாக இருங்கள். *(குறுக்கீடுகள்)* அமைச்சர் பேசுகிறார்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வேண்டுமென்றே, திட்டமிட்டு ஆளுங்கட்சி உறுப்பினர்களுடைய கோபத்தைத் தூண்ட வேண்டும் என்பதற்காக **என்று சொல்லி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்களும், மற்றவர்களும் எங்களுடைய ஆதரவோடு, பெரும்பான்மையோடுதான் இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, இந்த ஆட்சி சிறுபான்மை உறுப்பினர்களைக் கொண்ட ஆட்சி அலல, **அல்ல எனறு பலமுறை இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களும் உங்களுக்குத் தெம்பு, திராணி, தைரியம் இருந்தால் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சியின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வாருங்கள், நாங்கள் நிரூபித்துக் காட்டுகிறோம் என்றும் சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகும் வேண்டுமென்றே உறுப்பினர்கள் இப்படிப் பேசிக்கொண்டே இருந்தால், அப்படிப் பேசுகின்ற உறுப்பினருடைய நேரத்தை நீங்கள் தடை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோ பாருங்கள், அருண்மொழிதேவன். இதுபோல் பிரச்சினை உருவாகக்கூடிய அளவிலே பேசினீர்கள் என்றால், உங்களுடைய time தான் waste ஆகும். *10* நிமிடங்களுக்கு மேல் உங்களுக்கு time தரமாட்டேன். பேசுங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** சிதம்பரம் நகரத்தினுடைய புறவழிச் சாலைப் பணியைத் துரிதப்படுத்தி முடிக்க வேண்டும். சிதம்பரம இரயில்வே மேம்பாலப் பணியை விரைவுபடுத்தி, அந்த இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்காக அங்கே வியாபாரம் செய்து கொண்டிருந்த, கடை வைத்திருந்த அந்த வியாபாரிகளுக்கு மீண்டும்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நகராட்சிக்குச் சொந்தமான அல்லது நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான அல்லது அருகில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்திலே அவர்கள் கடை அமைப்பதற்கு இடம் ஒதுக்கித் தரவேண்டும்.

கீரப்பாளையம் ஒன்றியத்தில் சுமார் 6 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி தருகின்ற பொன்னேரியை தூர் வாரவேண்டும். என்னுடைய தொகுதியில் கானூர், ஸ்ரீநெடுஞ்சேரி ஆகிய கிராமங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்காக விண்ணப்பித்ததோடு, பொது மக்களுடைய பங்களிப்பு ரூபாய் இரண்டு இலட்சமும் செலுத்தப்பட்டிருக்கின்றது. அந்தப் பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டும். கள்ளிப்பாடி-காவனூர் இடையே வெள்ளாற்றிலே பாலம் அமைக்க வேண்டும்.

சிதம்பரம் நகரிலிருந்து ஸ்ரீமுஷ்ணத்திற்கு மாலை 5 மணிக்கு ஒரு அரசுப் பேருந்து செல்கிறது. 6 மணிக்கும், 9-30 மணிக்கும் தனியார் பேருந்துகள் செல்கின்றன. 5 மணிக்குமேல் அரசுப் பேருந்து இல்லை. தனியார் பேருந்துகள் இயக்கப்படாத நாட்களில் மாணவர்களும், பொதுமக்களும் பாதிக்கப்படுவதைக் கருத்திலேகொண்டு, உடனடியாக மாலை நேரத்திலே புதிதாக பேருந்தை இயக்க வேண்டும்.

முற்பகல் 11-25

வெள்ளாற்றிலே கடல் நீர் உட்புகுந்து எனது தொகுதியிலே சாக்காங்குடிவரை அந்த நீர் பாய்வதால் நிலத்தடி நீர் பாதிப்பு ஏற்படுகின்ற சூழ்நிலை உள்ளது. அதைச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். சிதம்பரம் தாலுகாவிலேயுள்ள எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் விவசாயிகளுக்கு, கரும்பு விவசாயிகளுக்கு காலம் தாழ்ந்துகூட கரும்பு வெட்டு ஆணை வழங்கப்படவில்லை; வழங்கப்பட வேண்டும்.

சோழதரத்திலே மின் கம்பிகள் தாழ்ந்திருந்த காரணத்தினால் சென்ற வாரம் தீ பிடித்து சுமார் 100 ஏக்கர் கரும்பு எரிந்திருக்கின்றது. அந்த ஏழை எளிய விவசாயிகளுக்கு மின்சார வாரியமோ அல்லது தமிழ்நாடு அரசோ நஷ்டயீடு வழங்க வேண்டும்.

இப்பொழுது சென்னை மக்களினுடைய தாகத்தைத் தீர்த்துக்கொண்டிருக்கின்ற என்னுடைய தொகுதியிலே உள்ள வீராணம் ஏரியின் உட்புறம் மண்டியிருக்கின்ற காட்டாமணக்கு மற்றும் முட்புதர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



சிதம்பரம் தொகுதி, ஸ்ரீமுஷ்ணத்திலே அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அதிலே தினசரி 300-க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் வந்து செல்கின்றனர். உள் நோயாளிகளுக்கு எந்தவிதமான வசதிகளும் இல்லை. அதைச் சுற்றிலும் 40 கிலோமீட்டர் அளவுக்கு அரசு மருத்துவமனை ஏதும் இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே கட்டி முடிக்கப்பட்ட 30 படுக்கை வசதிகொண்ட அந்தக் கட்டடம் இன்னும் என்ன காரணத்தினாலோ திறக்கப்படாமல் இருக்கின்றது. அதைத் திறப்பதோடு அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும்.

கடந்த கடும் வெள்ளத்தால் தமிழகத்திலே அதிகமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கடலூர் மாவட்டமும் ஒன்று. அந்த மாவட்டத்திலே வெள்ளாற்றை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், அந்த ஆற்றினுடைய வரைபடத்தையே மாற்றக்கூடிய அளவிற்குக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி, மங்களூர், விருத்தாச்சலம், புவனகிரி, சிதம்பரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகள் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டன. விளைநிலங்கள் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. எனது தொகுதியிலே ஆனந்தக்குடி, எசனூர், கள்ளிப்பாடி, கூடலையாத்தூர், எணமங்கலம், ஆயிப்பேட்டை உள்ளிட்ட பல கிராமங்களிலே இப்போது விளைநிலங்களும், விவசாயிகளின் வீடுகளும் அடித்துச் செல்லப்பட்ட நிலையிலே, குறிப்பாக கூடலையாத்தூர் என்ற ஒரு கிராமத்திலே மத்திய நீர்வள ஆதார அமைப்புத் துறையினுடைய ஒரு கட்டடம், அந்த ஆற்றிலேயிருந்தது. அந்தக் கட்டடம் அடித்துச் செல்லப்பட்டதோடு அங்கேயிருந்த, அங்கே பணிபுரிந்த குப்பண்ணா என்ற மத்திய அரசினுடைய ஊழியர் ஒருவரும் அடித்துச் செல்லப்பட்டார். ஆனால், இந்த பட்ஜெட்டிலே குறிப்பாக அதிகமாக பாதிக்கப்பட்ட இடங்களிலேகூட தடுப்புச் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சிதம்பரம் தொகுதியிலே ஜெயங்கொண்டம் அனல் மின் நிலையத்திற்கென்று என்னுடைய தொகுதியிலே கண்டியங்குப்பம், தூவரங்குப்பம், புதுக்குப்பம் உள்ளிட்ட சில கிராமங்களிலே விளைநிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றன. விருத்தாச்சலம், புவனகிரி ஆகிய தொகுதிகளிலே, வளையமாதேவி, மேல்பாதி, கீழ்பாதி, கங்கைகொண்டான், கம்மாபுரம் போன்ற சில கிராமங்களிலும் நிலம் ஆர்ஜிதம் நடைபெறுகிறது. அந்த நெய்வேலி நிலக்கரி

நிறுவனம் இப்பொழுது ஏக்கருக்கு 50,000 ரூபாய் தருவதாகச் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. கிட்டத்தட்ட ஒரு ஏக்கரிலிருந்து 30 கோடி ரூபாய் அளவிலே வருமானம் ஈட்டக்கூடிய அந்த நிறுவனங்கள் இப்பொழுது அந்த ஏழை எளிய விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 10 இலட்சம் ரூபாய் தருவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு, எந்தவிதமான இழுத்தடிப்பும் இல்லாமல் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். உதாரணத்திற்கு மேற்கு வங்காளத்திலே இப்பொழுது சிங்கூர் திட்டத்திலே ஒருபோக நிலத்திற்கு 8 இலட்சமும், இருபோக நிலத்திற்கு 12 இலட்சமும் தருவதாகச் சொல்லி, அதைக்கூட அந்த மக்கள் வாங்க மறுத்திருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது.

சட்டத் துறையை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-லே ஆட்சிப் பொறுப்பேற்றபோது நிதிப் பற்றாக்குறையால் தமிழகம் தள்ளாடிக் கொண்டிருந்தபோது தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதல் மாநிலமாக ஆக்கிக் காட்டுவேன் என்று சொல்லி சபதமெடுத்து, எடுத்த சபதத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு சோதனைகளுக்கிடையிலும் (மேசையைத் தட்டும் ஒலி) முடித்து உலக நாடுகளெல்லாம் தமிழகத்தை உற்றுப் பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டத் துறையில் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்த சாதனைகள் ஏராளம். அன்றைக்கு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்தே கடுமையான வறட்சி, பிறகு சுனாமி, பிறகு கடும் வெள்ளம், இப்படிப்பட்ட இயற்கைப் பேரிடர்களையெல்லாம் சமாளித்து, இப்பொழுதுகூட எங்கள் மாவட்டத்திற்கு வந்த ஐ.நா. சபையினுடைய தூதுவராக வந்த அமெரிக்காவினுடைய முன்னாள் அதிபர் பில் கிளின்டன் அவர்கள்கூட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே நடந்த சுனாமி நிவாரணப் பணிகளை வெகுவாகப் பாராட்டிச் சென்றிருக்கின்ற நிலைமையை எடுத்துச் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே சட்டத் துறையிலே செய்திருக்கிற சாதனைகளை எவராலும் அழிக்கவோ, மறுக்கவோ முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மகளிர் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு சாதனைகளை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கின்றார்கள். அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், பெண் கமாண்டோக்கள், இன்னும் தொட்டில் குழந்தைத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை அம்மா அவர்கள் செய்ததுபோல, மகளிருக்கென்று இந்தியாவிலேயே முதன்முதலாக (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் நீதிமன்றங்களைத் தொடங்கி சென்னை, கோவை, மதுரை, திருச்சி, நெல்லை உள்ளிட்ட 8 இடங்களிலே மகளிர் நீதிமன்றங்களை அமைத்த பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். Justice delayed is justice denied என்று சொல்வார்கள். இந்த நிலைமையைப் போக்க மாண்புமிகு அம்மா அவர்கள் 49 விரைவு நீதிமன்றங்களை தமிழகத்திலே உருவாக்கி, அந்த நீதிமன்றங்களின் வாயிலாக கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 646 வழக்குகளையும், அதோடுமட்டுமல்ல, அந்த விரைவு நீதிமன்றங்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு மத்திய அரசாங்கம் அப்போது அங்கீகாரம் அளிக்கவில்லை என்று சொன்னாலும்கூட, மத்திய அரசாங்கம் நிதி அளிக்கவில்லை என்று சொன்னாலும்கூட, நான் தொடர்ந்து நிதியளித்து நடத்துவேன் என்று சொல்லி நீதியைக் காத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

அதைப்போல Lok Adalat மக்கள் நீதிமன்றம். மக்கள் நீதிமன்றத்தின் வாயிலாக அவற்றை ஊக்கப்படுத்தி அந்த மக்கள் நீதிமன்றங்களிலே அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் வழக்குகளை முடித்து வைத்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். அதேபோல தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தினை நிறுவி, சட்டம் இயற்றி கிரீன்வேஸ் சாலையிலே விலைமதிப்பற்ற அந்த இடத்தையும் அவர்களுக்கு ஒதுக்கி சட்டக் கல்விக்குத் தனி முக்கியத்துவம் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சட்டக் கல்வி என்றாலே பெங்களூரிலே உள்ள National School of Law-வை சொல்வார்கள். School of Excellence-ஐ சென்னையிலே நிறுவி தரம் வாய்ந்த சட்டக் கல்வியை தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமை ... புரட்சித் தலைவி அம்மா அவர்களையே ...ரும்.

227568
Chennai-600 009

இன்றைக்கு தமிழைச் சொல்லி பலர் சுற்றி வந்துகொண்டிருக்கலாம். ஆனால் தமிழுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய மாநில அரசினுடைய சட்டங்களை கிட்டத்தட்ட நூற்றுக்கு மேற்பட்ட மத்திய, மாநிலச் சட்டங்களை தமிழிலே மொழி பெயர்த்து பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், புத்தகங்களாக குறைந்த விலையில் வெளியிட்ட பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

மத்திய அரசாங்கத்தினுடைய பங்களிப்பு ஏதும் இல்லாத சூழ்நிலையிலே கடந்த ஐந்து ஆண்டுகால புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே பலமுறை மத்திய அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், மத்திய அரசு நிதியொதுக்காது ஒன்றரைக் கோடி ரூபாய் நிதியொதுக்கிய சூழ்நிலையிலே, தமிழகத்தினுடைய நீதித் துறையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நீதித் துறைக்கு பயிற்சிக் கழகம்; சென்னை உயர் நீதிமன்றத்திலே நூலகக் கட்டடம். மாநில சட்டப் பணி ஆணைக் குழுவுககுக் கட்டடம்; விழுப்புரத்திலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்; தேனி மாவட்டத்திலே புதிதாக மாவட்ட அமர்வு நீதிமன்றம்; செஞ்சியிலே சார்பு நீதிமன்றம்; திருவள்ளூரிலே மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைப்பதற்கான முயற்சி; திண்டுக்கல்லிலே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்; விருதுநகரிலே சார்பு நீதிமன்றம்; நீதித் துறை நடுவர் மன்றம்; ஒருங்கிணைந்த நடுவர் மன்ற வளாகம். திருப்பத்தூரிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம். இப்படி தமிழக நீதிமன்றங்களுடைய கட்டடங்களைப் பராமரிப்பதற்காக நிதி ஒதுக்கீடு.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சென்னை உயர் நீதிமன்றத்தை கணினிமயமாக்கியது; சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்கறிஞர்களுககு Chamber அமைத்துக் கொடுத்தது; இப்படிச் சட்டத் துறையிலே சாதனைகளைச் செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழகத்தில் இருக்கின்ற வழக்கறிஞர்கள் Advocate Welfare Fund - என்று சொல்வார்கள், ரூபாய் இரண்டு இலட்சமாக இருக்கக்கூடிய அந்த நிதியை, ரூபாய் 5 இலட்சமாக உயர்த்தவேண்டும். அதோடு ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் Prosecution Inspector என்ற பதவியை



ஏற்படுத்தி--ஏனென்று சொன்னால் அங்கு இருக்கக்கூடிய காவலர்களுடைய உதவியாளர்கள், ஆய்வாளர்கள் எல்லாம் சட்டம் படிக்காதவர்கள் பல இடங்களிலே உள்ள சூழ்நிலை. இப்போது வெறும் டிகிரியை வைத்துக்கொண்டு அந்தப் பதவிகளுக்கு ஆட்களை எடுக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு--வழக்கறிஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற விதத்திலே Prosecution Inspector என்ற பணியை ஒதுக்க வேண்டும்.

சட்டக் கல்லூரியில் பயின்று பார் கவுன்சிலில் பதிவு செய்கின்ற அந்த வழக்கறிஞர்களுக்கு வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கி நடத்துபவர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகை வழங்கப்பட வேண்டும். இப்போது வழக்கறிஞர்கள் அதிகரித்துவிட்ட நிலையில் குறைந்த வருமானம் ஈட்டுகின்ற பல வழக்கறிஞர்கள் நலிந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டறிந்து அந்த வழக்கறிஞர்களுக்கு சலுகைகளை வழங்கவேண்டும். இலவச வீட்டுமனைப் போன்ற சலுகைகளை வழங்கவேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது கிருஷ்ணகிரியிலே மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைந்திருக்கின்ற சூழ்நிலையிலே தருமபுரியிலே புதிதாக நீதிமன்றத்தைத தொடங்க வேண்டும்.

இப்போது பாராளுமன்ற சட்டமன்றத் தொகுதி சீரமைப்பு மறுசீரமைப்பு வேலைகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேளையிலே ஒரு முககியமான பிரச்சினை. நம்முடைய பாராளுமன்றத் தொகுதிகளிலும்கூட மறுசீரமைப்புப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆனால், நீதிமன்ற எல்லை என்பது இன்றைக்குள்ள சூழ்நிலைக்கேற்ப அதை மாற்ற வேண்டும். ஏனென்றால், ஒரே இடத்திலே இருக்கின்ற மக்கள் இரு நிறுவனங்களுக்குச் செல்லக்கூடிய நிலை மாறவேண்டும். உதாரணத்திற்கு எனது சிதம்பரம் தொகுதியை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், ஸ்ரீமுஷ்ணம் மற்றும் அதைச் சுற்றியிருக்கின்ற கிட்டதட்ட 25, 30 கிராமங்களில் இருக்கின்ற மக்கள் சிவில் வழக்குகளுக்காக காட்டுமன்னார்கோவிலுக்கும், கிரிமினல் வழக்குகளுக்காக விருத்தாசலத்திற்கும், ஆர்.டி.ஓ. கோர்ட்டுக்கு போகவேண்டும் என்று சொன்னால் சிதம்பரம்; கடலூருக்கு செசன்ஸ் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். இப்படிப் பல இடங்களுக்கு அலைந்து செல்லக்கூடிய நிலைமைகளை மாற்றுகின்ற வகையிலே நீதிமன்ற அதிகார எல்லையை மாற்றியமைத்து, மக்களுடைய இந்த முக்கியமான

பிரச்சினை, ஏழையெளிய மக்கள் அலைக்கழிக்கப்படுகின்ற இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

இன்றைக்குக்கூட நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே பல்வேறு இடங்களிலே நீதிமன்றங்கள் அமைப்பதாக சொல்லியிருக்கிறீர்கள். புதிய நீதிமன்றங்களைத் தொடங்கலாம். தொடங்குவதைக்காட்டிலும் பல இடங்களில் நீதிபதி பதவிகள், A.P.P. பதவிகள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்பி, நீதி விரைந்து கிடைத்திட ஏற்பாடு செய்ய வேண்டும். என்னுடைய தொகுதி சிதரம்பரத்தில்கூட விரைவு நீதிமன்ற நீதிபதி, கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, நீதித் துறை நடுவர் மன்ற நீதிபதி எண் 1 ஆகிய பணியிடங்கள் காலியாக இருக்கின்றன.

*முற்பகல் 11-35*

அதேபோல, புதியதாக நீதிமன்றம் கட்டுகின்றபோது, அந்த நீதிமன்றம் கட்டுகின்ற பணியை எடுக்கின்றபோது, அந்த நீதிமன்றம் கட்டப்பட்ட ஆண்டு, தொடங்கப்பட்ட ஆண்டு, அங்கு தாக்கல் ஆகின்ற வழக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலே நீதிமன்றங்களைத் தொடங்க வேண்டும். நான் வழக்கறிஞராகப் பணியாற்றிய திட்டக்குடி நீதிமன்றம், கடலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய திட்டக்குடி நீதிமன்றம், 1988-லே தொடங்கப்பட்டது. பிறகு 1996-லே மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றமாக, கிட்டத்தட்ட ஆயிரம் சிவில் வழக்குகள், 500-க்கு மேற்பட்ட கிரிமினல் வழக்குகள் உள்ள சூழ்நிலையிலே, 19 ஆண்டுகளாக அந்த நீதிமன்றம் தனியார் கட்டடத்திலே இயங்கி வந்து கொண்டிருக்கின்றது. அந்த நீதிமன்றத்திற்கு என்று வழக்கறிஞர்களான நாங்களே நிதி வசூலித்து, இடத்தை வாங்கி, அரசு இடம் ஒதுக்க முடியாத சூழ்நிலையிலே, இடத்தை வாங்கி நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு அது நீதித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் (குறுக்கீடு) Pecuniary Jurisdiction. (குறுக்கீடு) இப்பொழுது பாருங்கள், Pecuniary Jurisdiction-ஐ எல்லாம் உயர்த்தியிருக்கிறார்கள். அதையெல்லாம் பாராட்டிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)



**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** கோவை உள்ளிட்ட தமிழகம் முழுவதும் இருக்கின்ற நீதிமன்றங்களிலுள்ள மூத்த வழக்கறிஞர்கள் மாடியிலே இயங்கக்கூடிய நீதிமன்றங்களுக்குச் செல்வதற்கு, படி ஏறுவதற்கு சிரமப்படுகிற நிலையைக் கருத்தில்கொண்டு, அந்த நீதிமன்றங்களுக்கு லிஃப்ட் அமைத்துத் தர வேண்டும். சென்னை உள்ளிட்ட நீதிமன்றங்களுக்கு வழக்கறிஞர்களுக்கு ஒதுக்கப்பட்ட சேம்பர்கள், அந்தச் சேம்பர்களுக்கு வாடகைக் கட்டணம் அதிகமாக இருப்பதாக நீதிபதிகள், வழக்கறிஞர்கள் கருதுகிறார்கள். அதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசியலமைப்புச் சட்டம் 130-ன்படி தென் இந்திய மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையிலே, இப்போது ஏழை எளிய மக்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று நீதி பெற முடியாத சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தமிழகத்திலே, சென்னையிலே உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையை அமைப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும். இன்றைக்கு வழக்கறிஞர்கள் வேலைநிறுத்தம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 18 நிமிடங்கள் ஆயிற்று.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** நீதிமன்றப் புறக்கணிப்பு ஆகியவை நடைபெறுகின்றபோது அதனால் வேலை பாதிக்கப்படுவது, அலைக்கழிக்கப்படுவது பொதுமக்கள். இந்தச் சந்தர்ப்பங்களிலே காவல் துறைக்கும், நீதித் துறைக்கும், வழக்கறிஞர்களுக்கும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. வேலைநிறுத்தம் நடைபெறுகின்றது. சில வழக்கறிஞர்கள் நாட்டின் நலன் கருதி பொது வேலைநிறுத்தம் செய்கிறார்கள். எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் சரி, பாதிக்கப்படுவது பொதுமக்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்திலே பல இடங்களிலே நடைபெற்றுக் கொண்டிருந்த சூழ்நிலைபோல இன்றைக்கு—இந்த மாண்புமிகு மின்சாரத் துறையினுடைய அமைச்சர் ஒரு விழாவிலே நீதிபதிகள் கட்டப் பஞ்சாயத்து செய்கிறார்கள் என்று பேச, அதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் பூனைக்கு யார் மணி கட்டுவது என்று பார்த்தேன் என்ற ரீதியிலே ஆதரித்துப் பேச, நீதிபதிகளை விமர்சித்துப் பேச, இன்றைக்கு தமிழகத்தினுடைய. .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக்காரர்கள் இப்படிப் பேசுவார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், நான் என்ன பேசினேன் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு முழுமையாகத் தெரியாது. நான் பேசியதில் எந்தவிதமான வரம்பும் மீறிப் பேசவில்லை என்று சென்னை உயர் நீதிமன்றம் Contempt Petition போட்டபோது தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்குப் போனார்கள். உச்ச நீதிமன்றத்திலே அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "The Supreme Court on Thursday declined to interfere with the Madras High Court judgement rejecting initiation of contempt of Court proceedings against Tamil Nadu Chief Minister and Electricity Minister Arcot Veerasamy for their alleged remarks against the Judiciary. A Bench consisting of Chief Justice K.G. Balakrishnan and Justice R.V. Ravindran dismissed a Special Leave Petition filed by Traffic K.R. Ramasamy challenging the February 13th Judgement, saying the matter is not worth proceeding further" என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கொடுத்திருப்பது பற்றிச் செய்தி வந்துள்ளது. ஆனால், நான் வெளியிலே பேசியது, முதலமைச்சருடைய தபேதார் ஏழுமலை என்பவருடைய இல்லத் திருமணத்திலே நான் பேசினேன். எங்களுடைய தலைவர் எப்பொழுதும் ஏழை எளியவர்களுடைய வீட்டுத் திருமணங்களுக்குத் தலைமை தாங்குவார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இங்கேயே முன்னாள் முதலமைசசர் நீதிபதிகளைப் பற்றி என்ன பேசினார் என்பதை இந்த அவை தெரிந்துகொண்டால், நான் பேசியது தவறா அல்லது அவர்கள் பேசியது தவறா என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இது 2005 பிப்ரவரி 1 ஆம் தேதி மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் பேசியது: அவர் என்ன பேசினார் என்றால்,

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றமானாலும், எந்த நீதிமன்றமானாலும், நீதிபதிகள் மனிதர்கள்தான். அவர்களுக்கும் விருப்பு வெறுப்புகள் உள்ளன. சில சமயங்களில் பேசக்கூடாதவற்றையெல்லாம் நீதிமன்றங்களில் பேசுகிறார்கள். இதையே நாங்கள் பேசினால் எங்கள்மீது contempt of court வழக்குப் போடுவார்கள். ஆனால், நீதிபதிகள் என்ன செய்தாலும், என்ன சொன்னாலும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அல்லது அதற்குக் கண்டனம் தெரிவித்து, நாங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தால், எங்கள்மீது contempt of court வழக்கு வரும்.



ஆனால், நீதிபதிகள் என்ன வேண்டுமானாலும் பேசலாம். ஆகவே, குறிப்பிட்டு இந்த நீதிபதி இதைச் சொன்னார், அதைச் சொன்னார் என்பதையெல்லாம் இந்த அவையில் தெரிவித்து அதனால் அவர்கள் சொல்வதெல்லாம் உண்மை, நிலைமை சீரழிந்து விட்டது என்று கூறுவது அபத்தமான கூற்று," இது முன்னாள் முதலமைச்சர் கூறுவது. அதைவிட, பாராளுமன்றத்தினுடைய மக்களவைத் தலைவர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், 'உச்ச நீதிமன்றமும், பிற நீதிமன்றங்களும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு தங்களுக்கு என்று வகுக்கப்பட்டுள்ள வரையறைக்குள் நின்று செயலாற்ற வேண்டுமே தவிர, நாடாளுமன்றம் உள்ளிட்ட, அதாவது சட்டமன்றம் உள்ளிட்ட பிற அமைப்புகளின் அதிகாரத்துக்குள் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும்' என்று மக்களவைத் தலைவர் சோம்நாத் சாட்டர்ஜி வலியுறுத்தியுள்ளார். இதைத்தான் நானும் திருமணத்திலே பேசினேன். அதிலே எந்தவிதமான contempt-ம் இல்லை என்று உச்ச நீதிமன்றமே சொன்னதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொல்வது முறையல்ல.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஆ. அருள்மொழித்தேவன்:** நான் சொல்ல வந்தது, இந்தப் பிரச்சினையால் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய நீதிமன்றங்களிலே நீதிமன்றப் புறக்கணிப்பு ஏற்பட்டு, பொதுமக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்றுதான் சொல்லுகிறேன். வழக்கறிஞர் புறக்கணிப்பு என்ற தலைப்பிலேதான் சொல்லுகிறேன். அதேபோல நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தின்படிதான் சட்டமன்றமும், நீதிமன்றங்களும் உருவாக்கப்படுகின்றன. அரசியலமைப்புச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவைதான் சட்டமன்றமும், நீதிமன்றமும் Article 179-ன்படி ஒரு அறிவிப்பு வழங்கப்பட்டு, 6 தினங்கள் கழித்துத்தான் அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் சொல்கிறது. எங்களுடைய சட்டப்பேரவை உறுப்பினர்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத். (குறுக்கீடுகள்)

**திரு. ஆ. அருள்மொழித்தேவன்:** கொஞ்சம் இருங்கள். ஒரு நிமிடம். ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** No, I will not allow you. விஷ்ணுபிரசாத், (குறுக்கீடுகள்) வேண்டாம், வேண்டாம், time ஆகிவிட்டது. டாக்டர் விஷ்ணுபிரசாத். (குறுக்கீடுகள்)

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** என்ன பிரச்சினை என்று சொல்கிறேன். கேட்டுச் சொல்கிறேன்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, எனக்குத் தெரியும். டாக்டர் விஷ்ணுபிரசாத். நீங்களாவது இந்த மானியத்தை ஒட்டிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) No, I will not allow you to raise. (குறுக்கீடுகள்) இல்லை, வேண்டியதில்லை. டாக்டர் விஷ்ணுபிரசாத் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இது எங்கெங்கேயோ போகும். (குறுக்கீடுகள்) இல்லை வேண்டியதில்லை. நான் சொல்கிறேன், இந்தப் பிரச்சினை வேறுமாதிரி போகும். (குறுக்கீடுகள்) குறிப்பிட்ட நேரத்தைவிட 10 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரத்திற்கு ஜான்சிராணி, நல்லாட்சிக்கு விக்டோரியா மகாராணி, தொண்டிற்கு அன்னை தெரசா . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம், இது முடிந்ததாக நானே ஏற்றுக் கொண்டுவிட்டேன்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இவர்களை எல்லாம் ஒருசேர நாங்கள் பார்ப்பது அன்னை சோனியா காந்தி என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று உலக அரங்கிலே மிகவும் சக்தி வாய்ந்த ஒரு பெண்மணியாக அன்னை சோனியா காந்தி திகழ்கிறார்கள். எங்களை எல்லாம் வழி நடத்தக்கூடிய அன்னை சோனியா காந்தி அவர்கள் இருக்கக்கூடிய திசை நோக்கி வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** நன்றி சொல்லி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி வேண்டாம். நன்றி வேண்டாம். உங்கள் நன்றி இந்த அவைக்குத் தேவையில்லை. நன்றியை எதிர்பார்த்து நாங்கள் இந்தக் கடமையை ஆற்றவில்லை. நன்றி வேண்டாம். நன்றி சொல்வது அவையினுடைய சட்டதிட்டத்தில் இல்லை. இல்லை, நான் allow பண்ணமாட்டேன். உங்கள் துணைத் தலைவருக்கு வேண்டுமானால் நன்றி சொல்லுங்கள், தேவையில்லை. (குறுக்கீடுகள்) வேண்டியதில்லை. டாக்டர் விஷ்ணுபிரசாத். please contiune.



**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி."

எப்படி உலகத்தில் உள்ள உயிரினங்களுக்கு மழை தேவைப்படுகின்றதோ அதுபோல மக்கள் நிம்மதியாக இருக்க நீதி தவறாத நல்லாட்சி தேவை. அப்படிப்பட்ட ஒரு நல்லாட்சியை இன்று தமிழகத்திற்கு வழங்குகின்ற வேந்தே, நீர் வாழ்க. உம் குலம் வளர்க. மன்னவா 2007, 23 ஆம் தேதி ஜனவரி அன்று நம் தமிழக முதல்வர் அவர்களுக்குப் பொன் விழா எடுக்க வேண்டும் என்று முதல்முறையில் இந்த மாமன்றத்திலே குரல் கொடுத்த பெருமை எனக்கு உண்டு. இன்னும் 3 வாரங்களிலே ஜனாதிபதி அவர்கள் இந்த மாமன்றத்திற்கு வந்து அலங்கரிக்கப் போகிறார் என்று நினைக்கும்போது என்னுடைய உடல் எல்லாம் பூரிப்பு அடைகின்றது. வெற்றிமேல் வெற்றியைப் பறித்துக் கொண்டிருக்கும் வெற்றித் திருமகனே, வீரத் திருமகனே தோல்வியே உன்னிடம் தோல்வி கண்டது என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஊராட்சியை ஊற விடாமல், நகராட்சியை நகர்த்திக் காட்டிய பெருமைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் நேற்றையதினம் இரண்டு மணி நேரம் பதிலுரை கூறும்பொழுது ஒரு சொட்டுத் தண்ணீர்கூட குடிக்காமல் இருந்தார். வெள்ளாட்டு மந்தையிலே கருப்பு ஆடுகள்--கருப்பு ஆடைகள் அல்ல, கருப்பு ஆடுகள்-- இருந்தாலும் அனைவருக்கும் சமநீதி தருவேன் என்று நேற்றையதினம் கூறிய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாவட்ட அமைச்சர் திரு. வேலு அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சித் தலைவர், சட்டமன்றத் தலைவர் திரு. சுதர்சனம் மாமா அவர்களுக்கும், திரு. பீட்டர் மாமா அவர்களுக்கும், துணைத் தலைவர் அம்மையார் யசோதா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுதர்சனம் மாமா, கொஞ்சம் நன்றாக உட்காருங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** கடந்த 30-3-2007 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகையிலே இது குருட்டுக் குதிரைகளின் அணிவகுப்பு என்று சொன்னார். நான் சொல்கிறேன். நாங்கள் குருட்டுக் குதிரைகள் அல்ல. அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மட்டுமே அடங்கக்கூடிய முரட்டுக் காளைகள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த மாதம் 8 ஆம் தேதி மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் புது டில்லியிலே நடைபெற்ற மாநாட்டிலே பேசும்போது, அதிகப்படியான, 10 இலட்சம் வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன என்று சொன்னார்; அதற்காக அதிகப்படியான எண்ணிக்கையிலே நீதிமன்றங்கள் வர வேண்டுமென்று சொன்னார். இன்று தமிழகத்திலே 700 நீதிமன்றங்கள் இருக்கின்றன. 49 நீதிபதிகள் இருக்க வேண்டிய இடத்திலே 46 நீதிபதிகள் இருக்கின்றார்கள். உயர் நீதிமன்றத்திலே 1½ இலட்சம் வழக்குகளும், கீழமை நீதிமன்றங்களிலே 5 இலட்சம் வழக்குகளும் தேங்கிக் கிடக்கின்றன. இதையெல்லாம் பார்க்கும்போது, justice delayed is justice denied என்று சொல்வார்கள். தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிதான். 'சட்டம் ஓர் இருட்டறை, அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு' என்று பேரறிஞர் அண்ணா சொன்னார்கள். எந்த விளக்கு பிரகாசமாக எரிகின்றதோ அந்த விளக்குதான் வெற்றிபெறும் என்றும் சொன்னார்கள். உண்மைதான். இன்று மக்கள் நம்பக்கூடிய, மக்களிடையே இருக்கின்ற மிகப் பெரிய நம்பிக்கை நீதிமன்றங்கள்தான். நீதிபதிகளும் மனிதர்கள்தான். அவர்களுக்கும் ஆசாபாசம் உண்டு; மனிதக் குணாதிசயங்கள் உண்டு. எங்கோ ஒரு நீதிபதி தவறு செய்தார் என்பதற்காக ஒட்டுமொத்தமாக அந்த நீதித் துறையே இன்று ஒரு கேள்விக்குறியாகிவிட்ட ஓர் அவல நிலையை நாம் காண்கின்றோம்.

முக்கியமாக, land acquisition cases, உடனடியாக நடத்தப்பட வேண்டும்; Time bound disposal இருக்க வேண்டும். 15, 20 வருடங்களாக ஒரு வழக்கு நடக்கின்றது. அப்பொழுது ஒரு ஏக்கர் ஒரு இலட்சம் என்று சொன்னால், 20 வருடங்களுக்குப் பிறகு பல இலட்சங்கள் ஆகும். ஆனால் இப்பொழுது தீர்ப்பு வந்தாலும் அதே ஒரு இலட்சம் தந்தால், நீதி எங்கேயிருக்கின்றது? எனவேதான், மத்திய அரசாங்கம் நீதிபதிகளும் விசாரணைக்கு உட்பட்டவர்கள் என்ற ஒரு கமிஷனைக் கொண்டுவந்தார்கள். நமுடைய மாண்புமிகு முதலமைச்சரும் சொல்வார்கள். வாங்கப்பட்ட நீதி, வழங்கப்பட்ட நீதி என்று



சொல்வார்கள். அப்படிப்பட்ட நிலைமைதான் இன்று தமிழகத்திலே இருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதிபதிகளும் விசாரணைக்கு உட்பட்டவர்கள் என்கிற அந்தக் கமிஷனுக்கு முழு உத்தரவாதம் தந்து, உதவிட வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்கின்றேன்.

வழக்குகளை எல்லாம் வேகமாக முடிக்க Fast Track Courts இருக்கின்றன; Mobile Courts இருக்கின்றன. எத்தனை Fast Track Courts இருக்கின்றன? அவையெல்லாம் எத்தனை வேகமாக நடக்கின்றன? Presiding Officers இல்லை என்கிற ஒரு செய்தியும் என் காதிலே வந்து எட்டுகின்றது. எனவே உடனடியாக அந்த Presiding Officers-யும், நீதிபதிகளையும் நியமனம் செய்ய வேண்டுமென்ற என்னுடைய தாழ்மையான கருத்தையும் வைக்கின்றேன்.

Minimum 2 வருடங்கள் ஒரு நீதிபதி ஒரு வழக்கை எடுத்துக்கொண்டார் என்று சொன்னால், criminal side ஆக இருந்தாலும் சரி, civil side ஆக இருந்தாலும் சரி, minimum 2 வருடங்கள் அந்த நீதிபதியை allow செய்ய வேண்டும். ஏனென்றால் இன்று ஒரு நாள் நீதிபதி அந்த வழக்கைக் கேட்கின்றார். மறு நாள் அதே வழக்கு வரும்போது, வேறொரு நீதிபதி வருகின்ற காலத்திலே, திரும்பவும் 'அ' முதல் 'ஃ' வரை அந்த நீதிபதிக்கு, அந்த வழக்கைப் பற்றிச் சொல்ல வேண்டிய காலகட்டத்திலே மேலும் தாமதமாவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கின்றது என்பதனையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும் நீதிபதிகள் நியமனத்திலே சமூக நீதி காக்கப்பட வேண்டும். ஏனென்றால் இன்றைய சூழ்நிலையிலே நாம் அதைக் கடைப்பிடித்தோம் என்று சொன்னால் இந்தியா முழுவதற்கும் நாம் ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்வோம் என்பதிலே எந்தச் சந்தேகமும் இல்லை.

தமிழிலே வாதாட உரிமை உண்டு என்பதனை மேலும் இந்தத் தமிழக அரசு ஆணித்தரமாகச் செயல்படுத்த வேண்டும். அதற்கு எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றை உடைத்தெறிகிற பக்குவம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு என்பதனையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்று உலகம் போகின்ற வேகத்திலே நீதிபதிகளும் உடனுக்குடன் வழக்குகளின் சாராம்சங்களைப் புரிந்துகொள்வதற்காகவும், உலக அரங்கிலே நடக்கின்ற வழக்குகளைத் தெரிந்துகொள்வதற்காகவும், ஒவ்வொரு மாவட்ட நீதிபதிக்கும் computer, laptop with internet connection தந்தாக வேண்டும். ஏனென்றால் 'Thigh மேல் கணினி இருந்தால் கை மேல் பலன் கிடைக்கும்' என்பதிலே மாற்றுக் கருத்து கிடையாது. Thigh என்றால் தொடை. Laptop. Thigh மேல் கணினி, கை மேல் பலன் என்பதிலே எந்தச் சந்தேகமும் இல்லை. எனவே, மாவட்ட நீதிபதிகளுக்கு laptop with internet connection தேவை என்பதனையும் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்று தமிழகத்திலே பெரும்பாலான விபத்துகள் இரவு நேரங்களிலே நடக்கின்றன. இந்த விபத்துகள் எப்படி நடக்கின்றன என்று சொன்னால், குடித்துவிட்டு ஓட்டுபவர்களால்தான் பெரும்பாலான விபத்துகள் நடக்கின்றன. குடித்துவிட்டு ஓட்டுகின்ற அந்த ஓட்டுநருடைய தவறினால் அப்பாவி மக்களும் இதிலே பாதிக்கப்படுகிறார்கள் என்பதனை மனதில்கொண்டு, யார் குடித்துவிட்டு ஓட்டினாலும், அவன் எப்பேர்ப்பட்ட செல்வப் பெருந்தகையாக இருந்தாலும் சரி, செல்வாக்கு மிக்கவனாக இருந்தாலும் சரி, கடுமையாகச் சட்டம் பாய வேண்டும். ஒரு கல்லூரி மாணவனாக இருந்தாலும் சரி, ராஜா வீட்டுக் கன்றுக்குட்டியாக இருந்தாலும் சரி, கல்லூரி மாணவனாக இருந்தால், அவனைக் கல்லூரியிலிருந்து டிஸ்மிஸ் செய்ய வேண்டும். அரசாங்க வேலையோ, வியாபாரம் செய்கின்றவனோ, அவனை வேலையிலிருந்து நிறுத்த வேண்டும். வியாபாரம் செய்கின்றவர் கணக்கை, வங்கிக் கணக்கை முடக்க வேண்டும். இப்படிப்பட்ட பயமுறுத்துகிற ஒரு சட்டம் வரவேண்டும். மற்ற நாடுகளில் எல்லாம் குடித்துவிட்டு வண்டியைத் தொடவே முடியாது. ஆனால், நம் நாட்டிலே மட்டும்தான் குடித்துவிட்டு வண்டியை ஓட்டுகின்ற ஒரு தைரியம் அனைவருக்கும் இருக்கிறது. கடுமையான சட்டம் பாய்ச்சினால 50 சதவீதமாவது நாம் இதிலே வெற்றியைக் காணலாம் என்ற என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை இதன்மூலம் வைக்கின்றேன்.

*முற்பகல் 11-50*

அடிப்படைச் சட்டங்கள் பள்ளிக்கூடங்களிலே கண்டிப்பாக வரவேண்டும். Child labour, Women abuse, Child abuse மற்றபடி Human Rights இப்படிப்பட்ட அடிப்படைச் சட்டங்களை மனிதர்கள்



நாம் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும். பள்ளிப் பருவத்திலேயிருந்து மாணவர்களுக்கு இதை ஒரு கட்டாயப் பாடமாக்க வேண்டும். மேலும் சட்டங்கள் இருட்டறை என்று சொல்கிறார்கள். சட்டம் ஓர் இருட்டறை, ஏன் இருட்டறை? Website-லே சட்டமெல்லாம், Constitution எல்லாம் வரவேண்டும். வெறும் C. Sitaram & Co-வை மட்டுமே நம்பியிருந்தால் போதாது. அதுவும் இருக்கட்டும். ஆனால், வெப் சைட்டிலும் நம்முடைய Constitution வந்தால்தான்--அதை நகலெடுக்கும் உரிமையும் வர வேண்டும். அப்போதுதான் சாமானிய மனிதனும்--Constitution-ஐத் தெரிந்துகொள்வதற்கு Website-ஐ அணுகலாம். இல்லையென்றால் வக்கீலைப் பார்க்க வேண்டும். இல்லையென்றால் C. Sitaram & Co-வை மட்டும்தான் நம்பியிருக்க வேண்டும்.

மேலும் முக்கியமான ஒரு பிரச்சினை. இன்றைய நிலைமையிலே நிறைய வழக்குகள் காலதாமதம் ஆகின்றன என்று சொல்கிறோம். இரண்டே துறைகளுக்கு மட்டும்தான் கோடைக்கால விடுமுறை இருக்கிறது. ஒன்று பள்ளிகளும் கல்லூரிகளும், இன்னொன்று நீதிமன்றங்கள்தான். நான் நீதிபதிகளுக்குக் கோடைக்கால விடுமுறை தேவையில்லையென்று சொல்லவில்லை. நீதிபதிகளும் குடும்பத்துடன் சுற்றுலா சென்றுவர எனக்கும் ஆசைதான். ஆனால், வர இருக்கின்ற காலங்களிலே இத்தனை வழக்குகள் தேக்கத்திலே இருக்கின்றன. வெள்ளைக்காரன் கொண்டுவந்தது இந்த summer vacation. மருத்துவர்களுக்கு இருக்கிறதா கோடைக்கால விடுமுறை? பொறியாளர்களுக்கு இருக்கிறதா கோடைக்கால விடுமுறை? ஆடிட்டர்களுக்கு இருக்கிறதா கோடைக்கால விடுமுறை? அதுமட்டுமல்ல. இதிலேயும் வேறுபாடு இருக்கிறது. மாவட்ட நீதிபதிகளுக்கு கோடைக்கால விடுமுறையே கிடையாது. (மணியடிக்கப்பெற்றது) ஒன்று, இருந்தால் அனைவருக்கும் இருக்கட்டும். இல்லையென்றால் அனைவருக்கும் அது நிறுத்தப்படட்டும்.

**HON. DEPUTY SPEAKER:** Kindly conclude your argument.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** அவர்களே ஒரு குழுவை அமைத்து அது தேவையா, இல்லையா--ஏனென்றால் இப்போது இருக்கின்ற சூழ்நிலைக்கேற்ப அவர்கள் ஒரு formula தரட்டும். அதை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற தாழ்மையான கருத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் அவர்களுக்கு இருக்கின்ற அங்கி. இன்றைய சூழ்நிலையிலே நம்முடைய சீதோஷ்ண நிலைக்கு கருப்பு கோட், கருப்பு கவுன், neck tie, collar, இதெல்லாம் வெள்ளைக்காரன் அவர்களுடைய சீதோஷ்ண நிலைக்கேற்ப வைத்திருந்தான். இது நம்முடைய கையில் இல்லையென்று சொன்னாலும், மாண்புமிகு தபால் துறை அமைச்சர் அவர்கள் மிகப் பெரிய ஒரு சீருடைப் புரட்சி கொண்டுவந்தார்கள். பழைய நிறத்தை மாற்றி நம்முடைய சீருடைகளை மாற்றக்கூடிய மிகப் பெரிய ஒரு புரட்சியை மாண்புமிகு அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள், தபால் துறையிலே சீருடைப் புரட்சி கொண்டுவந்தார்கள். ஏனென்றால், இதை நீங்கள் வலியுறுத்தினால் மத்திய அரசாங்கம் செவிசாய்க்கும். நம்முடைய சீதோஷ்ண நிலைககேற்ப. இல்லையென்றால் கருப்பு கலர் எல்லாம் போட்டுக்கொண்டு ரோடிலே போனால் எப்படி இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்ப்போம் என்றால், பயங்கரமாக இருக்கும். எனவே, இதையெல்லாம் நீங்கள் மனதிலே வைத்துக்கொண்டு ஒரு நல்ல முடிவைக் காண வேண்டும்.

இதற்குமேல் கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்குகின்ற கடன். வீட்டு அடமானக் கடன் என்ற ஒன்று இருக்கிறது. ஒரு இலட்சம் ரூபாய் வாங்கினால் இன்று அதனுடைய வட்டி குட்டி மேல் குட்டி, போட்டு (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இன்னும் இரண்டே இரண்டு நிமிஷம். குட்டிமேல் குட்டி போட்டு பல இலட்சங்கள் ஆகின்றன. ஜப்தி செய்கின்ற அளவிற்கு, அவர்கள் தற்கொலை செய்துகொள்கின்ற ஒரு அவலநிலையும் ஏற்பட்டிருக்கிறது. இதை நான் ஏன் சொலகிறேன் என்றால் ரூ.7,000 கோடி தந்து விவசாயிகளுக்கு உயிர் கொடுத்தவர் நம்முடைய முதல்வர் டாகடர் கலைஞர் அவர்கள். நெசவாளர்கள் இருக்கிறார்கள், கைவினைஞர்கள் இருக்கிறார்கள், சிறு வியாபாரிகள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** முடித்துவிடுகிறேன், இவர்களுக்கு வெறும் 500 கோடி ரூபாய்தான் ஆகிறது. இவர்களுடைய கடனை இரத்துச் செய்ய வேண்டும். இதிலே



குறிப்பாக முக்கியமான ஒரு தவறு நடந்திருக்கிறது. சேலத்திலே சித்துராஜ் என்பவர் ரூ.1,50,000/- வாங்கியிருக்கிறார், 1994 அன்று. இன்று . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டுவிடுவேன்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இரண்டே நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. இரண்டு நிமிஷம் தர முடியாது.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** 5 நிமிஷம்கூட ஆகவில்லை, தலைவரே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. 11 நிமிடங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இல்லை. முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள். Please conclude.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** 1.-5-2005 அன்று ரூ.1,50,000/- ஆனது ரூ.2,40,000/- செலுத்திவிட்டார், 5-1-2007 அன்று ரூ.4,36,000/- 13-3-2007 இரண்டே மாதங்களில், அது ரூ.5,45,000/- 17-3-2007--13-3-2007-க்கும் 17-3-2007-க்கும் வெறும் 4 நாட்கள் இருக்கின்றன. அதிலே ரூ.5,45,000/-லிருந்து ரூ.6,30,000/- ஆகியிருக்கிறது. நான்கே நாட்களிலே இந்த வட்டியானது, குட்டி, அந்த மிகப் பெரிய ஒரு குட்டியை ஈன்றெடுத்திருக்கிறது. இதையும் நாம் கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

முற்பகல் 11-55

அடுத்து, அரசாங்கப் போக்குவரத்துக் கழகங்கள். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. நேரம் இல்லை. (குறுக்கீடு) அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு. (குறுக்கீடு)

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** தொகுதிப் பிரச்சினையைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, தொகுதிப் பிரச்சினை வேண்டாம். இந்த மானியத்தை ஒட்டிப் பேசுங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே சிப்காட் வளாகத்தையும், மேலும் செய்யாறு bye-pass-சாலையையும் தந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். என்னுடைய தொகுதியிலே, பிரம்மதேசம்-ஓச்சேரி பாலம நிலுவையிலே இருக்கின்றது. முடிகின்ற தருவாயிலே இருக்கிறது. 8½ கோடி ரூபாய் மதிப்பீடு என்று சொல்கிறார்கள். தயவுசெய்து அதற்கு இந்த நிதியாண்டிலே நீங்கள் கருணை கொண்டு, அந்த பிரம்மதேசம்-ஓச்சேரி பாலத்தைத் தாருங்கள்.

அடுத்து, நீதி சம்பந்தப்பட்டது. என்னுடைய செய்யாறு தொகுதியிலே, சட்டத்தில் ஓட்டை இல்லை; ஆனால், சட்டம் வழங்குகின்ற நீதிமன்றங்களிலே ஓட்டையிருக்கின்றது. ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் தேவை என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. த. தியோடர் ரெஜினால்டு. (குறுக்கீடு)

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** கடைசியாக, ஒரே நிமிடம், முடித்துவிடுகிறேன், தலைவர் அவர்களே. 10-4-2007 அன்று சமூக நலத் துறை அமைச்சர் ஒன்றைச் சொன்னார். 'ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும், ஆதவன் மறைவதில்லை' என்று சொன்னார். அன்னை சோனியா காந்தியின் கைகள், மறைப்பதற்காக வரவில்லை. டாக்டர் கலைஞரின் புகழ், மேலும் பிரகாசமாக, ஒளி வீசுவதற்காக வந்தது என்று கூறிக்கொண்டு, "ஆயிரம் பேய்கள் மறைத்திருந்தாலும், ஆதவன் மறைவதில்லை" என்று சொன்னால், சாலச்சிறந்ததாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழினத்தினுடைய ஒரே த்லைவரும், என்னுடைய குடும்பத் தலைவரும், சிறுபான்மையினருடைய பாதுகாவலரும், சட்டமன்றப் பேரவையினுடைய பொன்விழா நாயகருமாகிய, மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞருடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். தமிழகத்தினுடைய எதிர்காலம், எங்களுடைய எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம், வசந்தத்தின் தூதுவன், உள்ளாட்சியில் நல்லாட்சி தருகின்ற மாண்புமிகு தளபதியார் அவர்களுடைய பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.

சட்டம், நீதித் துறை குறித்த மானியக் கோரிக்கைகளில் பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

*"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோர்க் கணி"*

என்று சொன்ன வள்ளுவனுடைய வாக்கிற்கிணங்க, நீதி தவறாமல் ஆட்சியைத் தருகின்ற, நம்முடைய ஒப்பாரும், மிக்காருமில்லாத் தலைவர், கலைஞருடைய ஆட்சிக் காலத்தில், டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகம், மதுரை உயர் நீதிமன்றக் கிளை, நெல்லையில் சடடக் கல்லூரி, இப்படி சட்டத் துறை ஒரு பொற்காலத்தைக் கண்டிருக்கிறது.

'சட்டம் ஓர் இருட்டறை; வக்கீலின் வாதம், அதில் ஒரு விளக்கு' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தினுடைய சட்ட, நீதித் துறைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் விளக்காக இருந்து கொண்டிருககிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. ஒரு நாட்டிலோ அல்லது ஒரு மாநிலத்திலோ, நீதி நிருவாகம் சிறந்து விளங்கினால்தான், அந்த நாட்டிலே, மாநிலத்திலே வாழ்கிற மக்கள் நிம்மதியாக வாழமுடியும் என்பது வரலாறு. அந்தவகையில், நம்முடைய தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில்தான், Rule of Law - சட்டத்தின் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. அநத அளவிற்கு, ஜனநாயகத்தினுடைய மூன்று தூண்களில், மிக முக்கியமான தூணாக இருக்கின்ற இந்த நீதித் துறை, சுதந்திரமாக இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாட்டு மக்கள் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

தந்தை பெரியார் அய்யாவினுடைய பிள்ளையாக, பேரறிஞர் அண்ணாவினுடைய தம்பியாக, தலைவர் கலைஞர் அவர்கள், இந்த நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கின்ற காலத்தில்தான், சமுதாயச் சிந்தனையாக, நாட்டிலே புரட்சிகரமான சட்டங்கள், கொண்டு வந்திருக்கிறார் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

1967-69-ல், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில்தான், தந்தை பெரியாரின் கனவான, சுயமரியாதைத் திருமணச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்பதை நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, 1971-76 ஆம் ஆண்டைய, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின்போதுதான், தலைவர் கலைஞர் அவர்களால், நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு, ஏழை விவசாயிகள், ஏழைக் குடியானவர்கள், மிகப் பெரும்பான்மையாகப் பயன்பட்டார்கள் என்பதை நான் இங்கே பணிவோடு, இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, 1989-91-ல் தி.மு.க. ஆட்சியின்போதுதான், 1956-வது ஆண்டைய, இந்து வாரிசுரிமைச் சட்டத்தினுடைய திருத்தத்தைக் கொண்டுவந்து, பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை உண்டு என்ற சட்டம் வந்ததன் விளைவாக, இப்போது தமிழ்நாட்டில் பெண்களுடைய நிலை உயர்ந்துள்ளது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதன்மூலமாகத்தான், தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த அந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான், இப்பொழுது மத்திய அரசும் அதுபோன்ற சட்டத்தை இந்தியாவிலும் பெண்களுக்கு, ஆண்களுக்குச் சமமாகச் சொத்தில் பங்கு உண்டு என்பதைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அந்த அளவிற்கு, இந்தியாவிற்கே வழிகாட்டியாக சட்டத் துறையில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தியாவிற்கு வழிகாட்டியாகிய தலைவர் கலைஞர் அவர்கள், மிகப் பிற்படுத்தபபட்டவர்களுக்கான, தனி இடஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன்மூலமாக மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கல்வியில், படிப்பில் இடஒதுக்கீடு கிடைப்பதற்கான ஒரு வாய்ப்புக் கிடைத்தது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



அதேபோன்றுதான் இப்போது, 2006 ஆம் ஆண்டு இஸ்லாமியர்களுக்கு, கிறிஸ்தவர்களுக்கென தனி இடஒதுக்கீட்டுச் சட்டம் கொண்டுவரப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள். எனவே, தலைவர் அவர்கள் சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாவலராக இருக்கிறார்கள் என்பதை, மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறார் என்பதை நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அதேபோன்றுதான் தகவல் அறியும் உரிமைச் சட்டம். அதில் 10 ரூபாய்க்கான நீதிமன்றக் கட்டண வில்லையை ஒட்டினால் போதும் என்ற திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள். அதன்மூலமாக 20-3-2007 அன்று G.O.Ms.No. 72-ன்படி வங்கியினுடைய வரைவோலை எடுத்துத்தான் தகவல் கேட்கவேண்டுமென்ற நிலைமை மாறி, 10 ரூபாய் நீதிமன்றக் கட்டணத்தினுடைய வில்லை ஒட்டினால் போதும் என்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அளவிற்கு பல்வேறு புரட்சிகரமான சட்டங்களைக் கொண்டு வந்ததன் விளைவாக, தந்தை பெரியாரின் கனவுகள், பேரறிஞர் அண்ணாவின் கனவுகள் இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

சாதாரண, சாமானிய, ஏழையெளிய, இல்லாத மக்களுக்கு, சட்டத்தின் வழியாக பல்வேறு திட்டங்கள் அவர்களுக்குக் கிடைப்பதற்கான வழிகளை இந்த அரசு இப்போது கொண்டு வந்திருக்கிறது என்பதை இங்கே பணிவோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது நீதித் துறைக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய அ.தி.மு.க-வினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள், தங்களுடைய ஆட்சிக் காலத்தில் நீதித் துறைக்கு அதிகமாகச் செய்ததாகச் சொன்னாகள். ஆனால், கடந்த 5 ஆண்டுக் காலமாக நீதிமன்றங்களில் கடைநிலை ஊழியர்கள், Sweeper-கள், தோட்டக் காவலர்கள், ஆர்டர்லிகள் போன்ற பணியாளர்கள் நியமனம் செய்யப்படாமலிருந்தது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் கடந்த காலத்தில் தமிழகம் எங்குமுள்ள நீதித் துறையில் காலியாக இருந்த கடைநிலை

[திரு. த. தியோடர் ரெஜினால்டு] [2007 ஏப்ரல் 13

ஊழியர்கள்வரை நியமனம் செய்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு நீதித் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து, பணியாளர்களை நியமனம செய்து நீதித் துறையை இப்போது Computer-மயம் ஆக்கிட இந்த அரசு எடுத்து வருகின்ற முயற்சிகளை நான் பாராட்டுகிறேன்.

இப்போது கோரிக்கைகளாக, நீதித் துறையில் காலியாக உள்ள Munsif, Magistrate, சுருக்கெழுத்தர், தட்டச்சர் போன்ற அடுத்தகட்டப் பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்ய நான் பணிவோடு வேண்டுகிறேன்.

+2 பாடத்திட்டம் படிக்கின்ற மாணவர்களில், விஞ்ஞானம் படிக்கின்ற மாணவர்கள் மருத்துவப் படிப்புக்குச் செல்கின்றார்கள். கணிதம் படிக்கின்ற மாணவர்கள் பொறியியல் துறைக்குச் செல்கின்றார்கள். அதேபோன்று சட்டத்தையும் +2 மாணவர்களுக்குப் பாடமாகக் கொண்டுவந்து சட்டம் படிக்கின்ற மாணவர்கள், +2 படிக்கின்ற மாணவர்கள் நேரடியாக சட்டப் பட்டப்படிப்பு படிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதன்மூலமாக தமிழகம் எங்கும் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் சட்டம் படிக்கின்ற ஒரு வாய்ப்பு மாணவர்களுக்கு கிடைக்கப் பெறுவதன்மூலமாக கிராமத்தில் வாழ்கின்ற மாணவர்களும், சட்டத்தினுடைய அடிப்படைப் படிப்பை அவர்கள் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதன்மூலமாக சட்டம் முடித்து, சட்டத்தில் பட்டம் படித்துக்கொண்டிருக்கின்ற ஆசிரியர்களை நியமனம் செய்வதன் மூலமாக வேலை இல்லாமல் இருக்கின்ற வழக்கறிஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்ற ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதை மிகப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, சட்டம் பயின்று மூத்த வழக்கறிஞர்களிடம் பயிற்சி பெறுகின்ற இளம் வழக்கறிஞர்களுக்கு, அவர்கள் பயிற்சிக் காலத்திலே மருத்துவ மாணவர்களுக்கு வழங்கப்படுவதுபோன்ற ஓராண்டு கால பயிற்சி உதவித் தொகை வழங்க வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வழக்கறிஞர்கள் இறக்கின்றபோது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சேம நல நிதியை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தித் தரவேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



2007 ஏப்ரல் 13] [திரு. த. தியோடர் ரெஜினால்டு]

Munsif, Magistrate போன்ற பணிகளுக்கான தேர்வுகளின்போது, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு வயது வரம்பு 38 என்றிருப்பதை மாற்றித்தர வேண்டுமென்று மிகப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான பத்மநாபபுரத்தில் 200 வருடமான, பழமைவாய்ந்த நீதிமன்றங்கள் இரண்டு இடங்களிலே இருக்கின்றன. Magistrate Court.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** Magistrate Court காவல் நிலைய எல்லைக்குள்ளும், உரிமையியல் கோர்ட்டுகள் வேறு ஒரு பகுதியிலும் இருக்கின்ற காரணத்தினால் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டித்தர பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், என்னுடைய மாவட்டத்தினுடைய தலைநகரமான நாகர்கோவிலிலும் ஒரு புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டப் பிரச்சினை. எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டம் ஒரு சின்ன மாவட்டம். நாங்கள் ஒரு மணி நேரம் பிரயாணப்பட்டு, கேரள மாநிலத்தோடு இருந்த நாங்கள், இன்றைக்கு 15 மணி நேரம் பிரயாணம் செய்து சென்னைக்கு வருகிறோம். எங்களுடைய மாவட்டத்தில் அரசுக் கலைக் கல்லூரிகளோ, அல்லது பெரிய நிலபுலன்களோ இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் வேளாண்மைத் துறையிலே இருந்து தனியாக கால்நடை பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்கள். தற்போது தோட்டக்கலை பல்கலைக்கழகத்தை உருவாக்கி அதை எங்களுடைய மாவட்டத்தில், என்னுடைய தொகுதியாகிய உதயகிரிகோட்டையில் அமைத்துத் தர வேண்டுகிறேன். நாங்கள் கேரள மாநிலத்தோடு இருந்தபோது, அன்றைய கேரள சர்க்கார் அந்த இடத்தைத் தேர்வு செய்து இப்போது திருவனந்தபுரத்தில் இருக்கின்ற விவசாயக் கல்லூரியை அந்த இடத்தில் நிறுவுவதற்கான

கருத்துருவை அப்போது எடுத்திருந்தார்கள். எனவே, தாயுள்ளம் கொண்ட தலைவர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு ஒரு தோட்டக்கலைக் கல்லூரியைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரேயொரு பிரச்சினை. எங்கள் மாவட்டத்தில் 2001 ஆம் ஆண்டு மத்திய அரசின்மூலமாக சுமார் 100 கோடி ரூபாய் செலவில் ஒரு விளையாட்டுப் பயிற்சி மையம், SAI Centre ஆனது அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது. ஆனால் சுனாமி வந்ததன்விளைவாக தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் போதுமானதாக இல்லை, பாதுகாப்பு இல்லை என்று சொல்லி அந்த இடத்தை மாற்றினார்கள். தற்போது என்னுடைய தொகுதியில் அதற்கான இடம் இருக்கிறது. எனக்குக் கிடைத்த செய்தி என்னவென்று சொன்னால், அது எங்கள் மாவட்டத்தைவிட்டு நெல்லை மாவட்டத்திற்குப் போவதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணைகூர்ந்து தாயுள்ளத்தோடு எங்கள் மாவட்டத்திற்கு என்று ஒதுக்கித்தந்த அந்த SAI Centre-ஐ தொடர்ந்து எங்கள் மாவட்டத்திலே இருப்பதற்கு நீங்கள் உதவி புரிய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** எனவே, தாயுள்ளம் கொண்ட தலைவர் அவர்கள் அருள்கூர்ந்து எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர நான் பணிவோடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

***திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து வழக்கறிஞரான என்னை, அரசியல் ஆர்வமூட்டி காவேரிப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினராக்கி, 2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மிக முக்கிய துறையான நீதி நிர்வாகம், சட்டத் துறை ஆகிய மானிய கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த, கொள்கையில் பெரியாராய், சுயமரியாதைச் சுடராய், சொல்லும் சொல்லெல்லாம் வெல்லும்



தன்மைகொண்டவராகத் திகழும் சிந்தனையின் சிற்பி, தமிழினப் போராளி, மருத்துவர் அய்யா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், அயராது உழைத்து அரும்பணி ஆற்றி வரும் மாநிலத் தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும், வேறுபாடுகளையும், மாறுபாடுகளையும் களைந்து நடுநிலை தவறாது நல்வழியில் பேரவையை நடத்தும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்தே நிமிடங்கள்தான் அளிக்கப்படும். (சிரிப்பு) இதேமாதிரிப் பேசினால் எட்டு நிமிடங்களில் முடித்துவிடுவேன்.

***திரு. த.அ. மேகநாதன்:** மக்களின் வாழ்க்கைத் தரமே ஒரு மாநிலத்தின் வளர்ச்சியை அறிய உதவும் அளவுகோல் என்பதனை நன்கு உணர்ந்து, ஜாதி மத பேதங்களுக்குச் சாவுமணி அடித்து, மத நல்லிணக்கத்தை மலரச் செய்து, மாவட்டந்தோறும் சமத்துவபுரம் உருவாக்கி, மடிந்து வந்த மக்களுக்கு மனித நேயத்துடன் மறுவாழ்வு அளித்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசமைப்புச் சட்டம் ஜனநாயகத்தின் மூன்று தூண்களாக விளங்குகின்ற நீதி, நிர்வாகம், சட்டம் இயற்றுதல் ஆகியவை ஒன்றோடொன்று இணைந்து செயல்பட்டால்தான் ஒரு நாட்டின் ஜனநாயகம் காப்பாற்றப்படும். ஜனநாயகத்தின் இரண்டு தூணகளாக இருப்பது நீதியும், நிருவாகமும் ஆகும். சட்டம் என்பது நன்னெறி மாற்றத்தைக் கொண்டுவரும் ஒரு கருவியாகும். சட்டமன்றமானது காலத்துக்கு ஏற்ற, மக்களுக்குத் தேவையான சட்டம் இயற்றும் நடைமுறையை மேற்கொள்கின்ற ஓர் அதிகார அமைப்பாகும். அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்குச் சட்டம் தேவைப்படுகிறது. தனிமனிதனோ அல்லது அமைப்போ யாராக இருந்தாலும் நியாயத்தை எதிர்பார்க்கின்ற கடைசிப் புகலிடம் நீதித் துறைதான்.

சட்டம் எல்லோருக்கும் மேலானது. சட்டம் மனித சமுதாயத்தின் மாண்பைப் பேணிக் காப்பதாகும். மக்கள் பிரதிநிதிகளால் இயற்றப்படும் சட்டம், பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்துவதாகும். சட்டரீதியாக தீர்வுகளை நிலைநிறுத்துவதாகவும் இருத்தல் வேண்டும். சட்டம் ஒரு சிலந்தி வலைபோன்றது. அதில் சிறுபூச்சிகள் மட்டுமே சிக்கிக்கொள்கின்றன. பெரியவை அதில

சிக்குவதில்லை என்ற நிலை மாற வேண்டும். சட்டம் ஒரு சிங்கத்தின் குகை போன்றது. அதில் சிக்கியவை புலி, கரடி, யானை, எதுவாக இருந்தாலும் தப்பமுடியாது என்ற நிலை உருவாக வேண்டும். இந்நிலை உருவாக, சமீபத்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் ஒரு தொடக்கம் எனக் கூறலாம்.

இநதிய நீதியரசர் ஏ.ஆர். லட்சுமணன் தனது தீர்ப்பில், "நீதிமன்றங்களை ஏமாற்ற முயலுவோரைச் சும்மா விடக்கூடாது" என்றும், உ்யர் நீதிமன்ற நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் தனது தீர்ப்பில், "குத்தகை முடிந்தும் வெளியேறாமல் இருப்பது ஆக்கிரமிப்புச் செயலே" என்றும், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அசோக்குமார் தனது தீர்ப்பில், "காசோலைக்கும் உரிய காலத்தில் பணம் செலுத்தாதவர் குற்றவாளியே" என்றும், நீதியரசர் சதாசிவம் தனது தீர்ப்பில், நீதிமன்றச் சட்டவரம்புகளை ஆட்சித் தலைவர்கள் மீறக்கூடாது" என்றும் கூறியுள்ளார்கள்.

*பிற்பகல் 12-10*

தமிழக மக்கள் சட்டத்தை மதித்து வாழ்ந்து வருவதால், தமிழகம் அமைதிப் பூங்காவாக இருந்து; வருகிறது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. நீதி நிர்வாகத்தைத் தமிழகத்தில் எப்படி நெறிமுறைப்படுத்த முடியும் என்பதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவில் நீதி கிடைக்க ஏதுவாக என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடும் சட்டங்களும், நீதிமன்ற நெறிமுறைகளும் பாமர மக்களுக்குப் புரியும் வகையில், சட்டங்களையும், நீதிமன்றத் திட்டங்களையும் தமிழாக்கம் செய்வது அவசியமாகும்.

எங்கள் நிறுவனத் தலைவர் தமிழினப் போராளி, மருத்துவர் அய்யா அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தின் அனைத்து நிலைகளிலும் மற்றும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு மொழியாக தமிழ் இடம் பெறவேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கையை வைத்து வநதுள்ளார்கள். அதற்கேற்ப, நமது சட்டமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றிய தமிழினத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அது சம்பந்தமாக மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் ஒப்புதல் பெறவும் தமிழக அரசு முனைப்போடு ஆவன செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



அனைத்து சட்டப் புத்தகங்களையும் தமிழில் கொண்டு வருவதற்கான முயற்சி முழுமைபெற வேண்டும். அதுவும், அதனை அரசே வெளியிடவேண்டும். விரைவு நீதிமன்றங்களை அதிகப்படுத்த வேண்டும். அப்போதுதான் மக்கள், நீதிமன்றத்தின்மீது நம்பகத் தன்மை இழக்காமலும், கட்டப் பஞ்சாயத்துக்களின்மீது கவனம் செலுத்தாமலும் இருப்பார்கள்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, குடிமக்கள் அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வதே அரசின் நோக்கமாகும். நீதியை நிர்வகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். நீதிமன்றங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு அனைத்து வசதிகளையும் அரசே செய்து கொடுப்பது, அரசின் கடமைகளுள் ஒன்றாகும்.

உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் நியமனத்தில் தகுதி, திறமையுடையவராக ஏராளமானோர் இருந்தும், பிற்படுத்தப்பட்டோா, தாழ்த்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபானமை மற்றும் மலைவாழ் பிரிவினருக்குச் சமூக நீதி கிடைக்கவில்லை. எனவே, சமூக நீதி கிடைக்கும்வகையில், இடஒதுக்கீட்டு முறையை அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் தென்கோடியிலுள்ள ஏழைத் தமிழ் மக்கள், நீதி கேட்டு டெல்லி செல்லவேண்டிய அவல நிலையைப் போக்க, சென்னையில் ஓர் உச்ச நீதிமன்றக் கிளை அமைக்க, தமிழகத்திற்குக் கலங்கரை விளக்கமாக இருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உச்ச நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், அரசியல் சட்டப் பிரிவு 32-ன்படி, அதன் கிளையை எங்கு வேண்டுமானாலும் அமைக்கலாம்.

"Without prejudice to the powers conferred on the Supreme Court by Clauses (1) and (2), Parliament may, by law, empower any other Court to exercise within the local limits of its jurisdiction, all or any of the powers exercisable by the Supreme Court under Clause (2)".

Article 130, " The Supreme Court shall sit in Delhi or in such other place or places, as the Chief Justice of India may, with the approval of the President, from time to time, appoint" என்று கூறப்பட்டுள்ளது.

பொதுவாக, நமது நாட்டில் நீதி மிகத் தாமதமாகவே வழங்கப்படுவதைக் காண்கின்றோம். தாமதமாக வழங்கப்படுகின்ற நீதி, மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம் என்று கூறுவார்கள். எனவே, நீதி வழங்கப்படுவது மட்டும் போதாது. அது வளைந்துகொடுக்காமல் தாமதமின்றி வழங்கப்பட வேண்டும். அதற்கான சட்டத் திருத்தங்களையும், வழிமுறைகளையும் நாம் விரைவில் காணவேண்டும்.

மாநில அளவில் நீதித் துறையின் நிலை, பரவலாகப் பிரிக்கப்பட்டு. உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம் என இயங்கி வருவதோடு, அரசு, மக்களின் நலன் கருதி சமுதாய சூழ்நிலைக்கேற்ப, தொழிலாளர்கள் நீதிமன்றம், குடும்ப நீதிமன்றம், மனித உரிமையியல் நீதிமன்றம், நுகர்வோர் நீதிமன்றம் என மேற்படி நீதிமன்றங்கள் இருந்தாலும், நீதிமன்றங்களில் சில நீதித் துறை நடுவர்கள் நியமிக்கப்படாமல் உள்ளதால், வழக்குகள் நிலுவையில் உள்ளன. எனவே, காலியாக உள்ள இடங்களில் நீதிபதிகளை நியமிக்க, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசமைப்புச் சட்டத்தில அளிக்கப்பட்டிருக்கும் உரிமைகளைப் பாதுகாக்கும் காவலராக நீதிபதிகள் செயலாற்ற வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாகுபாடின்றி, நீதித் துறை முடிவுகளை அமைத்திட வேண்டும். சமூக நீதிக் கொள்கையில், அதாவது இடஒதுக்கீட்டு முறையில், கீழ்மட்டத்தில் வாழும் மக்களின் உரிமைகளை நிலைநிறுத்த, மத்திய மாநில சட்டத் துறைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீதிமன்றங்களில் வழக்குகள் காலதாமதமாவதற்கு இன்னொரு காரணம், அரசு வழக்கறிஞர்கள் (A.P.P.) நியமிக்கப்படாமல் இருப்பதாகும். எனவே, காலியாக உள்ள பணியிடங்களில் அரசு வழக்கறிஞர்களை உடனே நியமிக்க வேண்டும். வழக்குகளையெல்லாம் விரைவில முடிக்க வேண்டுமென்றால், இந்த ஆண்டு நீதித் துறைக்கு ஒதுக்கிய நிதி ரூ.270 கோடி என்பது, மிகக் குறைவே. சுமார் 1,000 கோடி ரூபாயாவது ஒதுக்கியிருந்தால்தான், பத்தாண்டு காலமாக நிலுவையில் உள்ள வழக்குகளை மூன்றாண்டு காலத்திற்குள் முடிக்க முடியும்.

*பிற்பகல் 12-15*

பல இடங்களில் புதிய நீதிமன்றங்கள் உருவாக்கப்படவேண்டும். மலைப் பகுதியில் வாழும் மக்கள் பயனடையும்வகையில் நடமாடும் 



நீதிமன்றங்கள் அமைக்கப்படவேண்டும். மேலும், மாவட்டந்தோறும மாவட்டத் தலைமையிடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

ஏழை, எளியோருக்கு எளிதாக நீதி கிடைக்கும்வகையில் இலவச சட்ட உதவி மையங்கள் வலிமைப்படுத்தப்படவேண்டும். இலவச சட்ட உதவிக் கழகம்மூலம் கிராமப்புறங்களில் சட்டத்தைபபற்றி விழிப்புணர்வுப் பயிற்சி நடத்தப்படவேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. த.அ. மேகநாதன்:** வழக்கறிஞர்களால் ஒட்டப்படும் ஸ்டாம்ப்மூலம் அரசுக்கு நல்ல வருவாய் உள்ளதால், வழக்கறிஞர்களுக்குக் கொடுக்கப்படும் சேமநல நிதியை ரூபாய் இரண்டு இலட்சத்திலிருந்து ரூபாய் ஐந்து இலட்சமாக உயர்த்த ஆவன செய்யவேண்டும்.

தமிழகத்தில் உள்ள சட்டக் கல்லூரிகளில், 1996 திராவிட முன்னேற்றக் கழக அரசால் நியமிக்கப்பட்டு, கடந்த 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிவரும் 15 சட்டப் பேராசிரியர்களின் பணி, நிரந்தரம் செய்யப்படவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிறது, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. த.அ. மேகநாதன்:** எனது தொகுதிப் பிரச்சினை, எனது தொகுதி வழியாக 10 புதிய பேருந்துகளை இயக்கிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன.

எனது தொகுதியின் தேவையான, எனது சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பண்ணந்தூர் கிராமத்திற்கும் அரசம்பட்டி கிராமத்திற்கும் இடையே செல்லும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டவேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

எனது தொகுதியில் பண்ணந்தூர் ஊராட்சியைச் சுற்றியுள்ள பண்ணந்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு கிளை கால்நடை மருத்துவமனை அமைக்கப்படவேண்டும்.

மேலும், எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வீரமலை ஊராட்சி, வீரமலை ஏரி உள்ளிட்ட 29 ஏரிகள பயன்பெறும்வகையில்

K.R.P. அணையிலிருந்து பாளேகுளி ஏரி வரை வரும் இடது புறக் கால்வாயை நீட்டிக்கவேண்டும்.

எனது சட்டமன்றத் தொகுதியில் ஒரு சட்டக் கல்லூரி அமைக்கப்படவேண்டும். இதனால், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களிலுள்ள பின்தங்கிய மக்கள் பயன்பெறுவார்கள். (குறுக்கீடுகள்) எனது தொகுதிக்குட்பட்ட பையூர் ஊராட்சி, பையூர் கிராமத்தில்... (குறுக்கீடுகள்) வேளாண்மைக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மேகநாதன், point of order கேட்கிறார்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தில் எங்களுக்கு ஒரு நீதியையும், மற்றவர்களுக்கு ஒரு நீதியையும் நீங்கள் வழங்குவது சரிதானா? நாங்கள் ஒரே ஒரு நிமிடம் கேட்டும், அதற்கெல்லாம் நீங்கள் அனுமதிக்க முடியாது என்று சொன்னீர்களே, இது சரிதானா என்பதை இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நீங்கள் எவ்வளவு நேரம் பேசியிருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்துகொண்டு கேட்டிருந்தால் நல்லது. (குறுக்கீடுகள்) திரு. மேகநாதன், நீங்கள் பேசி முடித்துவிடுங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. வேண்டாம். (குறுக்கீடுகள்) பிரச்சினை வந்துவிடும்.

**திரு. த.அ. மேகநாதன்:** மேலும், எனது தொகுதியில் இசை ஆர்வலர்கள் அதிகம் உள்ளதால் இங்கு ஓர் இசைக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கெலமங்கலம் ஒன்றியம் இராயக்கோட்டை பகுதியில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதால், துணை மின் நிலையம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெடுங்கல் ஊராட்சி, நெடுங்கல் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் உள்ள டிரான்ஸ்ஃபார்மரை நீக்கி, மாணவ, மாணவிகள் நலனைப் பாதுகாக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



ஒரே ஒரு நிமிடம். எனது தொகுதியில் பண்ணந்தூர் கிராமத்தில் உள்ள அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதிக்குட்பட்ட காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் கிராம மாணவர்கள் அதிகமாகப் பயின்று வருகின்றனர். ஆகையால் இப்பள்ளிக்கு ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. மகேந்திரன் (குறுக்கீடுகள்) திரு. மேகநாதன், நீங்கள் முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) ஏனென்றால், அமைச்சர் நீண்ட நேரம் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. த.அ. மேகநாதன்:** கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டத்தை உள்ளடக்கி கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய போக்குவரத்துக் கோட்டத்தை அமைக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது ஜனநாயகத்தில் மூன்றாவது முக்கியத் தூணாக, இந்திய அரசியல் சாசனம் ஏற்றுக்கொண்டுள்ள நீதி நிருவாகத் துறை மீதும், சட்டத் துறை மீதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பான கருத்துகளைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமீபத்தில் நடந்த மாநில முதல்வர்கள் மாநாட்டில் நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாக பத்திரிகைகளிலே வந்திருக்கக்கூடிய செய்தி என்பது, சென்னை உயர் நீதிமன்றம், மதுரை உயர் நீதிமன்றக் கிளைகளில் *3,72,973* சிவில் வழக்குகளும், *38,985* கிரிமினல் வழக்குகளும் நிலுவையில் உள்ளதாகவும், அதேபோல, கீழ்க் கோர்ட்டுகளிலே *4,43,656* சிவில் வழக்குகளும் *4,13,153* கிரிமினல்

வழக்குகளும் நிலுவையில் உள்ளதாகவும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இப்படி வழக்குகள் நிலுவையில் இருக்கக்கூடிய காரணத்தினால் தமிழகத்தில் கோர்ட்டுகளினுடைய எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டிய, அதேபோன்று நீதிபதிகள் மற்றும் ஊழியர்களது எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளதாகத் தெரிகிறது.

பிற்பகல் 12-20

நான் முதலிலே தெரிவிக்க விரும்புவது, இப்போது மாநிலத்தில் திருவள்ளூர், திருவாரூர், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மாவட்ட நீதிமன்றங்கள் என்பது இல்லாமல் இருக்கிறது. அந்த நீதிமன்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று திருப்பூர், ஈரோடு நகரங்களிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரூரில் ஒரு நீதிமன்றமும், குழித்துறை, குடியாத்தம் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சமீபத்தில் நடந்த மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் ஆற்றிய உரையிலே ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். "நீதித் துறை தனக்கு இட்ட பணியை ஆர்வமாகச் செய்வதற்கும், அத்துமீறி அதிகாரம் செய்வதற்கும் வித்தியாசம் உள்ளது. அத்துமீறக்கூடாது. பிற துறைகளின் பணிகளையும் தானே செய்ய நீதித் துறை முற்படக்கூடாது" என்று முதல்வர்கள் மாநாட்டிலே கூறியிருக்கிறார்கள். நீதித் துறையின் தலையீடுகள் என்பது இன்றைய காலகட்டத்தில் கூடுதலாகிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை உருவாகிக் கொண்டிருக்கின்றது.

இந்திய நாட்டினுடைய அரசியல் சாசனப் பிரிவு 31 (பி) மூலம் உருவாக்கப்பட்ட 9-ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட்ட சட்டங்களை 1973 ஆம் ஆண்டிற்குப் பின்பாகச் சேர்க்கபபட்டச் சட்டங்களை மறுபரிசீலனை செய்வோம் என்று சமீபத்திலே உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. 1973 ஆம் ஆண்டிற்குப் பின்புதான், பல்வேறு மாநிலங்களிலே, நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு



வரப்பட்டிருக்கின்றன. பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 27 சதவிகித இடஒதுக்கீடு என்பது கொண்டு வரப்பட்டிருக்கின்றது. தனியார் நிறுவனங்கள் அரசுடைமையாக்கபபட்டிருக்கின்றன. கடந்த காலத்திலே கொடுக்கப்பட்ட தீர்ப்புகள் மாற்றி எழுதப்படுகின்றன. சமீபத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவிகித இடஒதுக்கீட்டில் உச்ச நீதிமன்றம் தலையிட்டு இருக்கிறது. இந்தப் போக்கு ஆபத்தானது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

தமிழகத்தில்கூட நுழைவுத் தேர்வு நடத்த வேண்டுமா, நடத்த வேண்டாமா என்ற விவாதம் என்பது உயர் நீதிமன்றத்திலே நடந்துகொண்டிருக்கிறது. பாராளுமன்ற, சட்டமன்ற அதிகார வரம்பிற்குள் நுழைவதன்மூலம், நிர்வாக வரம்பிற்குள் நுழைவதன்மூலம், தனியார் துறையை, சொத்துடைமையாளர்களை, பன்னாட்டு மூலதனத் தேவைகளைப் பாதுகாப்பதற்கு இவை இட்டுச் செல்கின்றன.

சமீபத்தில் தனியார் சுயநிதிக் கல்வி நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்கு கேரள மாநில அரசாங்கம் கொண்டு வந்த சட்டம் என்பது அந்த நீதிமன்றத்தால் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலம் தனியார் நிறுவனங்கள் கொள்ளையடிப்பதற்கு நீதிமன்றங்களே பச்சைக்கொடி காட்டக்கூடிய போக்கு உருவாகியிருக்கிறதோ என்ற அச்சம் மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களிலே, உச்ச நீதிமன்றம் வழங்கிய பல நியாயமான தீர்ப்புகளையும் மறுதலித்து, நிறுவனங்களுக்கு ஆதரவான தீர்ப்பாக மாற்றப்படுகிறது. இங்கும் சமூக நீதி புறக்கணிக்கப்படுகிறது என்று நாங்கள் கருதுகின்றோம்.

சமீபத்தில் கேரள உயர் நீதிமன்றம் மாணவர் அமைப்புகளைத் தடை செய்யவும், கல்வி நிலையங்களில் மாணவர்களின் சுதந்திரமான நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் தீர்மானித்துள்ளது. இந்தப் பின்னணியில், நீதித் துறை அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை தன்னுடைய வரம்பிற்குள் நின்று செயல்பட நீதித் துறையில் சீர்திருத்தம் தேவைப்படுகிறது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

அதனுடைய முதல் படியாக தேசிய நீதித் துறை ஆணையம் National Judicial Commission என்பது உருவாக்க வேண்டியுள்ளது. தற்போதுள்ளதுபோல் அந்தக் கமிஷனிலே நீதிபதிகள் மட்டுமல்லாமல், சமூக நலனில் அக்கறையுள்ளவர்களையும் உள்ளடக்கியதாக அந்தக் கமிஷன் என்பது உருவாக்கப்பட வேண்டும் என்பதையும், இதன்மூலம்தான் நீதிபதிகள் நியமனம் என்பதும், இடமாற்றம் என்பதும், punishment என்பதும் அமலாக்கப்பட வேண்டும் என்பதையும், நீதித் துறையினர் யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை என்பதிலிருந்து மாற்றி, அவர்களது பணிகளை ஆய்வு செய்ய ஆணையத்திற்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்ற இந்தக் கோரிக்கைகளை மத்திய அரசிடம் நமது மாநில அரசு வலியுறுத்த வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தக் கட்டுப்பாடுகள் இல்லையென்றால், கடந்த 150 ஆண்டுகளில் போராடிப் பெற்றிருக்கினற உரிமைகள் 50 ஆண்டுகளில் பெற்றிருக்கக்கூடிய சட்டபூர்வமான ஜனநாயக உரிமைகள் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதி திராவிட மக்களின் உரிமைகள் அனைத்தும் கேள்விக்குரியதாக மாற்றப்படும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அஞ்சுகிறது.

உலக வங்கி, பன்னாட்டு நிறுவனம், உலக வர்த்தக அமைப்பு ஆகியோர் உருவாக்க விரும்புகின்ற சுரண்டல், கொள்ளையர்கள் சமூகத்திற்கு நாம் அடிமைப்படுத்தக்கூடிய அபாயம் இருக்கிறது. இதைத்தான் அவர்கள் **New World Order** என்று அழைக்கிறார்கள். இதில் நாம் தலையிட வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற நீதிமன்றங்கள் சம்பந்தமான விவரங்கள் என்பது சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றிலே குடும்ப நீதிமன்றங்கள் மூன்று, மகளிர் நீதிமன்றங்கள் 7, தொழிலாளர் நீதிமன்றங்கள் 7, என்ற விவரம் என்பது இருக்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் இந்த நீதிமன்றங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை முதலிலே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், உயர் நீதிமன்றத்தில், நீதிமன்றத்தில் தமிழை வழக்கு மொழியாக ஆக்க வேண்டும் என்று நாம் இயற்றிய தீர்மானம் இன்னும் ஜனாதிபதியினுடைய ஒப்புதல்



பெறாமல் இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்தத் தீர்மானத்தை ஜனாதிபதியினுடைய ஒப்புதல் பெறுவதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர்களின் எழுத்தர்களுக்கான சேம நல நிதியை ஒரு இலட்சமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். வழக்கறிஞர்களுக்கான சேம நல நிதி இரண்டு இலட்சத்திலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும்.

அதேபோன்று இளம் வழக்கறிஞர்களுக்கான மாத உதவித் தொகையை மூவாயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-25*

சட்டத் துறையைப் பொறுத்தவரை, தமிழகத்திலுள்ள அனைத்து சட்டக் கல்லூரிகளின் தரத்தை மேம்படுத்தி, பி.எல். (ஆனர்ஸ்) படிப்பிற்கு நிகரான தரத்தோடு சட்டக் கல்லூரிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

பி.எல். (ஆனர்ஸ்) படிப்புக்கு 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் உள்ளார். இன்றைய சூழலுக்குத் தேவையான தரமான கல்வி பி.எல். (ஆனர்ஸ்) மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அரசுக் கல்லூரிகளில் பி.எல். படிக்கும் மாணவர்களுக்குப் போதுமான ஆசிரியர்கள் இல்லை. கல்லூரி முதல்வர்களைப் பெற வேண்டுமென்றால்கூட போராட வேண்டிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, பி.எல். (ஆனர்ஸ்) மாணவர்களுக்குச் செய்யப்பட்ட வசதிகள் அனைத்தும், அனைத்து அரசுக் கல்லூரிகளில் படிக்கும் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் செய்து தரப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

பணம் கொடுத்தால் தரமான கல்வி என்று கடந்த கால ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட அந்த முறையை மாற்றி, அனைவருக்கும் தரமான கல்வி கிடைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதேபோன்று, பி.எல். படிப்புகளுக்கு நுழைவுத் தேர்வு மூலம் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவது தொடர வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி, மதுரை சட்டக் கல்லூரியைத் தவிர, ஏனைய கல்லூரிகளிலே மாணவ, மாணவியர்களுக்கான விடுதிகள் இல்லாமல் இருக்கின்றன. அனைத்துக் கல்லூரிகளிலும் மாணவ, மாணவிகளுக்கான தனித்தனியான விடுதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்த விடுதிகள் கல்லூரி வளாகத்திற்குள் இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைப்பதோடு, சட்டக் கல்லூரிகள் தொடங்க தனியாரை அனுமதிப்பதில்லை என்று தமிழக அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளதை மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதேநேரத்தில், சிலர் நீதிமன்றம் மூலமாக தனியார் சட்டக் கல்லூரிகளை ஆரம்பிக்க முயற்சி செய்து வருகின்றனர். அவர்களின் முயற்சிக்கு எந்த வாய்ப்பும் தராத வகையில் தமிழக அரசு நீதிமன்றத்தில் வாதாட வேண்டும். மேலும், அரசு புதிய சட்டக் கலலூரிகளைத் தொடங்க வேண்டும்.

சட்ட மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களை தமிழக அரசே தயாரித்து விநியோகிக்க வேண்டும். பாடப் புத்தகங்கள் தரமான சட்ட வல்லுநர்களால் தயாரிக்கப்பட வேண்டும்.

சட்டக் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கடன் அளிக்கப்பட வேண்டும்.

அதேபோல், சட்ட மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை கல்வி ஆண்டினுடைய தொடக்கத்தில் வழங்கப்பட வேண்டும்.

சட்ட முதுகலைப் படிப்புகளுக்கும் நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டு, மாணவர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும்.

அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் மாணவர்கள் கலை, கலாச்சார விழாக்கள் நடத்தப்பட வேண்டும்.

உழவர் பாதுகாப்பு உதவிகளைத் தகுதியுடைய அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

கரூர் மாவட்ட நீதிமன்றம் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசசேகரன்.

**•திரு. எஸ். இராசசேகரன்:** பெருமதிப்பிற்குரிய பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் சட்டத் துறை மற்றும் நீதி நிர்வாகத்தைப் பற்றிப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை உங்கள்முன் வைக்க விரும்புகின்றேன்.

முதலாவதாக, கோரிக்கைகள் என்ற ஒன்றிரண்டை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். புதுக்கோட்டையில் ஒருங்கிணைந்த மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகிறது. அந்த மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை, திருச்சி மாவட்டம், லால்குடிக்கு மாற்றுவதற்காக கடந்த ஒரு வருட காலத்தில் இரண்டு முறை முயற்சிக்கப்பட்டிருக்கின்றது. உயர் நீதிமன்றத்தின் நிர்வாக வேண்டுகோளின் அடிப்படையில் அதை மாற்றுவதற்கான முயற்சி நடைபெற்றது. இந்த முயற்சி நடைபெற்றபோது, மாண்புமிகு மத்திய உள் துறை இணை அமைச்சர் அவர்களும், நானும், சில வழக்கறிஞர்களும் சட்டத் துறை அமைச்சரை சந்தித்து, இதை மாற்றக்கூடாது என்று வேண்டுகோளை வைத்தபோது, தற்போதைக்கு மாற்றம் இல்லை என்ற உறுதியை அளித்தார். தற்போதைக்கு மாறறம் இல்லை என்ற உறுதியை அளிக்கின்ற அதேநேரத்தில், தொடாந்து அந்த நீதிமன்றத்தை வேறு இடத்திற்கு மாற்றக்கூடாது என்கின்ற உறுதியை இந்த அவையில் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை இஙகே முதலாவதாக வைக்க விரும்புகின்றேன்.

அடுத்தபடியாக, ஆலங்குடி நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலையில் எங்களுடைய மாநிலச் செயலாளர் தோழர் தா. பாண்டியன் அவர்கள்மூலமாக ஈரோட்டிலுள்ள வழக்கறிஞர்கள் ஒரு வேண்டுகோளை வைத்திருக்கின்றார்கள். கடந்த 10, 15 நாட்களாக ஈரோடு நகரத்திலே இருக்கக்கூடிய பல்வேறு நீதிமன்றங்களை ஒரே இடத்தில் கொண்டுவர வேண்டுமென்பதற்காகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள இந்த மானியக் கோரிக்கையில் நல்ல அறிவிப்புகள் வரும் எனறு எதிர்பார்த்து, மாநிலச் செயலாளர் தோழர் பாண்டியன் அவர்கள் இந்த அவையிலே அந்தக் கருத்தைத் தெரிவிக்கச் சொல்லியதன்பேரில், இரண்டு நாட்களாக அதைக் கைவிட்டு விட்டார்கள் ஈரோட்டிலே இருக்கக்கூடிய அந்த நீதிமன்றங்கள் ஒருங்கிணைந்த நீதிமன்ற

வளாகமாக உருவாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை இங்கே நான் முன்வைக்கிறேன்.

*பிற்பகல் 12-30*

அடுத்தபடியாக, சட்டத் துறை மற்றும் நீதி நிருவாகத்தைப் பற்றிப் பேசுகின்றபோது, நமது நாட்டில் இப்போது சட்டத்தின் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்கு எந்த ஆபத்தும் இந்த நேரத்திலே கிடையாது. இருந்தாலும்கூட, இப்போது இருக்கக்கூடிய நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றமாக இருந்தாலும் சரி அல்லது உச்ச நீதிமன்றமாக இருந்தாலும் சரி, சாதாரண ஏழையெளிய மக்களுக்கு எதிரான தீர்ப்புகளை வழங்கிக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக, தொழிலாளர்கள் பெற்ற வேலைநிறுத்தம் என்ற உரிமையைப் பறிக்கக்கூடிய முறையில் வேலைநிறுத்தம் செய்யக்கூடாது என்கின்ற தீர்ப்பை வழங்கியிருக்கின்றார்கள். அதேபோல, ஜனநாயகத்திற்காகப் போராடக்கூடிய மக்களுக்கு எதிராக ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்துவதில் சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றார்கள். அதேபோல, இப்போது 27 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பற்றி ஒரு புதிய தீர்ப்பு வந்து, இந்திய நாடே இப்போது அதற்கான ஆலோசனைகளில் ஈடுபட்டிருக்கக்கூடிய ஒரு நிலையில் இருக்கின்றது. ஆகவே, நீதிமன்றங்கள் என்பது, மாண்புமிகு இந்திய நாட்டினுடைய பிரதம மந்திரி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவர்கள் ஒரு எல்லைக் கோட்டிற்குள் நின்று நீதியை வழங்காமல், எல்லைக் கோட்டைத் தாண்டியும் நீதியை வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, இந்தச் சூழ்நிலை தொடர்ந்து வளரக்கூடாது என்பதற்காக, இது ஏன் ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்துப் பார்ப்பதற்கு முதற்கொண்டுதான், தமிழக ஆளுநர் உரையில்கூட இந்திய அரசமைப்புச் சட்டம் மாற்றப்பட வேண்டும், திருத்தி எழுதப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை இந்திய மக்களுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே வைத்திருக்கின்றார்கள். ஆகவே, இந்த நீதிமன்றங்கள் குறிப்பாக உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் மக்களுக்கு எதிரான தீர்ப்புகள் வழங்குகிறபோது, அவற்றை எதிர்த்துப் போராட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பாராளுமன்றம், சட்டமன்றங்களுக்கு எதிரான தீர்ப்புகள் வந்துகொண்டேயிருக்கின்றன. ஆகவே, அவற்றை நாம் எதிர்த்துப் போராட வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே வைக்க விரும்புகின்றேன். நீதிமன்றங்களின் நடவடிக்கை பற்றி கருத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது என்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது.



நீதி கிடைப்பதில் காலதாமதமாவதைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக, இந்திய நாட்டில், அதுவும் தமிழ்நாட்டில் ஒரு வழக்கை எவ்வளவு காலம் நீட்டலாம் என்பதைப்பற்றி சாதாரண மக்கள்கூட அறிந்துகொள்ளக்கூடிய முறையில் இப்போது நீட்டிக்கொண்டே போகிறார்கள். இந்தத் தீர்ப்பு ஓராண்டில் வருமா அல்லது இரண்டாண்டுகளில் வருமா அல்லது 10 ஆண்டுகள் ஆகுமா என்று சொல்லவே முடியவில்லை. அந்த அளவுக்கு, எவ்வளவு காலம் அதை நீடிக்கலாம் என்ற அளவில் அதனுடைய வழக்கறிஞர்கள் அல்லது இங்கே இருக்கக்கூடிய பல்வேறு நபர்கள் எல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒரு தீர்ப்பு என்பது ஒரு காலத்திற்குள் கொண்டு வரப்பட வேண்டும். தீர்ப்பைச் சொல்கின்றபோது, தீர்ப்புக்குள்ளான மனிதன் உயிரோடு இருப்பாரா என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. கிரிமினல் வழக்குகள்கூட அப்படி நடந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக சிவில் வழக்குகளில், சிவில் வழக்குகளைத் தாமதப்படுத்த வேண்டுமென்றால் நீதிமன்றத்திற்குப் போக வேண்டுமென்கிற நிலை இருக்கின்றது. ஆகவே, இந்த நிலைகளெல்லாம் மாற்றப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

தொழிலாளர் நீதிமன்றங்கள், தமிழ்நாட்டில் ஏழு இருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கின்றது. அந்தத் தொழிலாளர் நீதிமன்றங்களில் குறிப்பாக திருச்சி, கடலூர் போன்ற நகரங்களில் ஓராண்டுக்கு மேலாக நீதிபதிகளே கிடையாது. அப்படியே நீதிபதிகள் வந்தாலும் வழக்கறிஞர்கள் காலத்தை நீட்டுவதற்கான முயற்சிகள்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லாததன் காரணமாக தொழிலாளர்களுக்கு நீதி கிடைப்பது தாமதமாகிறது. தாமதமாவதோடு மட்டுமல்ல, அவர்களது குடும்பச் சூழ்நிலை மிகவும் பிரச்சினைக்குரியதாகி விடுகிறது.

குறிப்பாக தொழிலாளர் நல நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை உடனடியாக நியமிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

வழக்குகள் பல இலட்சம் தேங்கியுள்ளன. குறிப்பாக, தமிழ்நாட்டில் 10 இலட்சம் வழக்குகள் தேங்கியுள்ளன. 10 இலட்சம் வழக்குகள் தேங்கி இருக்கின்றபோது, இப்பொழுது **Lok Adalat** என்ற அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதாவது, மக்கள் நீதிமன்றம். அப்படி

மக்கள் நீதிமன்றங்களை அமைத்து, வழக்குகள் சிலவற்றை உடனடியாகத் தீர்க்கக்கூடிய வாய்ப்புகள வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த Lok Adalat நீதிமன்றங்களை விரிவுபடுத்தவேண்டும்.

*பிற்பகல் 12-35*

அதுமட்டுமல்ல, இலவச சட்ட உதவி முகாம்களை கிராமப்புறங்களில் நடத்தி, கிராமப்புற மக்களுக்கு அதைப்பற்றி விளக்கவேண்டும். விளக்குவதோடு மட்டுமல்ல, இலவச சட்ட உதவி முகாம்களில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய தீர்ப்புகளாகக் கொடுக்கப்படவேண்டும். இலவச சட்ட உதவி முகாம் என்பது ஏதோ ஓர் ஆலோசனை சொல்கின்ற முகாமாக, ஆலோசனை சொல்கின்ற மையமாகத்தான் அது இருக்கின்றதே தவிர, சட்ட உதவி முகாம்களில் சொல்வதைக் கேட்கவேண்டுமென்ற நிலை மக்களிடத்திலே இல்லை. ஆகவே, அதை விரிவுபடுத்தி, உறுதிப்படுத்தவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குண்டர் தடுப்புச் சட்டம் என்று ஒன்று இருக்கிறது. அந்த குண்டர் தடுப்புச் சட்டத்திலே கைது செய்யப்பட்டால், ஓராண்டு சிறையிலே இருக்கவேண்டுமென்று சொல்கின்றார்கள். ஆனால், குண்டர் தடுப்புச் சட்டத்திலே கைது செய்யப்படுபவர்கள், மூன்று மாதங்களிலே வெளியே வந்துவிடுகின்றார்கள். அவர்கள் எப்படி வெளியே வர முடிகிறது என்று சொல்வதற்கு, அதைப்பற்றி ஆராய்வதற்கு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த கமிட்டி அந்தக் கைது சரியானதுதானா, சரியில்லாத கைதா என்பதை ஆராய்ந்து அவர்களை வெளியே விட்டுவிடுகின்றார்கள் என்று சொல்கின்றார்கள். அதிலேயும் இலஞ்ச ஊழல் ஊடுருவி இருக்கிறது என்ற குற்றச்சாட்டு இப்போது வந்திருக்கிறது. ஆகவே, அதையெல்லாம் போக்குவதற்குரிய முயற்சியிலே ஈடுபடவேண்டும்.

அடுத்து, பெண்களுக்கான நீதிமன்றங்கள். அதாவது, குடும்ப நல நீதிமன்றங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராசசேகரன், உங்கள் நேரம் முடிந்துவிட்டது.



**திரு. எஸ். இராசசேகரன்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்கிறேன். குடும்ப நல நீதிமன்றங்களை மாவட்டத்திற்கு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்பதை வலியுறுத்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். Sir, நீங்கள், இந்திய சட்டத்தைப் பற்றி மட்டும் பேசுங்கள். *(சிரிப்பு)*

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் மற்றும் சட்டத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசியல் சாசனத்தின் பாதுகாவலனாக தலைநகர் டில்லியில் கம்பீரமாக நின்று கொண்டிருக்கின்ற உச்ச நீதிமன்றத்தில், 1950 ஆம் ஆண்டு, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்த காலகட்டத்தில், வெள்ளைக்காரர்கள் காலத்தில், Federal Court-ன் நீதிபதியாக இருந்த ஜஸ்டிஸ் கனியா என்பவர், நீதிபதியாக அங்கே பொறுப்பேற்று, இந்திய உச்ச நீதிமன்றத்தின் நீதி வரலாறு அன்று தொடங்கப்பட்டது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அப்பொழுது சொன்னார்கள், "சட்டம் என்பது அரசாங்கமும், மக்களும் நடந்துகொள்ள வேண்டிய முறைகளின் தொகுப்பாகும். மக்களுடைய வாழ்க்கை இலட்சியங்கள், ஆசைகளுடன் தொடர்பில்லாத ஒரு சட்டம், பொருளில்லாமல் வெறுமையாகிவிடும் மக்களின் இலட்சியங்களுக்கு அது மிகவும் குறைவாக இருந்தால், மக்களை அது கீழே இழுக்கும். மக்களின் மனமும், கண்களும் ஏறிட்டுப் பாாக்கும்படி அது உன்னதமான இலட்சியங்களைக் கொண்டிருக்கவேண்டும். மேலும் அது வளைந்து கொடுக்கக்கூடியதாகவும், குறிப்பிட்ட ஓரளவு காலம்வரை நாம் அதை எளிதாக மாற்றக்கூடியதாகவும் இருக்கவேண்டும்" என்று அன்றைக்குப் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள். அவரைப்பற்றிச் சொல்கிறபோது, "அவர் கட்டி முடிக்கப்பட்ட கோபுரம், நான் கொட்டி வைக்கப்பட்ட செங்கல்" என்று அறிவாசான், பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறாாகள்.

*பிற்பகல் 12-40*

எந்த நாட்டிற்கும் இல்லாத ஒரு பெருமை, ஒரு தனித் தன்மை நம்முடைய இந்திய அரசியல் அமைப்பிற்கு இருக்கிறது என்பதை அனைவரும் உணர்வோம். Written Constitution என்று சொல்லக்கூடிய

தனித் தன்மை, நம்முடைய இந்திய ஜனநாயகத்திற்கு மட்டும்தான் இருக்கிறது. ஜனநாயகத்தின் தூண்களாகக் கருதக்கூடிய பாராளுமன்றமும், சட்டமன்றமும், நிர்வாக அமைப்பும், நீதிமன்றமும் நம் நாட்டிலே இருந்து வருகின்றன. சட்டமன்றத்தில், பாராளுமன்றத்தில் இயற்றப்படுகின்ற சட்டங்கள் அவை நிர்வாகத் துறையால் செயல்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்படுகின்ற காலகட்டத்தில் ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால், பிரச்சினைகள் ஏற்பட்டால் சட்டத்திற்கு உட்பட்டு நீதி வழங்கவும், ஆலோசனை வழங்கக்கூடிய பணியையும், நீதிமன்றங்கள் இப்போது நம்முடைய நாட்டிலே செய்து வருகின்றன.

அடிமை விலங்கை ஒழித்தெறிந்த ஆப்ரகாம் லிங்கன் 'For the people, By the people, Of the people' என்று சொன்னான். மக்களுக்காக நடைபெறக்கூடிய இந்த நீதிமன்றங்களில் அந்தந்தப் பகுதிகளில், அந்தந்த மாநிலங்களில் வாழ்கின்ற மக்கள் பேசுகின்ற மொழி அந்த நீதிமன்றங்களில், வழக்கு மொழியாக இருக்கவேண்டும். இந்த நாட்டில் நீண்டகாலப் போராட்டத்திற்குப் பிறகு தமிழகத்தில் நமக்கு உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்குமொழியாக ஆகக்கூடிய ஒரு வாய்ப்பு இப்பொழுது கனிந்து வருகின்ற சூழ்நிலையில், இந்த அரசாங்கம் அதைத் துரிதப்படுத்தி ஆவன செய்யவேண்டுமாய், முதலில் என்னுடைய வேண்டுகோளை இந்த மன்றத்தில் நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசியல் சட்டத்தில் 'Equality before the Law and equal protection of Law' என்று கூறப்பட்டுள்ளது. சட்டத்தில் இருக்கின்ற ஓட்டைகளைப் பயன்படுத்தி பணக்காரர்கள் நீதியைப் பெறுகின்றபோது, ஏழை மக்களுக்கும் அந்த நீதி கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் 'Equality for all' என்று சொல்கிறோம். எனவே, அரசியல் சட்டத்தில், அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற அரசியல், பொருளாதார, சமூக நீதி, பணக்காரர்களுக்குக் கிடைப்பதுபோல ஏழைகளுக்கும் கிடைக்கவேண்டுமென்பதை இந்த மன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். ஏனென்றால் 'The rich governs the law and the law grinds the poor' என்று சொல்வார்கள். 'பணக்காரர்கள் சட்டத்தை ஆள்கிறார்கள் அந்தச் சட்டம்தான் ஏழைகளை நசுக்குகிறது' என்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை இன்றைக்கு நாட்டிலே இருக்கிறது.



மக்கள் அரசியலைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இருக்கலாம்; அதேபோல பொருளாதாரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இருக்கலாம், தவறுகூட அல்ல. மருத்துவத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இருக்கலாம், விஞ்ஞானத்தைப் பற்றிக்கூடத் தெரிந்து கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், இந்த நாட்டிலே இருக்கின்ற சாதாரண, சாமானிய குடிமகனாக இருந்தாலும், ஏழை விவசாயியாக இருந்தாலும், தொழிலாளியாக இருந்தாலும் இந்த நாட்டில் இருக்கின்ற எந்தப் பிரஜையாக இருந்தாலும் சட்டத்தைப்பற்றி மட்டும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமான ஒன்று. தனக்கு என்ன உரிமை இருக்கிறது, அந்த உரிமை எதுவரையிலும் இருக்கிறது என்பதை அவன் தெரிந்துகொள்ளவேண்டும். அதற்காகத்தான் சட்ட ஆலோசனைகளை, சட்ட விளக்கங்களை எல்லாம் அரசாங்கம் இப்போது பல அமைப்புகளின்மூலமாகத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏனென்று சொன்னால், 'Ignorance of law is no excuse' என்று சொல்வார்கள். எனக்குச் சட்டம் தெரியாது. ஆகவே, நான் செய்த செயல் குற்றமாகக் கருதமுடியாது என்று யாரும் நீதிமன்றத்திலே சென்று வாதாட முடியாத ஒரு சூழ்நிலை நம்முடைய சட்டத்திலே இருக்கிறது.

எனவேதான், நான் நமது அரசாங்கத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம் ஒரு பரிசீலனை. கிராமங்களில் இருக்கின்ற சாதாரண, சாமானிய மக்களுக்கும் சட்ட நுணுக்கங்களை, சட்டத்திலே மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற உரிமைகளைத் தெரிந்து கொள்கின்ற வகையிலே,--கட்டாயமாக எல்லோருக்கும் அதைச் செய்ய முடியாது--அதை தெரிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பம் உள்ளவர்கள் தெரிந்துகொள்ளச் செய்கின்ற வகையிலே ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு சட்ட அதிகாரியை நியமித்து அவர்களுக்கு சட்ட உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்குவதற்கு இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

அதேபோல, இன்னும் ஒன்று சொல்வார்கள். Criminal Justice என்பது இனாமாக வழங்கக்கூடியது. . இதிலே இலாப, நட்டக் கணக்குப் பார்க்கக் கூடாது. எப்படி கல்வித் துறை, மருத்துவத் துறை போன்ற பல துறைகளில் எல்லாம் இலாப, நட்டக் கணக்கு நாம்

பார்ப்பதில்லையோ அதைட்போல இந்த நீதித் துறையிலும் இலாப, நட்டக் கணக்குப் பார்க்கக் கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு, ஏழையெளியவர்களுக்கு நீதி கிடைப்பதற்காக அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். எல்லோருக்கும் ஒரே கருத்துதான் இந்த விஷயத்தில். நீதிமன்றங்களில் இருக்கின்ற வழக்குகள் காலதாமதமாகிக் கொண்டே வருகின்றன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் சிவில் வழக்குகள் ஒரு 10 ஆண்டு காலம், 20 ஆண்டு காலத்திற்கு ஒருவன் ஒரு நிலத்தைக் குத்தகைக்கு எடுக்கிறான் என்று சொன்னால், அந்த 10 ஆண்டு காலம், 20 ஆண்டு காலத்திற்குள் யாராவது அவன் குத்தகை எடுத்த ஆரம்பக் காலக் கட்டத்தில் ஒரு தனி நபர் சென்று ஏதாவது ஒரு வழியில் ஒரு காரணத்தைச் சுட்டிக்காட்டி நீதிமன்றத்திலே தடை உத்தரவு stay வாங்கிவிட்டால் அந்த 10 ஆண்டு, 20 ஆண்டு குத்தகை காலம் முடிவடைந்ததற்குப் பின்னாலும் அந்த வழக்கு முடிவடையாத நிலை இருப்பதை நாம் பார்க்கிறோம். எனவே, அந்த வழக்குகள் உடனடியாக முடிக்கப்பட்டாக வேண்டும்.

அதுமட்டுமல்ல, இப்படிப் பல நிலங்கள், விளை நிலங்கள் எல்லாம் விளைச்சல் இல்லாமல் இருப்பது இந்த நாட்டின் உற்பத்தியையே பாதிக்கக்கூடியதாக அமைகின்ற வகையில் stay வாங்குகின்ற அந்தக் காலத்தை குறுகிய காலத்திற்குள் முடிப்பதற்கு அரசாங்கம் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்யும்படி அன்போடு நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, நீதிமன்றத்தில் இன்றைக்கு... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடித்துவிடுங்கள். இல்லையென்றால் உங்கள் argument-ஐ முடிக்கச் சொல்லி நான் advance petition போட வேண்டும்.

**திரு. வீர. இளவரசன்:** நீதிமன்றத்தில் வழக்குகள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன என்று சொன்னாலும், மக்கள் தொகை அதைவிட அதிகமாகிக் கொண்டே வருகிறது. புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும். நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தில் தேவைக்கேற்ப புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.



திருமங்கலத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று கடந்த கூட்டத்திலும் நான் என்னுடைய கோரிக்கையை வைத்தேன். ஏறத்தாழ 1,000 வழக்குகளுக்கு மேல் ஆண்டு ஒன்றிற்கு மேல்முறையீட்டிற்காக மதுரைக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் அங்கே தொழிலிலே ஈடுபட்டு வருகிறார்கள். அது மட்டுமல்ல, அங்கே குற்றவியல் நீதிமன்றங்கள்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடியுங்கள். Time இல்லை. உங்களுடைய prayer-ஐச் சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அங்கே செயல்பட்டு வருகிறது. எனவே, அங்கே ஒரு சார்பு நீதிமன்றம் உடனடியாக அமைப்பதற்கு அர்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல உயர் நீதிமன்றத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். *(குறுக்கீடு)* அரை second தான்.

**திரு. வீர. இளவரசன்:** உயர் நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதி பணியிடங்களில் நீதிபதிகளை நியமிப்பதற்கும், சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் காலியாக இருக்கிற பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கும், அதேபோல எப்படி சென்னையிலிருந்து உயர் நீதிமன்றம் மதுரை கிளையாக அங்கே மாற்றப்பட்டு இருக்கிறதோ, அமைக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போல டெல்லியிலே இருக்கின்ற உச்ச நீதிமன்றத்தின் கிளையை சென்னையில் அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்க விரும்புகிறேன். ஒரே ஒரு வேண்டுகோளை வைத்து நான் விடைபெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னுடைய வேண்டுகோளை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அடுத்து திரு. ஞா. செந்தமிழன். *(குறுக்கீடு)* இல்லை, இல்லை, வேண்டாம். திரு. ஞா. செந்தமிழன். சைதாப்பேட்டை மன்ற உறுப்பினர். பேசுங்கள் .

***திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டம் மற்றும் நீதி நிர்வாக மானியக் கோரிக்கைகள்மீது எனக்குப் பேசுகின்ற நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த எங்களின் இதய தெய்வம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்

கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், நீதிக்குத் தலை வணங்கி தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டிய 'Law is Order and good law is good Order' என்ற தத்துவ ஞானி அரிஸ்டாட்டில் கருத்தில் மிக்க ஆழமும் நம்பிக்கையும் கொண்டு சட்டத்தின் ஆட்சியை நடத்திய, ஒரு சாதாரண சாமானியனும் இந்த நாட்டின் சட்டமன்ற உறுப்பினர் ஆகலாம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகலாம் என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைக்கு வடிவினைத் தந்து, பேரறிஞர் அண்ணா அவர்களால் என் இதயக் கனி என்று போற்றப்பட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசியல் வாரிசாக அவர் வழி வந்து, கிள்ளிக் கொடுக்கவே மனமில்லாத அரசியல் தலைவர்கள் வாழ்கின்ற இந்த நாட்டிலே, அள்ளிக் கொடுக்கின்ற வரலாறு தந்து வாழும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்கி (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம் மற்றும் நீதி நிருவாகத் துறை மானியக் கோரிக்கைகளிலே என்னுடைய வாதங்களை வைக்க விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

ஜனநாயகத்தின் மிகப் பெரிய தூண்களாக இருப்பவை சட்டமன்றம், நிருவாகம், நீதித் துறை. இந்த நீதித் துறை, நிருவாகத் துறையிலே எபபடி ஒரு சட்டத்தின் ஆட்சி நடத்தப்பட வேண்டும் என்பதற்கு இலக்கணமாக, உதாரணமாக இருந்ததுதான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதைக் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-50*

இப்போது, தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு எப்படியிருக்கிறது என்பதைப் பத்திரிகைகள் எல்லாம் சுட்டிக்காட்டுகின்றன. இந்த அரசாங்கம் அதைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

அதேநேரத்திலே, தமிழகத்தில் சட்டம் பயில்கின்ற மாணவர்கள் எல்லாம் உலகத் தரம் வாய்ந்த சட்டக் கல்வியினைப் பெற வேண்டும் என்பதற்காக, அன்னிய நாட்டிலும் தமிழக வழக்கறிஞர்கள், தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சீரிய சிந்தனையில் தோன்றியதுதான் School of Excellence in Law என்ற ஒரு சட்டப் பல்கலைக்கழகம் என்பதைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.



அதுமட்டுமல்லாமல், சட்டம் பயில்கின்ற மாணவர்களுக்கு விளையாட்டுத் துறையிலே இருக்கின்ற மாணவர்களுக்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே, முதலிலே பேசிய மாண்புமிகு அருண்மொழிதேவன் அவர்கள் பேசுகிறபோதே குறுக்கிட வேண்டாம் என்றிருந்தேன். அதே தவறை, தவறான கருத்தை, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற காரணத்தினால் சொல்கிறேன். தமிழகத்திலே அம்பேத்கர் பெயரில் அமைந்திருக்கிற சட்டப் பல்கலைக்கழகத்தை, ஏதோ முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள்தான் தொடங்கினார்கள் என்றும், அவர்கள்தான் அதற்கு இடம் கொடுத்தார்கள் என்றும், முன்னாலே பேசிய உறுப்பினர் அருண்மொழிதேவன் அவர்களும் பேசினார், அதே கருத்தைத் தொடர்ந்து இவர் சொல்கிறார். நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்தப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியவர் இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) சட்ட மேதை அண்ணல் அம்பேத்கருடைய பெயரில் ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டுமென்று அதைத் தொடங்கினார்கள். அப்போது குடியரசுத் தலைவராக இருந்த மேதகு நாராயணன் அவர்களை அழைத்து வந்து, 1997 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 20 ஆம் தேதி அதை ஒரு பெரிய விழாவாக எடுத்து, அந்தப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கினார்கள். அந்தப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட இடம், இப்போது கிரீன்வேஸ் ரோடில் இருக்கின்ற ஒரு பெரிய மாளிகை, அந்த மாளிகை முதலமைச்சரைப் பார்க்க வருகிறவர்களுக்கு, அவர் வீட்டிலே இடம் போதவில்லையென்ற காரணத்தால், பெங்களூரிலே முதலமைச்சருக்கு, பார்வையாளர்களுக்கு என்று ஒரு Guest House இருக்கிறது. அப்படி உருவாக்க வேண்டுமென்று, அப்போது பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த நான்தான் அந்த மாளிகையை உருவாக்கினேன். பழைய மாளிகைதான். அதை அழகுபடுத்தி அல்லது repair செய்து வைத்தோம். முதலமைச்சரை ஒரு நாள் அழைத்துக் கொண்டு போய் காட்டியபோது, அவர் பார்த்துவிட்டு நன்றாக இருக்கிறது என்று சொல்லிவிட்டு வந்தார். ஆனால், மறுநாள் என்ன உத்தரவு போட்டார் என்றால், அண்ணல் அம்பேத்கர் பெயரிலே அமைந்திருக்கிற அந்தப் பல்கலைக்கழகத்திற்கு அந்த இடத்தை ஒதுக்குகிறேன் என்றுதான் அவர்கள் ஆணையிட்டார்கள்.

அப்படி அந்த இடத்தை ஒதுக்கிய பிறகு, 3-10-1997, அந்தத் தேதியிலிருந்து அந்தப் பல்கலைக்கழகம் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, பல்கலைக்கழகத்தைத் தொடங்கியவர் கலைஞர், அதற்கு இடம் தந்தவர் கலைஞர், அதை ஆரம்பித்து வைத்தவரும் கலைஞர். இவ்வளவையும் மறைத்துவிட்டு ஒரேயடியாக எங்களுடைய முன்னாள் முதலமைச்சர், எங்கள் அம்மா அவர்கள்தான் கொடுத்தார்கள் என்று சொன்னால், இது எந்த வகையிலே நியாயம் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. எனவே, உண்மை இருக்கிறது, உயிரோடு நாங்கள் இருக்கிறபோதே இவ்வளவு உண்மைக்கு மாறான கருத்தைச் சொன்னால், இல்லாவிட்டால் என்னென்ன சொல்வீர்களோ யாம் அறியோம்!

**திரு. ஞா. செந்தமிழன்:** அவர் உடல் நலத்தோடு நன்றாக இருக்கட்டும். ஆனால், உண்மைக்கு மாறான தகவலை அவர் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The Tamil Nadu Government Gazette (Extra-ordinary)

Tamil Nadu Law University Bill, 1995

Statement of objects and reasons

'The recent advancement in professional education has shown that the starting of Universities on the basis of the particular profession has resulted in considerable improvement in the standards of education and in the development of the particular profession. If the law colleges and institutions, which have been hitherto affiliated to or approved by various Universities in Tamil Nadu are brought under a single University, there will be uniform standard of education resulting in improvement in the field of law and legal process, with reference to the latest developments in the field of law and legal process. With the above object in view, the Government have decided to establish a Law University, namely the Tamil Nadu Law University.' (Thumping of desks) (Interruption) The said University will be of an affiliating type.

2. The Bill seeks to give effect to the above decision.

3. The Provisions of the Bill are explained in the Notes on clauses appended to the Bill.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



பிற்பகல் 12-55

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் படித்த அந்த G.O. 1992-லே போடப்பட்டது. (குறுக்கீடு) 1995-ல் போடப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்கள் வந்த பிறகுதான், இப்போது அதே Law College அண்ணல் அம்பேத்கருடைய பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கிற அந்த Diary-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. It was inaugurated by His Excellency Thiru K.R. Narayanan, the President of India on September 20, 1997. The University started functioning from 3-10-1997. ஆகவே, அந்தப் பல்கலைக்கழகத்திற்கு Law University என்ற அந்தப் பல்கலைக்கழகத்திற்கு அண்ணல் அம்பேத்கர் பெயரைச் சூட்டியவரும் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொல்லிவிட்டுப் போனது எத்தனையோ! அதையெல்லாம் தொடர்ந்து நடத்தியவர் கலைஞர் அவர்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா கொண்டு வந்தது 1995. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே. அதற்குப் பின் ஆட்சி . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்து, அதை ஒரு Gazette-ல் போட்டுவிட்டாலே பல்கலைக்கழகம் வந்ததாகப் பொருள் அல்ல. நீங்கள் அரசாங்க உத்தரவு பிறப்பித்தீர்கள். அதற்குப் பிறகு பல்கலைக்கழகம் தொடங்கப்படவில்லை. அதைத்தான். (கூச்சல்-குழப்பம்) தலைவர் கலைஞர் அவர்கள் பல்கலைக்கழகத்தைத் தொடங்கி, . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், முதலில்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அம்பேத்கருடைய பெயரைச் சூட்டி, இந்திய குடியரசுத் தலைவராக இருந்த, மாண்புமிகு திரு. கே.ஆர். நாராயணன் அவர்களைக் கொண்டு வந்து திறந்து வைத்தார்கள் என்பதற்கான ஆதாரத்தைத்தான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் படித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செந்தமிழன், Kindly go to the next subject. Carry on.

**திரு. ஞா. செந்தமிழன்:** ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் நீங்கள் கொண்டு வர முடிந்ததே தவிர, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சி மாறியதால் நாங்கள் செய்யவில்லை என்று சொல்கிறார். ஒவ்வொரு முறையும் இவர்கள் ஆட்சியில் இருக்கும்போதே, அவர்கள் ஆட்சி முடியும் தருவாயிலதான், இதுபோன்ற நல்ல அறிவிப்புகளையெல்லாம் செய்வார்கள். அதன் பிறகு அதைக் கிடப்பிலே போட்டுவிடுவார்கள்.

**திரு. ஞா. செந்தமிழன்:** நாங்கள் நல்ல திட்டம் கொண்டு வந்தோம். இதில் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். ஆட்சியின் முடிவில் ஏன் நல்ல திட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன? இதற்கு முன்னால் ஆட்சியாளர்களாக இருந்தவர்கள் நாட்டின் நிதி நிலைமையைச் சீரழித்ததால் அந்த நிதி நிலையைச் சீர்படுத்துவதற்கே 3, 4 ஆண்டுகள் தேவைப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே , . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செந்தமிழன் நேரம் ஆகிறது.

**திரு. ஞா. செந்தமிழன்:** சட்டக் கல்லூரியில் பயிலுவதற்கு விளையாட்டுத் துறையில் இருப்பவர்களுக்கும் அதில் அதிக இடங்களை--விளையாட்டுத் துறையில் இருப்பவர்களுக்கும், ஊக்கம் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்திலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் இதற்கு முன்னாலே விளையாட்டுத் துறையில் இருப்பவர்கள், சட்டக் கல்வி 3 ஆண்டு படிப்பவர்களுக்கு 6 பேர் சேர்க்கலாம். 5 ஆண்டு படிப்பவர்களுக்கு 7 பேர் சேர்க்கலாம் என்று இருந்ததைக்கூட 3 ஆணடுக் கல்வியிலே 10 இடங்கள் ஒதுக்கித் தரலாம், 5 ஆண்டுக் கல்விக்கு 11 இடங்களை ஒதுக்கித் தரலாம் என்று விளையாட்டு வீரர்களும் சட்டக் கல்வியைப் பயில வேண்டும் என்ற ஊக்கத்தினை ஏற்படுத்தித் தந்தவர் எங்களது இதய தெய்வம்



புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நீதி நிர்வாகம், கொள்கை விளக்கக் குறிப்பிலே, பக்கம் 13, பத்தி 34-ல் தமிழ் மொழியை வழக்கு மொழியாக நீதிமன்றத்தில் பயன்படுத்த சிக்கல் இருப்பதாக மத்திய அரசு சுட்டிக் காட்டியுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்தச் சிக்கல் என்ன என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இப்போது நாட்டில் சட்டமன்றம் உயர்ந்ததா நீதிமன்றம் உயர்ந்ததா என்று பல்வேறு மாநிலங்களில், தமிழகத்தில் மட்டுமல்லாமல், கேரளாவில்கூட, பல்வேறு பிரச்சினைகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களையும், மாநில முதலமைச்சர்களையும், மாநில உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் அழைத்து ஒரு மாநாட்டினைக் கூட்டினார்கள். அந்த மாநாட்டிலே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இது ஒரு முக்கியமான பிரச்சினை; அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணாக உள்ள பிரச்சினையாக இருக்கின்றது; இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலே கூட்டப்பட்ட கூட்டத்திலே இன்றைய முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்கது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். அவருடைய கருத்தை, அமைச்சரை அனுப்பி, அமைச்சர் படித்ததாக பத்திரிகையிலே வந்துள்ளது, படித்தோம். ஆனால், இன்றைக்கு . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநாட்டிலே முதலமைச்சர் கலந்துகொள்ளவேண்டும் என்பது அவசியம் இல்லை. எத்தனையோ மாநாடுகளிலே, முன்னாள் முதலமைச்சர் கலந்துகொள்ளாமல் மாண்புமிகு பொன்னையன் அவர்கள் போய் இருக்கிறார்கள். மற்ற அமைச்சர்கள் போய் இருக்கிறார்கள். முதலமைச்சர்கள் மாநாட்டிற்கு முதலமைச்சர்தான் செல்ல வேண்டும் என்பதில்லை. நம்முடைய சட்டத் துறை அமைச்சர் போய் முதலமைச்சருடைய உரையை அவரே படித்துவிட்டு வந்து இருக்கிறார்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இதேபோல் ஒரு conference நடந்தது. அதற்கு முந்தைய, அதாவது நீங்கள் ஆட்சியில் இருந்த கடைசி காலத்தில் யார் கலந்துகொண்டார்கள் என்று விவரம் சொல்ல முடியுமா?

*பிற்பகல் 1-00*

**திரு. ஞா. செந்தமிழன்:** முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள இயலவில்லை, அதனால் அமைச்சரை அங்கே அனுப்பிவைக்கிறார்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அதைத்தான் சொல்ல வருகிறேன். உங்களுடைய ஆட்சியில் நடைபெற்ற அந்த மாநாட்டில் முதலமைச்சரும் கலந்துகொள்ளவில்லை, சட்ட அமைச்சரும் கலந்துகொள்ளவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளவில்லை என்று காரணம் காட்டியே நம் மீது உள்ள பொறுப்பைத் தட்டிக் கழித்து விடக்கூடாது. அமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த நாட்டின் முக்கியப் பிரச்சினையாக இருக்கின்ற மொழிப் பிரச்சினையாக இருந்தாலும், காவிரிப் பிரச்சினையாக இருந்தாலும், முல்லைப் பெரியாறு பிரச்சினையாக இருந்தாலும் கலந்து கொள்ள முடியாத ஒரு நிலையில் இருக்கின்றவர்கள், ஆனால், தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மத்திய அமைச்சரவையில் இடம் வேண்டும், இலாகாக்கள், குறிப்பிட்ட இலாகாக்கள் வேண்டுமென்பதற்காக மட்டும் 3 நாட்கள், 4 நாட்கள் அங்கே தங்கியிருந்து இலாகாக்களைப் பெற முடிகிறதா என்று கேட்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன். *(குறுக்கீடு)*

**திரு. ஞா. செந்தமிழன்:** இருங்கள், பேச்சை முடிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இருக்கின்ற வருத்தமெல்லாம் இரண்டு மாநிலங்களுக்கு இடையிலே இருக்கக்கூடிய ஒரு பிரச்சினையில்—ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு அமைச்சர் பதவி வேண்டுமென்று கேட்டால், அது மத்தியிலே இருக்கினறவர்களைக்கூட இரண்டு மாநிலங்களுக்கு இடையே இருக்கக்கூடிய பிரச்சினையில்—ஒரு மாநிலத்தைச் சேர்ந்த அமைச்சர் அந்தத் துறைக்கு பொறுப்பேற்றால் ஒரு சில நேரங்களிலே சந்தேகம் ஏற்படும் என்று கொடுக்காமல் இருப்பதுகூட இயற்கை. எனவேதான் எங்களுடைய முதலமைச்சரேகூட அப்படிப் பிரச்சினை வராமல் இருக்கக்கூடிய இலாகாக்களை மட்டும்தான் கேட்டு வாங்கினாரே தவிர, வேண்டுமென்றால் அந்த இலாகாவை கேட்டுப் பெற்றிருக்கலாம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ஞானசேகரன் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசுகிறீர்களா, இல்லை அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கட்டுமா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சட்டம் இந்த மானியக் கோரிக்கைகளிலே பேசுகிற நல்வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* I am not yielding. I am not yielding. I am not yielding. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I am also not yielding for the request. You please carry on. *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள் சார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... *(குறுக்கீடுகள்)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

## 5. அறிவிப்புகள்

### (அ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களுக்குப் பேசும் வாய்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினந்தோறும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவாகள் இரண்டு பேர் பேச வேண்டுமென்று நேரம் கேட்பதால், அதற்கு நாம் நேரம் ஒதுக்குகிறோம். ஆனால், ஆளுங்கட்சியைச் சேர்ந்த 95 பேர் இருந்தும்கூட நாங்கள் ஒருவர்தான் பேசுகிறோம். நீங்களும் அதை அனுமதிக்கிறீர்கள். இவ்வளவு வாய்ப்புகள் கொடுத்தும்கூட இரணடு பேர் பேசிவிட்டு, வேண்டுமென்றே கடைசி நேரத்தில் வெளிநடப்புச் செய்வது அவர்களுடைய பழக்கமாக இருந்தால் நாளை முதல் எதிர்க்கட்சிக்கு ஒருவர் மட்டும் பேச நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை முதல் அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த ஒருவர்தான் பேசுவார்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம்—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 33—சட்டத் துறை—தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளில் பேசக்கூடிய வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நான் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் 50 ஆண்டு காலம் இந்தச் சட்டமன்றத்தில் முத்திரை பதித்து



பொன்விழா காணுகிற இந்த வேளையில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் வைக்கிற கோரிக்கை, நீதி அடித்தட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்பதற்காக நாமெல்லாம் முயற்சி செய்து உங்களுடைய பெரு முயற்சியால் மதுரையிலேயே உயர் நீதிமன்றத்தினுடைய ஒரு கிளையை இப்பொழுது நாம் கண்டிருக்கிறோம். அதேபோல உச்ச நீதிமன்றத்தினுடைய அந்த வசதியையும் நாம் பெற வேண்டுமென்று சொன்னால். மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சி எடுத்து, நிச்சயமாக கூடிய விரைவிலே உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு கிளையை சென்னையில் அமைப்பதற்கு, அவர்கள் பொன்விழா நினைவாக, முழு முயற்சி எடுத்து சாதிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-05*

அதேபோல, உச்ச நீதிமன்றத்தில் தமிழ் மாநிலத்தைச் சார்ந்தவர்கள் நான்கு பேர் அப்போது நீதிபதிகளாக இருந்தார்கள். இன்று ஒருவர்கூட இல்லை. அங்கே உச்ச நீதிமன்றத்திலே நம்முடைய தமிழர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய வகையில், எப்படியாவது நீதிபதிகள் நியமிக்கப்படுவதற்கு அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உயர் நீதிமன்றத்தில் எல்லா அடுக்குகளிலும் தமிழை நடைமுறைப்படுத்த வேண்டுமென்கிற ஒரு தீர்மானம், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய முயற்சியால், அவர் முன்மொழிந்து இங்கே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலை நாம் பெற வேண்டும். அதற்கு இப்போது முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். அதற்காக எங்களுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதற்கு முன்னால் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்போது நம்முடைய .உயர் நீதிமன்றத்தில் Writ-க்கு நாம் விண்ணப்பம் செய்கிறபோது, வழக்கறிஞர்கள் தமிழிலே அதை எழுதி தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அதேபோல, குறிப்பாக அரசு பொதுவாக Advocate General ஆக இருந்தாலும் சரி அல்லது Public Prosecutor ஆக இருந்தாலும் சரி அல்லது Government Pleader ஆக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக ஆணையிட்டு, இனி அவர்கள் தமிழில்தான் வாதாட வேண்டும் என்கிற ஓர் அறிவுரையை வழங்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இங்கே opinion கொடுக்கிறபோது அவற்றையும் தமிழிலேயே கொடுப்பதற்கான முயற்சியை நீங்கள் ஆணையிட்டு அதை முதலில். . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆணையிடாமலேயே அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. தமிழில் பேசுவது, எழுதுவது.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே அதை நடைமுறைப்படுத்தி தமிழில், நீதிமன்றத்தில் பொதுவாக தமிழ் முழுமையாக முழக்கமிடக்கூடிய ஒரு சாத்தியக்கூறை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வழக்கறிஞர்களுடைய Advocates Benefit Fund, அந்த சேமநல நிதி இப்போது இரண்டு இலட்சம் ரூபாய், அதாவது அவர்கள் இறக்கிற காலத்தில் கொடுக்கக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறோம். ஆனால் இப்போது rate of death எடுத்துக்கொண்டால், ஆண்டுக்கு 120 வழக்கறிஞர்கள் இறக்கிறார்கள். போகப் போகப் பார்த்தால்கூட ஆண்டுக்கு 200 பேர் அவர்கள் இறக்கக்கூடும். சாதாரணமாக விபத்து என்று வருகிறபோதே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நட்டஈடு 5 இலட்சம் ரூபாய் என்று அறிவிக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில், வழக்கறிஞர்களுடைய நிலையைக் கருதி—காரணம் ஏழையெளிய மக்கள்தான் இப்போது நிறையபேர் வழக்கறிஞர்களாக வருகிறார்கள். அவர்கள் ஏழ்மையில்தான் உழன்று கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வழக்கறிஞர்களுடைய நிலையை நாம் உயர்த்த வேண்டுமென்று சொன்னால்—அந்த benefit fund-ஐ 5 இலட்சம் ரூபாய் குறைந்தபட்சம் அவர்கள் இறக்கிறபோது வழங்குவதற்கான ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் one time settlement ஆக 50 கோடி ரூபாயை நீங்கள் Corpus Fund ஆக கொடுத்து உருவாக்கிவிட்டீர்கள் என்று சொன்னால், வழக்கறிஞர்களுக்கு தொடர்ந்து 5 இலட்சம் ரூபாய் அவர்கள் இறந்தால் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், Advocates Benefit Fund Act-ஐ நீங்கள் திருத்தம் செய்து அதை உடனடியாக முடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்போதுமே செய்வதைச் சொல்பவர், சொல்வதைச் செய்பவர் என்கிற காரணத்தினாலே, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு அதற்குப் பெயர்போன ஓர் அரசு. 2000 ஆம் ஆண்டு வேலூரிலே சட்டக் கல்லூரி தொடங்கப்படும் என்று ஏற்கெனவே இந்த அவையிலே அறிவித்தீர்கள். இடமெல்லாம்கூடத் தேடினோம், வாடகைக் கட்டடத்தைக்கூடப் பார்த்தோம். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையில் இருக்கிறபோது நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இன்றே நீங்கள் உங்களுடைய அறிவிப்பைச் செய்து, வேலூரில் இந்த ஆண்டு சட்டக் கல்லூரி தொடங்கப்படும் என்கிற நல்ல அறிவிப்பினை எங்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நிறைய வழக்குகள் நீதிமன்றங்களிலே நிலுவையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில் Writ Petitions அதிகமாக வருகின்றன. அந்த Writ Petitions ஏன் அதிகமாக வருகின்றன என்று பார்க்கிறபோது, பொதுவாக அரசு ஊழியர்களை நாம் வேலை நீக்கம் செய்கிறபோது, suspension செய்வதை எதிர்த்து அல்லது அவர்களை removal செய்வதை எதிர்த்து நிறைய வழக்குகள் போகின்றன. இதற்கெல்லாம் ஒரு குழுவைப் போட்டு, பொதுவாக எவற்றையெல்லாம்--வழக்குகளை--வாபஸ் செய்துகொண்டு, இந்த வழக்குகள் pendency-ஐ குறைக்க முடியும் என்பதையும் அரசு பார்க்க வேண்டும். அதேபோல, land acquisition-லே நாம் குறைந்த ஒரு மதிப்பை அந்த நிலத்திற்கு நட்ட ஈடாகக் கொடுக்கிற காரணத்தினால்தான் போதவில்லை என்று பலபேர் வழக்குக்குப் போகிறார்கள். ஆகவே, அதையும் தவிர்ப்பதற்கு, பொதுவாக நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கக்கூடிய வழக்குகளைக் குறைப்பதற்கு ஒரு குழுவைப் போட்டு எப்படி pending-ல் இருப்பதைக் குறைக்க முடியும் என்பதற்கான ஒரு வழிமுறையைக் காண வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். திருப்பத்தூரில் Sandalwood Special Court என்று ஒன்று வைத்திருக்கிறோம். அங்கே 1990 ஆம் ஆண்டு போட்ட வழக்குகள் எல்லாம் இன்னும் ஒரு சாட்சிகூட விசாரிக்கப்படாத நிலையில் அப்படியே இருக்கின்றன. நீங்கள்

Special Court என்று வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால் யாரும் அந்த இடத்திற்கு sandalwood அந்த M.O. - Material Object-ஐ எடுத்துக்கொண்டு போவதும் சிரமமாக இருக்கிறது, சாட்சிகளைக் கொண்டு போவதும் சிரமமாக இருக்கிறது, ஆங்காங்கே எந்தெந்த jurisdiction-ல் அந்த வழக்கைப் பிடிக்கிறார்களோ அங்கேயே வழக்குகளை நடத்துவதற்கு நீங்கள் ஒரு ஆணையைப் பிறப்பிக்க வேண்டும்.

*பிற்பகல் 1-10*

உடனடியாக pending-லே இருக்கக்கூடிய வழக்குகளையெல்லாம் முடிப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* உரையை முடித்துவிடுகிறேன். ஒரேயொரு நிமிஷத்திலே உரையை முடித்துவிடுகிறேன். நீதிமன்றக் கட்டடம் *(மணியடிக்கப்பெற்றது)* அந்த infrastructure பொதுவாக மாநிலத்தில் எங்கெங்கெல்லாம் நீதிமன்றக் கட்டடங்கள், பொதுவாக நம்முடைய அருமை அக்கா திருமதி யசோதா அக்கா அவர்களுடைய தொகுதியிலே Taluk Head-quarters ஆக இருந்தாலும்கூட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Minister answer பண்ண வேண்டும் Sir.

**திரு. சி. ஞானசேகரன்:** அதேபோல, வாணியம்பாடியிலே Sub-court கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அங்கு Sub-court வழங்குவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Judicial activism-நம்முடைய சட்டமன்றத்தினுடைய இறையாண்மையைக் காக்கக்கூடிய வகையிலே நீங்கள் இறையாண்மையைக் காத்து Judicial activism -வராமல் நீதித் துறையினர் தம்முடைய எல்லையை அறிந்தவர்கள், நம்முடைய சட்டமன்ற எல்லைக்குள் அவர்கள் வராமல் நாம் இயற்றுகின்ற சட்டத்திற்கு ஏற்றாற்போல அவர்கள் தீர்ப்புகளை வழங்கி, அவர்கள் ஒரு சுமூகமான சூழ்நிலையை நிலைநாட்ட வேண்டுமென்று நீதித் துறைக்கு இந்த அவையின் வாயிலாக என்னுடைய கோரிக்கையை வைத்து விடைபெறுகின்றேன். நன்றி.



## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (அ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களுக்குப் பேசும் வாய்ப்பு—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அதிகமான பேருக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். அதிகமான நேரத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆனால், அதிகமான உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தும், அதிகமான நேரத்தைக் கொடுத்தும், அந்த நேரத்தை, அவையினுடைய நேரத்தை வீணாக்குகிறார்கள். தவறான முறையிலே பேசுகிறார்கள். அதனாலே இனி வருகிற காலங்களிலே அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு, ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலேயும் ஓர் உறுப்பினரைத்தான் பேச அனுமதிக்க முடியுமென்று நான் முடிவெடுத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்—தொடர்ச்சி
### (ஆ) கோரிக்கை எண் 33 – சட்டத் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவாகளுடைய பதிலுரை.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதித் துறை மற்றும் சட்டத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது நடைபெற்ற இந்த விவாதத்தில் பதிலளித்துப் பேசுகிற வாய்ப்பினை வழங்கிய என்னுடைய தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன்.

இந்த இரண்டு மானியங்கள்மீது 9 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். நீதித் துறைக்கென்று தனியாக ஒரு நாள் ஒதுக்கி, உறுப்பினர்களுடைய கருத்துகளைக் கேட்டு, ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொள்ள இந்த அரசு விழைகிறது என்பதற்கு எடுத்துக்காட்டுதான், இன்றைக்கு ஒருநாளாக இதற்கு ஒதுக்கியிருக்கிறோம்.

இதிலே பேசிய உறுப்பினர்கள் ஒரு சிலர் இந்த மானியக் கோரிக்கைகள்மீது பேசினார்கள். இன்னும் சிலர் அவர்களுக்கு இருக்கிற கோரிக்கைகளை இதோடு சேர்த்து வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். எது எப்படியிருந்தாலும், அவர்களுடைய கோரிக்கைகளைக் கொட்டுவதற்கு ஒரு வாய்ப்பாக இந்தத் துறை அமைந்திருப்பதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்களில் அ.தி.மு.க.-வைச் சேர்ந் உறுப்பினர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் அந்தக் கருத்தை, இரண்டாவது உறுப்பினர் பேசுகிறபோதே மறுதலித்திருக்கிறேன். ஒரு தவறான கருத்தை இந்த அவையிலே பதிவு செய்துவிட வேண்டுமென்று அப்படி நினைப்பது தவறு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேறு ஒன்றும் அவர்கள் பேச்சில் நான் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு எதுவும் இல்லை. எனவே, நான் அவற்றை விட்டுவிடுகிறேன்.

அடுத்து, காங்கிரஸ் கட்சியின் சார்பில் உரையாற்றிய டாக்டர் விஷ்ணுபிரசாத் அவர்கள் நல்ல கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்தில் அல்லது வேறுபல நீதிமன்றங்களுக்கு, நீதிபதிகளை நியமிக்கின்றபோது, அதிலே சமூக நீதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. சமூக நீதியிலே இந்த அரசு எவ்வளவு அழுத்தமான கொள்கையைக் கொண்டது என்பது, அவருக்கும் தெரியும், இந்த நாட்டுக்கும் தெரியும். ஆனால், ஒன்று. எனக்கு இருக்கிற ஏக்கம், சமூக நீதிக்கு ஒரு சின்ன தடைக்கல், இடைஞ்சல் வருகிறது என்று சொன்னால், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் எவ்வளவு துடித்துப் போகிறார் என்பதை சமீபகாலமாக நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர்களுடைய இரத்தத்தோடு ஊறிய ஒன்றுதான் அது. அந்தக் கொள்கைக்காகவே அரசியலில் அடியெடுத்து வைத்தவர். ஆனால், அப்படிச் சமூக நீதியோடு மேலே வருகிறவர்களும் கொஞ்சம் திரும்பிப் பார்த்து இந்தச் சமூக மேம்பாட்டுக்கு உழைப்பதற்கு முன்வர வேண்டுமென்ற என் பணிவான வேண்டுகோளை நான் இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-15*

ஏறிவிட்ட பிறகு மீண்டும், ஏறுகிறவனைப்பற்றி கவலைப்படாமல் இருந்தால் அது சமூக நீதிக்கு மாற்றார் செய்கிற கொடுமையைவிட



மோசமானது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். எனவே, அவருடைய கருத்தை நான் ஆதரிக்கிறேன், பாராட்டுகிறேன். ஒரு இளம் உள்ளத்தில் இந்தக் கருத்து வந்திருக்கிறது.

கம்ப்யூட்டர்கள் தரவேண்டும் என்று சொன்னார். இன்றைக்கு அவர்கள் நம்முடைய தமிழ் கொள்கை விளக்கக் குறிப்பிலே *21, 22* ஆம் பக்கத்திலே படித்துப் பார்த்தால் Computerisation எவ்வளவு செய்திருக்கிறோம் என்ற விவரம் அதிலே தெளிவாக இருக்கிறது. பள்ளிப் படிப்புகளிலேயே கல்விச் சட்டத்தைப் பற்றி சிறுசிறு செய்திகள் பாடநூல்களிலே வரவேண்டுமென்று சொன்னார். அது தேவையும் கூடத்தான். ஆரம்பத்திலேயே அந்த விதையை விதைப்பது நல்லதுதான். கோடை விடுமுறை கோர்ட்டுக்கு உண்டு மற்றவர்களுக்கு இல்லையே என்ற ஏக்கத்தை மற்றவர்களுககு ஏற்படுத்திப் போயிருக்கிறார். ஆனால், விடுமுறைக் காலங்கள் வெள்ளைக்காரன் வைத்துவிட்டுப் போன ஒன்று. கோடையிலே உல்லாசமாகப் போவதற்கு, எத்தனையோ நியதிகளை வெள்ளைக்காரன் விட்டுவிட்டுப் போனதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதிலே ஒன்றுதான் இதுவும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன் அவர்கள் பேசுகிறபோது கல்லூரிகளுக்கெல்லாம் முதல்வர்கள் வேண்டுமென்று கேட்டார். இப்போது இருக்கிற சட்டக் கல்லூரிக்கும் மற்ற இடங்களுக்கும் முதல்வர்கள் இருக்கிறார்கள். மற்ற இடங்களில் முதல்வர்கள் இல்லாமல் இல்லை என்ற செய்தியை நான் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

பொதுவாக இந்த நீதி, நிருவாகம், சட்டத் துறை என்பது கலைஞர் அவர்கள் எப்போது எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறார்களோ அப்போதெல்லாம் இந்தத் துறைகளின் மேம்பாட்டுக்கு அயராமல் உழைக்கக்கூடியவர்கள். சட்டத் துறையின் மீதும், நீதியின் மீதும் மாறாத அன்பு கொண்டிருக்கின்ற காரணத்தால்தான் நாட்டுக்கு மட்டும் நெஞ்சு இருக்கக்கூடாது, ஒவ்வொருவருடைய நெஞ்சுக்கும நீதி இருக்க வேண்டும் என்று 'நெஞ்சுக்கு நீதி' எழுதியவர்தான் என்னுடைய தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையை தட்டும் ஒலி)*

'நெஞ்சுக்கு நீதி' எழுதிய அவர் நாட்டுக்கு நீதி எவ்வளவு தேவை என்பதில் மிகக் கவனமாக இருக்கக்கூடியவர் குறிப்பாக, சிறப்பாக இன்றைய நிகழ்ச்சி, இந்தக் காலகட்டம் இப்போது ஆட்சி முறையில்

இருக்கிற காலகட்டம், இது ஒரு பொற்காலம் என்றே சொல்லுவேன் நீதித் துறையைப் பொருத்தமட்டும். காரணம், இதுவரையில் இந்தத் துறையை ஒரு Miscellaneous Subject-ஐ போலத்தான் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இப்போதுகூட எல்லா உறுப்பினரும் பேசினார்கள். தமிழக வரலாற்றிலேயே நீதித் துறைக்கு என்று 270 கோடி ரூபாய் ஒதுக்கிய முதல் முதலமைச்சர், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான் (மேசையை தட்டும் ஒலி)

நீதித் துறைக்கு தமிழக அரசு எதையும் செய்வது இல்லையென்ற குறைபாடு அடிக்கடி உச்ச நீதிமன்றத்திலே இருந்து வந்தது. உயர் நீதிமன்றத்திலேயும் இருந்து வந்தது. ஆனால், முன்னால் இருந்த ஆட்சி அதைக் கண்டுகொள்ளவில்லை. கலைஞர் அவர்கள் அந்தக் கோரிக்கையை கவனமாகக் கேட்டார்கள். என்ன உங்கள் கோரிக்கை என்பதைத் தெளிவாக. நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அவர்களும், தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா நீதிமன்றங்களுக்கும் கட்டடங்கள் வேண்டும். புதிய புதிய நீதிமன்றங்களை உருவாக்கவேண்டும்; உருவாக்கப்படுகிற நீதிமன்றங்களுக்குப் பணிபுரிவதற்கு ஆட்கள் வேண்டும்; வளர்ந்து வருகிற இந்த விஞ்ஞான நாகரீகத்தோடு ஒட்டி, அந்த அலுவலகங்களும் கணினிமயமாக்கப்படவேண்டும்; அப்படி வருகின்ற நீதிபதிகளுக்கு வசதிகள் செய்துதரப்பட வேண்டும் என்பதையெல்லாம் அவர்கள் சுட்டிக்காட்டி, மொத்தமாக இந்தத் துறைக்கு 300 கோடி ரூபாய் செலவு செய்தால் சரியாக இருக்கும் என்று அரசுக்கு ஒரு கணக்கை அனுப்பினார்கள்.

உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதியாக இருக்கக்கூடிய நீதிபதி மாண்புமிகு திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய ஒரு விழாவுக்கு வந்த நேரத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள் கலந்துகொண்டார்கள். அதே இடத்தில்கூட அந்தக் கோரிக்கைகளையெல்லாம் வைத்தார்கள், படித்தார்கள் நீதிபதிகளே. அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றம் வருகிறது, நான் எதையும் வெளியிலே சொல்லக்கூடாது இருந்தாலும் ஜாடைமாடையாகச் சொல்கிறேன். குறைந்தது 50 கோடி ரூபாய்க்கு குறையாத அளவிற்கு உங்களுக்கு ஒதுக்கப்படும் என்றுதான் தெரிவித்துவிட்டு வந்தார்கள். எதற்கு? கட்டடங்கள் கட்டுவதற்கு, மற்றவற்றிற்கு. ஆனால், உங்களுக்கு நான் இன்றைக்குத் தெரிவிக்கிறேன். அப்படி ஒதுக்குவதாகச் சொல்லிவிட்டு வந்த பின்னால் இப்போது 126 கோடி ரூபாய்



கட்டடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) நாம் பெருமைப்பட வேண்டாமா! சென்ற வருடம் building மட்டும், அதாவது, சில on-going-யிலே இருக்கிற scheme-ஐச் சேர்த்துச் சொல்கிறேன். ஆனால், new scheme ஆகச் சொல்கிறேன். New scheme ஆக 2 கோடியே 27 இலட்சம் இருந்தது. ஆனால், இன்றைக்கு கட்டடத்திற்கு மட்டும் new scheme-க்காக 64 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) 2 கோடி எங்கே, 64 கோடி எங்கே? ஆக, மற்ற infrastructure சேர்த்துதான் 270 கோடி ரூபாயை இப்போது கலைஞர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-20

இது நீதிமன்றத்தினுடைய வரலாற்றில், இந்தத் துறைக்குப் பொற்காலம் என்று சொல்ல வேண்டாமா? நீதிபதிகளாக வந்தவர்களுக்குப் பயிற்சி தரப்பட வேண்டும். சிலர் வழக்கறிஞர்களாக, நீதிபதிகளாக வந்து விடுகிறார்கள். சிலர் மாவட்டந்தோறும் நீதிபதிகளாக வளர்ந்து, உயர் நீதிமன்றத்திற்கு வருகிறார்கள். சிலர் அலுவலகங்களிலிருந்தும் வருகிறார்கள். வந்துவிட்டவர்களுக்கு, அந்தப் பணிகளைக் குறித்து ஒரு பயிற்சித் தரப்பட வேண்டும் என்பதற்காக judicial academy என்ற ஒன்றை உருவாக்கி இருக்கிறோம்.

கட்டடத்தைக் கட்டி விட்டுப் போனார்கள். நான் இல்லை என்ற சொல்லவில்லை. பிரம்மாண்டமாகக கட்டினார்கள். ஆனால், கட்டப்பட்டதற்கு கட்டடம் மட்டும் இருக்கிறதே தவிர, உள்ளே புத்தகங்கள் இல்லை. உள்ளே உட்காருவதற்கு நாற்காலிகள் இல்லை. ஹாலில் எந்தவிதமான ஏ.சி.யும் இலலை. இதையெல்லாம் என்னைப் போய் பார்த்துவிட்டு வா என்று சொன்னார்கள். அங்கே இருக்கிற நீதிபதிகளோடு ஒரு குழு உண்டு. அந்தக் குழுவிற்கு நான் போய உட்கார்ந்திருந்தேன். அப்போது அவர்கள் சொன்னார்கள். இதுவரையில் எந்தச் சட்டத் துறை அமைச்சரும் இந்த இடத்திற்கு வந்தது இல்லை. நீங்கள்தான் முதன்முதலாக வந்திருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான்கூட நானாக வரவில்லை. நான் அனுப்பி வைக்கப்பட்டவன் என்று சொன்னேன். ஆனால், அதை நவீனப்படுத்துவதற்கு, வேண்டிய சாதனங்களைப் போடுவதற்கு இப்போது இவ்வளவு தேவை என்று கேட்டார்கள். 1½ கோடி ரூபாய் வேண்டும என்று கேட்டார்கள். உடனடியாக

கலைஞர் அவர்கள் 1½ கோடி ரூபாயை ஒதுக்கித் தந்துவிட்டார்கள். பணியாளர்கள் இல்லையே என்று கேட்டார்கள். முன்பு இருந்த ஆட்சியில் பணியாளர்கள் யாரையும் நியமிக்கக் கூடாது. எந்தத் துறையிலும் நியமிக்கக் கூடாது. Files தேங்குகிறதே, தேங்கட்டுமே, வேலை நடைபெறவில்லையே, நடைபெறாமல் இருக்கட்டுமே, நாட்டு மக்கள் அழிவார்களே, அழிந்தால் எனக்கு என்ன? நான் இருந்தால் போதும் என்ற தோரணையிலே, ஒரு மமதையிலே இருந்தார்கள். ஆனால், கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு என்ன நிலைமை என்று கேட்டார்கள்.

தற்போதைய நிலவரப்படி உயர் நீதிமன்றத்தில் 152 பணியிடங்களும், மாவட்ட நீதிமன்றங்களில் 2,558 பணியிடங்களும் காலியாக இருந்தன. கடந்த 5 ஆண்டுகளில் பணியிடங்களை நிரப்பக் கூடாது என்ற நிலைமை இருந்தது. ஆனால் அந்த விதிகளைத் தளர்த்தி, காலி இடங்களை நிரப்பிக்கொள்ளுங்கள் என்று இந்த ஆட்சி வந்தவுடன், அவர்களுக்கு உத்தரவு போட்டு அனுப்பிவிட்டது. அனுப்பியது மட்டுமல்ல. இன்னொன்றையும் சொன்னார்கள். அப்படிப் பணியாளர்களை நிரப்புகின்ற அந்த வேலைக்குத் தனியாக ஒரு குழு உண்டு. அதிலே உயர் நீதிமன்றத்தில் உள்ளவர்கள் இருப்பார்கள். நம்முடைய அரசு சார்பிலும் செயலாளர் இருப்பார்கள். முதல்வர் கலைஞர் சொன்னார், ஒன்றும் தேவையில்லை. நம்முடைய சார்பில் அதற்கும்கூட லேட் ஆகும், நீங்கள் மீட்டிங்கிற்குப் போகவில்லை என்றால். அவர்களே போட்டுக்கொள்ளட்டும், வேலை நடக்கட்டும் என்று உத்தரவிட்ட தலைவர்தான் முதல்வர் கலைஞர் அவர்கள், இங்கே இருக்கக்கூடியவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுமட்டுமல்லாமல் இன்னொன்று. இவ்வளவு பணிகளைச் செய்த காரணத்தால்தான்--சமீபத்திலே, முதலமைச்சர்கள், மாநிலத்தில் இருக்கிற தலைமை நீதிபதிகள், உச்ச நீதிமன்ற நீதிபதி அவர்கள், பிரதமர் இவர்கள் எல்லாம் கலந்து கொண்ட அந்த மாநாடு டெல்லியிலே நடைபெற்றது. அந்த மாநாட்டிலே எப்படிப் பேசுவார்கள் என்றால், முதலில் Supreme Court, C.J. ஒரு மாநிலத்தினுடைய நீதிபதியைக் கூப்பிட்டு, உங்கள் மாநிலத்தினுடைய நிலைமையைச் சொல்லுங்கள் என்று சொல்வார்கள். அவர்கள் சொல்வார்கள், எங்களுக்கு கட்டடம் இல்லை, இருக்க இடம் இல்லை, போக, வர கார் இல்லை. இவ்வளவு கஷ்டம் எல்லாம் இருக்கிறது என்று கிடுகிடு என்று குற்றச்சாட்டு சொல்வதைப்போல் பேசினார்கள். உடனே திரும்பிப் பார்த்து அந்த



மாநிலத்தினுடைய முதலமைச்சரைக் கூப்பிட்டு நீங்கள் என்ன விளக்கம் சொல்கிறீர்கள் என்று கேட்பார்கள். இது ஒரு விசாரணை போலவே இருந்தது. அவர்கள் என்னென்ன செய்து இருக்கிறோம் என்று சொல்வார்கள். ஆனால், இப்படிச் சொல்லிவிட்ட பிறகு, இதற்கெல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளுங்கள் என்று ஒரு முடிவு சொல்வார்கள்.

*பிற்பகல் 1-25*

அப்படி ஒவ்வொரு மாநிலத்தினுடைய High Court Judge-தலைமை நீதிபதியும் சொல்லிக்கொண்டு வந்தார்கள். அப்படி வருகிறபொழுது இந்த அரசைப் பற்றி இங்கே இருக்கிற உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி சொல்கிறபொழுது சொன்னார், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நீதித் துறைக்கு, இப்போது இருக்கிற ஆட்சியால எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் கேட்டதை எல்லாம் தந்திருக்கிறார்கள். எங்கள் கோரிக்கையை உடனுக்குடன் முதல்வர் அவர்கள் பரிசிலனை செய்கிறார்கள். ஒரு cordial relationship அரசுக்கும், நீதித் துறைக்கும் இன்றைய ஆட்சியிலே நிலவுகிறது என்று பெருமையோடு சொன்னார்கள். அதைப் பார்த்து, உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி அவர்கள்கூட இன்னும் நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமா என்றுதான் என்னைக் கேட்டார்கள். காரணம், எந்தப் பிரச்சினையும் இல்லை என்று சொல்லிவிட்டார். 'திரு. துரைமுருகன், நீங்கள் ஏதேனும் சொல்லவேண்டுமா' என்று கேட்டார்கள். நான் அவரிடத்திலே சொன்னேன், அவர்களுக்கு அல்ல, நான் சொல்வது. இங்கே வந்து இருக்கிற, மத்தியிலே இருக்கிற சட்டத் துறை அமைச்சர் பரத்வாஜ் வந்திருக்கிறார். அவருக்கும், உங்களுக்கும் நான் சொல்கிறேன். நாங்கள் இங்கு இருக்கிற உயர் நீதிமன்றத்தினுடைய வழக்காடு மொழியாக எல்லா இடங்களிலும் தமிழ் இருக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை 6-12-2006 அன்று இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம். அதற்கு அங்கீகாரத்தை குடியரசுத் தலைவரிடத்திலே வாங்கிக் கொடுக்க வேண்டும். அதற்கு நீங்கள் முன்வர வேண்டும் என்று அவர்களுக்குத்தான நான் கோரிக்கையை வைத்தேனே தவிர, நம்முடைய ஆட்சியை defend செய்கிற நிலையிலே நான் அங்கே இல்லை. உள்ளபடியே எல்லோரும் என்னிடத்திலே பெருமைப்பட்டார்கள் Lucky, you have got a lucky State என்று ஒருவருக்கொருவர் கை குலுக்கிக் கொண்டார்கள்.

இந்த நீதிமன்றத் துறையில் எவ்வளவுக்கெவ்வளவு இந்த அரசு இதிலே கவனமாக இருக்கிறது என்பதற்கு இவையெல்லாம் ஓர எடுத்துக்காட்டு. அதனால்தான் இதற்குப் பொற்காலம் என்று சொன்னேன்.

இரண்டாவதாக, நீதித் துறையில் தமிழ் வழக்காடுகின்ற மொழியாக இருக்க வேண்டும். உச்ச நீதிமன்றத்தில் தமிழ் மொழியை எல்லா இடங்களிலும் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை நாம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறோம். உயர் நீதிமன்றத்தில் இருக்க வேண்டும் என்று நிறைவேற்றி, அனுப்பி இருக்கிறோம். அதற்கு என்ன கேட்டார்கள்? உச்ச நீதிமன்றம் உடனே சொன்னார்கள்.-- நமது மாநிலத்தில் தமிழிலேயே அனைத்து நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 348, உட்பிரிவு 2-உடன் இணைந்த 1993 ஆம் ஆண்டு ஆட்சி மொழிசட்டப் பிரிவு 7-ன்படி, சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஆணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் நமது மாநில ஆட்சி மொழியாகிய தமிழையே அறிமுகப்படுத்த வேண்டும் என்று தமிழக அரசு முடிவு எடுத்தது" என்பதுதான் நம்முடைய அரசின் தீர்மானம். அப்படி எல்லாம் முடியாது. அதற்கு இடம் இல்லை என்று ஒரு கடிதத்தை நமக்கு அனுப்பினார்கள். ஆனால், கலைஞர் தலைவர் அவர்கள் அதை மறுத்து, ஏன் முடியாது, செய்யலாம் என்பதற்கு விளக்கமான ஒரு கடிதத்தை இதே அரசியல் சட்டப் பிரிவு 348, உட்பிரிவு 2-ன்கீழ், அதனோடு இணைந்த 1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு 7-ன்படி பீகாருக்குத் தரப்பட்டிருக்கிறது; மத்தியப் பிரதேசத்திற்கு அவர்கள் வேண்டுகிறபடி ஆட்சி மொழியாக அங்கே போற்று மொழியாகக் கொண்டு வந்திருக்கிறார்கள்; உத்தரப் பிரதேசத்திலே இருக்கிறபோது ஏன் தமிழ்நாட்டிற்கு இருக்கக்கூடாது என்ற கேள்வியை எழுப்பினார்கள். அந்தக் கேள்வியை எழுப்பி, ஒரு கடிதத்தை மத்தியிலே இருக்கிற, சட்டத் துறை அமைச்சருக்கும், நம்முடைய பிரதமர் அவர்களுக்கும், நம்முடைய அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும் அனுப்பினார்கள். அதன்பிறகுதான், மத்திய அரசிலிருந்து முதல்வர் சலைஞர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். நம்முடைய பரத்வாஜ் அவர்கள், சட்டத் துறை அமைச்சர் மத்தியில், அவர் எழுதுகிறார். (மணியடிக்கப்பெற்றது)



பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கபபடுகிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** "Dear Mr. Karunanidhi, I thank you very much for your letter dated 11-3-2007 regarding the introduction of Tamil as official language for proceedings in the Madras High Court in terms of Article 348 (2) of the Constitution of India". அதற்குப் பிறகுதான் "I have carefully gone through the letter. I have asked my Department to process the matter afresh keeping in view the points raised by you in this matter and obtain the consent of the President of India as expeditiously as possible." நீங்கள் எழுதிய பிறகுதான் நான் இதை மிக carefull ஆகப்படித்து, என்னுடைய இலாகாவை இது குறித்து, மீண்டும் மத்திய சர்க்கார் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதற்கு, குடியரசுத் தலைவரின் கையெழுத்து வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று செய்தி அனுப்பியிருக்கிறார்கள். எனவே, இது, இன்றைக்கு நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற ஒன்று. எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற ஒன்று மட்டுமல்ல, இதைக் கொண்டு வந்து, இந்த மாநிலத்திலே, இந்த நீதிமன்றத்தில் தமிழை உட்கார வைக்கப் போகிறவரும் நம்முடைய முதல்வர் கலைஞா அவர்கள்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மிகப் பெருமையோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசியவர்கள் எல்லோரும் பெரும் பகுதி, நீதி நிர்வாகத்தில் பெரும் பகுதிக்கு என்ன கேட்டார்கள் என்று கேட்டால், பெரும்பகுதியும் கோர்ட்டைப் பற்றிப் பேசினார்களே தவிர, சட்டத் துறையைப் பற்றி யாரும் அதிகமாகக் கவலைப்படவில்லை. இருந்தாலும், அந்தத் துறையிலே நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்பதை இப்பொழுது announcement-ஆகச் சொல்கிறேன் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்சிராப்பள்ளி அரசுச் சட்டக் கல்லூரியில் மாணவர்களுககு விடுதி வசதி இல்லை என்று கூறப்பட்டது. அவர்களுக்காக ரூ.84 இலட்சத்தில் விடுதி கட்டித் தரப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் நலன் கருதி அவர்களுக்கு ரூ. 84 இலட்சத்தில் விடுதி கட்டித் தரப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, புரசைவாக்கத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதி வளாகத்திற்குள் சட்டக் கல்வி இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்காக ரூ. 25.83 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, அரசு சட்டக் கல்லூரிகளில் 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, இன்றுவரை 15 விரிவுரையாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களது பணியினை வரன்முறை செய்யக் கோரி வழக்குத் தொடுத்தனர். அது நிலுவையில் உள்ளது. இருப்பினும் இதுசம்பந்தமான இவர்களது கோரிக்கையினைக் கனிவுடன் ஏற்று, ஆசிரியர் தேர்வு வாரியத்தினைக் கலந்து, இவர்களது பணியை வரன்முறை செய்வதற்கான ஆணைகள் வெளியிடப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுச் சட்டக் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப ஆசிரியர் தேர்வு வாரியமும், ஆசிரியர் அல்லாத பணியிடங்களை நிரப்ப அரசு தேர்வாணையமும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. விரைவில் காலியாக இருக்கிற இடங்கள் நிரப்பப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2007-2008 ஆம் கல்வியாண்டு முதல் அரசு சட்டக் கல்லூரிகளில் மூன்று ஆண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்பிற்கும் மற்றும் சென்னை, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் B.A., B.L. (Hons.) சட்டப் படிப்பிற்கும் பட்டப் படிப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பாடத் திட்டப் படிப்பில் பெறப்பட்ட மதிப்பெண் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்கிற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று இங்கே பல இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் வேண்டுமென்று, கேட்டார்கள். கலைஞர் அவர்கள் வாரிக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் எல்லா ஊர்களுக்கும், வழக்கு மன்றம் இருக்கிற எல்லா ஊர்களுக்கும், இந்த ஆண்டே கட்ட



முடியாவிட்டாலும் கலைஞர் அவர்கள் தெரிவித்ததைப்போல், விரைவில் ஓரிரு ஆண்டுகளுக்குள்ளாக எல்லா நீதிமன்றங்களுக்கும் கட்டடம் கட்டித் தரப்படும். எனவே, இந்த ஆண்டு கீழ்க்காணும் இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட ஆணை பிறப்பிக்கப்படும்:

பிற்பகல் 1-35

எழும்பூர், கடலூர், கரூர், நாமக்கல், அறந்தாங்கி, பரமக்குடி, சிவகங்கை, தூத்துக்குடி, பூந்தமல்லி, ஆரணி, குடியாத்தம், அருப்புக்கோட்டை, ஈரோடு, திருவண்ணாமலை, கும்பகோணம், வேதாரண்யம், அரூர்.

புதிய நீதிமன்றங்கள் அமைத்தல்:

கீழ்க்காணும் இடங்களில் புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்படும்:

வேலூரில் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம். (மேசையைத் தட்டும் ஒலி)

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் சார்நிலை நீதிமன்றம்.

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டையில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்.

வேதாரண்யத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலூர் மாவட்டம், நெய்வேலியில் சார்நிலை நீதிமன்றம்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் சார்நிலை நீதிமன்றம்.

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றம்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் வனக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றம்.

மத்தியப் புலனாய்வுத் துறைக்குச் சென்னையில் ஒரு தனி நீதிமன்றம்.

வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.

இரண்டு தனி நீதிமன்றங்கள், மதுரை, கோயம்புத்தூர் மாவட்டத்தில் தலா ஒவ்வொன்று அமைக்கப்படும்.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் நீலகிரி மாவட்டத்தில், கூடலூரில் அமைக்கப்படும்.

செங்கல்பட்டில் மகிளா நீதிமன்றம் அமைக்கப்படும்.

50 கூடுதல் குற்றவியல் நீதிமன்றங்களை இந்த ஆண்டு அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இசைவினைத் தந்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற செய்தியினை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம்கூட Fast Track Court-ஐப்பற்றிப் பேசினார்கள். ஆனால் இந்த இலாகாவில், 50 கூடுதல் குற்றவியல் நீதிமன்றங்களை அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இசைவினைத் தெரிவித்திருப்பதற்கு நான் உள்ளபடியே பெருமைப்பட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம். (மேசையைத் தட்டும் ஒலி)

தருமபுரியில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் முதன்மை நடுவர் குற்றவியல் நீதிமன்றம்.

சென்னையில் கூடுதலாகத் தொழிலாளர் நீதிமன்றம்.

புதுக்கோட்டையில் மகிளா நீதிமன்றம்.

பூந்தமல்லியில் கூடுதல் உரிமையியல் நீதிமன்றம்.

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் தோண்டுவதற்காக நில எடுப்பு செய்யப்பட்டது குறித்து தொடுக்கப்பட்ட வழக்குகளை விசாரித்துத் தீர்வுகாண இரு சார்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில நீதித் துறை பயிற்சிக் கழகத்தில் பயிற்சியாளர்கள் நியமனம் செய்யவும், பிற கட்டமைப்பு வசதிகளுக்காகவும் ரூ.154 இலட்சம் ஒதுக்கப்படும்.

சென்னை சமரசத் தீர்வு மையம், உயர் நீதிமன்றம். சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் அமைக்கப்பட்டுள்ள சமரசத் தீர்வு மையத்தின் மேலான செயல்பாட்டிற்காக ரூ.39 இலட்சம் ஒதுக்கப்படும்.



அடுத்து, உயர் நீதிமன்றத்தில் கூடுதலாக நான்கு மாஸ்டர்களும், மாநகர உரிமையியல் நீதிமன்றம் மற்றும் சிறு வழக்குகள் நீதிமன்றங்களில் ஆறு கூடுதல் நீதிபதிகளும் சிறப்பாக நியமிக்க ஆணை வெளியிடப்படும்.

ஒன்று விட்டுவிட்டேன். தற்போது திண்டுக்கல்லில் இயங்கும் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை ஒட்டன்சத்திரத்திற்கு மாற்றி புதிய மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

இரண்டாவதாக, வழக்குகள் நிறைய தேங்கியிருப்பதாக இங்கே சொன்னார்கள்; ஒத்துக்கொள்கிறேன். Regular Magistrate Court-க்குப் போனால், காலையிலே இரண்டு மணி நேரம் பார்த்தீர்களென்றால், தினந்தோறும், Challan for Motor Vehicles Act Claim, Challan for Municipal cases, இதற்கே 2 மணி நேரம் ஆகும். இரண்டு மணி நேரத்திற்குப் பிறகுதான், அவர்கள், I.P.C.-ல் வந்த குற்றச்சாட்டையோ அல்லது Negotiable Instruments தொடர்பான குற்றச்சாட்டையோ எடுக்கமுடியும். அந்த இரண்டு மணி நேரத்திலே, இப்படியிருப்பதற்கு என்ன செய்வது என்பதற்கு உயர் நீதிமன்றம் ஒரு யோசனையைத் தெரிவித்திருக்கிறது. அந்த யோசனையை இந்த அரசு ஏற்றிருக்கிறது. அதனடிப்படையில், உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையின்பேரில், முதலிலே பரிட்சார்த்தமாக-experiment-ஆக—மாநகராட்சிப் பகுதிகளில் தொடுக்கப்படும் சிறு வழக்குகளை (petty cases) விரைவில் முடிக்க, இவ்வரசு ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்தலாம் என முடிவு செய்துள்ளது.

இதனடிப்படையில், முன்னோடித் திட்டமாக, சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிகளில், தற்போது இயங்கிவரும் நீதிமன்றங்களை, மாலை நேரத்தில், 6 மணியிலிருந்து, 8 மணி வரை கூடுதலாக நடத்தி, அந்த நீதிமன்றங்களில் நிலுவையிலிருக்கும் சிறிய வழக்குககளை, petty case-களை முடிவுக்குக் கொண்டுவர அரசாணை வெளியிடப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், நாம் நிறைய வழக்குகளை, Regular Court-க்கு வராமலே தடுக்க முடியும். இந்த Court-கள் மூலம் வழக்குகள் வேகமாகப் பைசல் ஆவதற்கு வழிவகை செய்யப்படும்.

எனவே, நிறைய நிதியை ஒதுக்கியது மட்டுமல்ல; உறுப்பினர்கள் கேட்டிருக்கிற பெரும்பாலான விருப்பங்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த மகிழ்ச்சி உங்களுக்கும் இருக்கும் என்று நினைக்கிறேன். எல்லோருக்கும் மகிழ்ச்சி அளித்து விடமுடியாது. ஆனால், அடுத்தடுத்த ஆண்டுகளில், அவையெல்லாம் நிறைவேற்றப்படும்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மிகப பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் 2 கோடி ரூபாயில் கட்ட வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதையேற்று, தன்னுடைய அறிவிப்பில், பண்ருட்டியில் 2 கோடி ரூபாயில், நீதிமன்றக் கட்டடம் கடடப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், முதல்வருடைய அறிவிப்பு, இந்த் நீதித் துறையினுடைய அறிவிப்பில் இடம் பெறாமல் இருக்கிறது. மாண்புமிகு முதல்வருடைய அறிவிப்பை ஏற்று, இந்த ஆண்டு அந்தக் கட்டடம் அங்கு கட்டப்படுமா? இல்லையென்றால், மாண்புமிகு பொதுப பணி மற்றும் சட்டத் துறையினுடைய அமைச்சர் அவர்கள், இதற்கென்று தனி அறிவிப்பை வெளியிடுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கமே, நாங்களே suo-motu-வாக ஒரு முடிவை எடுப்பதில்லை. உயர் நீதிமன்றத்திலும், அவர்கள் இந்தந்த வழக்கு மன்றங்களை எடுத்துக்கொள்ளுங்கள்; இதை இதை புது கோர்ட்டுக்கு அனுப்புங்கள்; இங்கெல்லாம் building கட்டுங்கள் என்று அவர்கள் கொடுக்கிற பரிந்துரையைத்தான் இந்த அரசு செயல்படுத்துகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000 ஆம் ஆண்டு, ஏற்கெனவே வேலூரில், அரசு சட்டக் கல்லூரி...



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பண்ருட்டிக்கு G.O. போடப்பட்டிருக்கிறது என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், எனக்கொரு பதிலைச் சொல்வார் என்று எதிர்பார்த்தேன். 2000 ஆம் ஆண்டில், வேலூரில் தொடங்கப்படும் என்று இந்த அவையில் அறிவிக்கப்பட்ட, அரசு சட்டக் கல்லூரியை, இந்த ஆண்டே மாண்புமிகு முதல்வர் அவர்கள உடனடியாகச் செயல்படுத்துவதற்கு முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. ஞானசேகரன்:** அமைச்சரிடமிருந்து எனக்கு பதில் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சா அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. நானே சட்டத் துறை அமைச்சராக இருந்துகொண்டு, நானே வேலூரில் உள்ள கோர்ட்டுக்கு ஒரு lift போட்டிருப்பது, அப்புறம் ஒரு Labour Court, அப்புறம் வாணியம்பாடியிலே கோர்ட், குடியாத்தத்திலே கோர்ட் என்று அறிவித்தால், எல்லோரும் கேட்பார்கள், அல்லவா? அதை அடுத்த வருடம், அடுத்த வருடம் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. சி. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு' நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்து நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் வந்தன. திருப்பூர் அந்தப் பட்டியலில் இடம்பெறும் என்று எதிர்பார்த்தேன். கடந்த முறை, இதே மன்றத்தில் நம்முடைய அன்றைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள், திருப்பூருக்கான புதிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கான எல்லா பரிந்துரைகளும் வந்திருக்கின்றன; வரும் ஆண்டில் உங்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கும் என்று தெரிவித்தார்கள். ஆனால், இந்த

ஆண்டு, அமைச்சருடைய மாற்றமோ, என்னவோ தெரியவில்லை.-- மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்காக.-- திருப்பூர் ஒரு முக்கியமான நகரம் என்பதை நீங்கள் அறிவீர்கள். குறைந்தபட்சக் கழிப்பிட வசதிகூட இல்லாத ஒரு நீதிமன்ற வளாகமாக இப்போது அது இருக்கிறது. ஆகவே, திருப்பூரினுடைய தேவையைக் கவனத்தில் கொண்டு புதிய நீதிமன்ற வளாகம் உருவாக்குவதற்கு மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய கோரிக்கை வீணாகவில்லை. முதலமைச்சர் அவர்கள் திருப்பூரையும் சேர்த்துக்கொள்ளும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா கேட்கட்டும்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுக்காலமாக நான் இந்த மன்றத்தில் வைத்த கோரிக்கை. பல முறை இதற்காக நான் குரல் கொடுத்திருக்கிறேன். நம்முடைய, இன்றைய பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற முறைகூட நான் கேட்டபோது, அப்போது சட்ட மந்திரியாக இருந்த திரு. ஜெயக்குமார் அவர்கள் என்னிடத்திலே சொன்ன பதிலைப் பார்த்து, 'set-up'-ஆ என்று கேட்டார்கள். அதைப்பற்றி நான் மறுபடியும், சென்ற முறையும் பேசினேன். பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களை நேரிலே சந்தித்தும் கோரிக்கை வைத்தேன். திருப்பெரும்புதூர் என்பது ஒரு தனித் தொகுதி. அதுமட்டுமல்ல, தாலுகாவினுடைய தலைநகர். அந்தத் தலைநகரிலே இருக்கின்ற மக்கள், ஒரு பக்கம் காஞ்சிபுரம், ஒரு பக்கம் தாம்பரம், ஒரு பக்கம் திருவள்ளூர், ஒரு பக்கம் பூந்தமல்லி என்று அலைந்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஒருநிலைப்படுத்துவதற்காகவாவது நீங்கள் திருப்பெரும்புதூரிலே ஒரு நீதிமன்றத்தை உருவாக்கித் தர முடியுமா என்று, இந்த பட்ஜெட் தொடரிலேயே அதை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும் தாழ்பணிந்து, கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள், ஏற்கெனவே 5 ஆண்டுக்காலம் கேட்டுக் கேட்டு சலித்துப்போய்விட்டது. அதறகு இன்றைய பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்கூட அப்போது அவரைக் கேலி செய்தார், 'set-up'-ஆ என்று கேலி செய்ததாகச் சொன்னார்கள். எங்களுக்குள்ள பயமே, இப்பொழுது அதை ஒத்துக்கொண்டால் இதுவும் 'set-up'-ஓ என்ற சந்தேகம் வந்துவிடும் (சிரிப்பு) அப்படி ஒரு களங்கம் இந்தக் கோரிக்கைக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் இதுவரையிலே அதைப்பற்றிப பேசவில்லை. இன்னொன்று, திருப்பெரும்புதூரில் நீதிமனறம் கட்டாயம் வேண்டுமென்று சொல்வதைப் பார்த்தால்--நான் எண்ணிக்கொண்டிருப்பது, திருப்பெரும்புதூரில் குற்றங்களே நடைபெறாது; அங்கு நீதிமன்றம் தேவையில்லை என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தேன். அம்மையார் சொல்வதைப் பார்த்தால்- நீதிமன்றம் இருக்கின்ற அளவிற்குத்தான் அந்த ஊர் இருக்கிறது என்று கூறுகின்றார்கள். எனவே, அதற்காக மனமிரங்கி, நீதிமன்றத்தை அங்கு தருவதற்கு இந்த அரசு ஒப்புதல் அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏதோ வற்புறுத்துவதாக நினைத்துக் கொள்ளக்கூடாது. கடநத நிதிநிலை அறிக்கை கூட்டத்தின்போதும், மானியக் கோரிக்கை விவாதத்தின்போதும், கடந்த ஆண்டு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மேட்டூரில் கட்டாயம் அடுத்த ஆண்டு கொடுக்கப்படும்; எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. உயர் நீதிமன்றத்திலிருந்தும் ஒப்புதல் வந்திருக்கிறது என்ற அறிவிப்பை கடந்த ஆண்டே அறிவித்தார்கள். இந்த ஆண்டு

எடுத்துக்கொள்ளப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள். ஏனோ தெரியவில்லை. சேலம் மாவட்டத்திற்கு ஒன்றுமே அறிவிக்கப்படவில்லை. ஆகவே, மேட்டூருக்கு அறிவிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன். (குறுக்கீடு) முதலில் உட்காருங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடத்திற்கு நிதி ஒதுக்கியதற்காக நமது பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, ஒரு உண்மையான தாய் என்பவர் தன்னுடைய குழந்தைகளிலே சவலைப் பிள்ளையாக இருக்கிற, பலகீனப்பட்டிருக்கிற குழந்தையை ஊட்டி, ஊட்டிப பாதுகாத்து வளர்ப்பதைப்போல, இன்றைக்கு நமது தமிழக முதல்வர் அவர்கள், சிவகங்கை தொகுதியைப் பல்வேறு துறைகளில் முன்னேற்றுவதற்காக, நடவடிக்கை எடுப்பதற்காக, சிவகங்கை மாவட்ட மக்களின் சார்பிலே நன்றியைக் கூறி, இந்த அரசு ஓர் உண்மையான தாய் அரசு என்று நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.226,12,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1-50

## (ஆ) கோரிக்கை எண் 33–சட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33-சட்டத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,23,31,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

## (ஆ) பேரவைத் தலைவரின் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள் நாளை 14-4-2007 தமிழ்ப் புத்தாண்டு தினம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது இனிய தமிழ்ப் புத்தாண்டு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அமைசசர்

பெருமக்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளை என் சார்பிலும், பேரவையின் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 16-4-2007 (திங்கட்கிழமை) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

**- ஏதுமில்லை -**

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

74. மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

75. மானியக் கோரிக்கை எண் 33-சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

76. 2006-2007 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம். (தமிழ்)

77. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

78. 2006-2007 ஆம் ஆண்டு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிவிப்புகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம். (தமிழ்)

79. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

80. 2006-2007 ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அறிவிப்புகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம். (தமிழ்)

## இணைப்பு I

*(94 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானிய கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

**1. முன்னுரை**

இந்திய அரசியலமைப்புச் சட்டம், நீதி நிர்வாகத்தை, நமது ஜனநாயகத்தின் மூன்றாவது முக்கியத் தூணாக ஏற்றுக்கொண்டுள்ளது. நீதி நிருவாகம், நியாயமாகவும் நேர்மையாகவும் செயல்படுவதற்கு ஏதுவாக, போதுமான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கு வகை செய்வது, இந்த அரசின் உறுதியான கொள்கையாகும்.

**2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு**

புதுதில்லியிலுள்ள உச்ச நீதிமன்றம் நமது நாட்டின் உச்ச நிலை நீதிமன்றமாகும். அது மாநிலங்களிலுள்ள அனைத்து உயர் நீதிமன்றங்களையும் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுள்ளது. மாநில நீதித் துறையின் படிநிலை அமைப்பானது இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்துடன் பல்வேறு சிறப்புச் சட்ட விதிகளின்கீழ் பின்வரும் நீதிமன்றங்களும்/ அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன—

(i) நொடித்தவர் சொத்தாட்சியர் உயர்நீதிமன்றம், சென்னை.

(ii) அரசு சொத்து தலைமைப் பொறுப்பாட்சியர், சென்னை.

(iii) சென்னை (சென்னை-3), மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள்.

(iv) தொழில் நடுவர் நீதிமன்றம், சென்னை.

(v) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் உள்ள குடும்ப நல நீதிமன்றங்கள்.

(vi) சென்னை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள பொருளாதாரக் குற்றங்களை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்.

(vii) குடிமையியல் உரிமைகள் பாதுகாப்பிற்கான தனி நீதிமன்றங்கள்.

(viii) தடா சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட தனி நீதிமன்றங்கள்.

(ix) இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும், போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடுப்பு (NDPS) சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும் விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்.

(x) சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்.

(xi) சென்னை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்.

(xii) மதுரையில் ஏற்பட்ட சாதிக் கலவரங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம்.

(xiii) சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், பெரம்பலூர், கடலூர் ஆகிய இடங்களில் உள்ள மகளிர் நீதிமன்றங்கள் (Mahila Courts).

(xiv) விரைவு நீதிமன்றங்கள் (எண்ணிக்கை 49).

### 3. நீதிமன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

சென்னை நகரில் தற்போதுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் இணைப்பு-II-லும் மற்றும் மாவட்டங்களிலுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் இணைப்பு-III-லும் கொடுக்கப்பட்டுள்ளது.

### 4. நிதி ஒதுக்கீடு

2006-2007 ஆம் ஆண்டில், மானியக் கோரிக்கை எண் 3 இன்கீழ், நீதி நிருவாகத்திற்கான மொத்த வரவு-செலவு திட்ட ஒதுக்கீடு ரூ. 213 கோடி ஆகும். இது, 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 270 கோடியாக



உயர்த்தப்பட்டுள்ளது. கட்டடங்கள், பதவியிடங்கள், ஏனைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஆகிய பல்வேறு பணிகளுக்காக 2006-2007 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டவை, 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடருவதற்காக நிதி ஒதுக்கீடு உயர்த்தப்பட்டுள்ளது.

### 5. செலவின வகைப்பாடு

முதன்மை இருப்பிடமாகிய சென்னையிலுள்ள உயர் நீதிமன்றம், மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை ஆகியன குறித்த செலவு "சாட்டிய செலவினம்" என்றும், நீதி நிருவாகம் தொடர்பான பிற செலவினங்கள் "அனுமதிக்கப்பட்டவை" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 6. முதன்மை இருப்பிட உயர் நீதிமன்றம், சென்னை

6.1. மாநிலத்தில் நீதி வழங்குவதில் உயர் நீதிமன்றம் தலைமை வகிக்கிறது. உயர் நீதிமன்றத்திற்காக ஒப்புதல் வழங்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 49 ஆகும். எனினும், தற்போது உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை (சென்னையிலுள்ள முதன்மை நடுவர் ஆயம் மற்றும் மதுரைக் கிளை நடுவர் ஆயம்) 46 ஆகும்.

6.2. உயர் நீதிமன்றம், நீதிப்பேராணை மற்றும் உரிமையியல் விவகார அசல் வழக்கு விசாரணை உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகார வழக்குகளின் மேல்முறையீட்டு விசாரணை ஆகிய அதிகாரங்களைப் பெற்றுள்ளது. உரிமையியல் விவகார அசல் வழக்குகளைப் பொறுத்தவரையில் சென்னை மாநகரத்துக்குள் எழும் ரூ. 10,00,000/-க்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரிக்கிறது. நீதிபதிகளுக்கிடையிலான பணி மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் பிரித்தளிக்கப்படுகிறது. மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான புதுச்சேரி நீதிமன்றங்கள் தொடர்பாகவும் அதிகார வரம்பைக் கொண்டுள்ளது. புதுச்சேரி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள், பணியாளர்கள் குறித்த செலவு முதற்கண் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை புதுச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

6.3. தலைமைப் பதிவாளர் உயர் நீதிமன்றத்தின் நிருவாகத் தலைவராக விளங்குகிறார். அவருக்கு இணையாக பதிவாளர் (கண்காணிப்பு), பதிவாளர் (நீதி), பதிவாளர் (நிருவாகம்) மற்றும்

[2007 ஏப்ரல் 13

பதிவாளர் (மேலாண்மை) ஆகியோர் உள்ளனர். மேற்காணும் பதிவாளர்களுக்கு உதவ மாஸ்டர் (Master), துணைப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள், முதன்மைக் கணக்கு அலுவலர் மற்றும் சார் உதவிப் பதிவாளர்களும் உள்ளனர். நீதி வழங்குவதுடன் இம்மாநிலத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர் நீதிமன்றம் மேற்கொள்கிறது.

**7. மதுரையில் உள்ள சென்னை உயர் நீதிமன்றக் கிளை**

மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் 6-7-2004 ஆம் நாளிட்ட ஜிஎஸ்ஆர்எண் 446 (இ)-இல் சென்னை உயர் நீதிமன்றத்தின் (நிலையான ஒரு நடுவர் ஆயம் மதுரையில் அமைத்தல்) ஆணையில் (2004-ல்) வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, சென்னை உயர் நீதி மன்றத்தின் மதுரை கிளையானது 24-7-2004 அன்று முதல் இயங்கி வருகிறது. இதன் அதிகார எல்லையானது மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தேனி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையானது தற்பொழுது 12 நீதிபதிகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. அசல் வழக்குகள் அதிகார வரம்பினைத் தவிர்த்து ஏனைய விவகார வழக்குகளில், சென்னையிலுள்ள முதன்மை இருப்பிட உயர் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரங்களைப் போன்றே, இதற்கும் அதிகார வரம்பு அமைந்துள்ளது.

**8. தமிழ்நாட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் நிருவாக அமைப்பு**

**8.1. சென்னை நகரம்**

**(அ) மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை**

மகளிர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் உட்பட 12 மாவட்ட நீதிபதிகள், 18 உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலை) மற்றும் உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் நிருவாகப் பொறுப்பு வகிக்கும் பதிவாளர் ஒருவர் உட்பட 31 நீதிபதிகள் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் பணிபுரிகின்றனர். மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை நகர எல்லை முழுமைக்கும் விரிவடைந்துள்ளது.



2007 ஏப்ரல் 13]

தமிழ்நாடு 1873 ஆம் ஆண்டு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம் மற்றும் 1892 ஆம் ஆண்டு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், ஆகியவை 2004 ஆம் ஆண்டு சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டு உதவி நீதிபதிக்கு உயரளவாக ரூ. 5.00 இலட்சம் வரையிலும், சென்னை மாநகர முதன்மை நீதிபதிக்கு ரூ. 5.00 இலட்சத்திற்கு மேற்பட்டும் ஆனால் ரூ. 10.00 இலட்சத்திற்கு மிகாமலும் பணம் சார்ந்த அதிகார வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது. ரூ. 10.00 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள பணம் சார்ந்த வழக்குகள், சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட வேண்டும். மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை செஷன்ஸ் பிரிவுக்கு அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே கூடுதலாக மாநகர உரிமையியல் நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு 1997 ஆம் ஆண்டு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க சென்னையில் தனி நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் மாநகர உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்த வரையில் ரூ. 712 இலட்சங்கள் மொத்தம் செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**(ஆ) சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை**

இந்நீதிமன்றத்திற்கு மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலுள்ள நீதிபதி தலைமை வகிக்கிறார். மேலும், உரிமையியல் நீதிபதி (முதுநிலை) பதவித் தரத்தில் எட்டு நீதிபதிகளும், நிருவாகத்திற்கு பொறுப்பு வகிக்கிற பதிவாளர் உட்பட உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் எட்டு நீதிபதிகளும் உள்ளனர். குறிப்பிட்ட சில ஆணைகளை நிறைவேற்றி, மனுக்களை முடிவு செய்தல் போன்ற நீதி நிருவாகப் பணிகளையும் பதிவாளர் கவனிக்கிறார். தலைமை வகிக்கும் நீதிபதியும், இதர நீதிபதிகளும் 1882 ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வரும் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களைச் செலுத்துவர். ஐந்தாவது மற்றும் ஆறாவது நீதிபதிகள், மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் உள்ள வழக்குகளை விசாரிப்பதற்கான நடுவர் நீதிமன்றங்களாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நீதிபதிகளும் மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். பத்து முதல் பதினாறு வரையிலுள்ள நீதிபதிகள்

[2007 ஏப்ரல் 13

சென்னை நகரத்திற்கான வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதியும் இரண்டு முதல் நான்கு வரை, ஏழு மற்றும் எட்டாவது நீதிபதிகளும் வாடகைக் கட்டுப்பாடு குறித்த மேல்முறையீடுகளை விசாரிக்க அதிகாரம் பெற்றுள்ளனர். சிறு வழக்குகள் நீதிமன்றத்திற்கான செலவினம் 2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 347 இலட்சங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 8.2 வெளியூர் நீதிமன்றங்கள்

### (அ) மாவட்ட நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில் 27 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூரில் தனியாக மாவட்ட குற்றவியல் அமர்வு நீதிமன்றம் ஒன்று 3-11-2006 ஆம் நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான குற்றவியல் அமர்வு நீதிமன்ற நீதிபதிகளும் ஆவார். தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், ஜமீன் சொத்து ஒழிப்புச் சட்டம், மோட்டார் வாகனச்சட்டம் போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்களின்கீழ் தனித் தீர்ப்பாயங்களாகவும் அவரவர்கள் பணியாற்றுகின்றனர். தமிழநாடு 1873 ஆம் ஆண்டு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், மற்றும் 1892 ஆம் ஆண்டு மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம் (சட்டம் 1/2004-ன்) மூலம் திருத்தம் செய்யப்பட்டு மாவட்டங்களிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் பண விவகார அதிகார வரம்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சார்நிலை நீதிமன்றங்களின் அதிகார வரம்பு பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது—

| மாவட்ட முன்சீப் நீதிமன்றம் | சார்நிலை நீதிமன்றம் | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|---|
| ரூபாய் 30,000/--இல் (ரூபாய் முப்பது ஆயிரம்) இருந்து ரூபாய் 1,00,000/-- (ரூபாய் ஒரு இலட்சத்திற்கு) உயர்த்தப்பட்டுள்ளது. | ரூ.1,00,000/--க்கு (ரூபாய் ஒரு இலட்சம்) மேல் ரூபாய் 5,00,000/-- (ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு) மிகாமல். | ரூபாய் 5,00,000/-- (ரூபாய் ஐந்து லட்சம்) மேல் உச்சவரம்பின்றி. |

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் சார்பு நீதிமன்றங்களின் மேல்முறையீட்டு வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்தின்கீழ் வரும். மாவட்ட நீதிபதிகள் அவரவர்கள் மாவட்டத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர்.



2007 ஏப்ரல் 13]

### (ஆ) சார் நீதிபதி நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி-முதுநிலைப் பிரிவு)

சார் நீதிபதிகள் தற்போது உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலைப் பிரிவு) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். உரிமையியல் செயல்பாடு ஆணை வழக்குகளில் இந்நீதிபதிகளின் பண விவகார அதிகார வரம்பானது ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டும், ரூபாய் 5 இலட்சத்திற்கு உட்பட்டதும் ஆகும். உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தில் அவர்களின் அதிகார வரம்பின் எல்லை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அவரவர் அதிகார வரம்பிற்கு உடபட்ட பகுதியில் இருக்கும் மாவட்ட முன்சீப் நீதிமன்ற நடுவர்களின் முடிவிற்கெதிராக ரூபாய் ஒரு இலட்சம் மதிப்புக்குட்பட்டுத தொடரப்படும் மேல்முறையீடுகளுக்கான மேல்முறையீட்டு அதிகாரத்தையும் உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலைப் பிரிவு) பெற்றுள்ளனர். உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலைப் பிரிவு) உதவி குற்றவியல் அமர்வு நீதிபதிகளாகவும் செயலபடுகின்றனர். மேலும், சார்நிலை நீதிமன்றங்கள் மோட்டார் விபத்து உரிமைக் கோரிக்கைகளின் தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. இம்மாநிலத்தில் 107 சார்நிலை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

### (இ) மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி-இளநிலைப் பிரிவு)

மாவட்ட முன்சீப் நீதிபதி பதவிகள் தற்போது உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு) பதவிகளாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான வழக்குகளை விசாரித்து வருகின்றனர். மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று அதிகார வரம்பைப் பெற்றுள்ளன. அவை, தங்களின் வரம்புக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாக செயலாற்றுவதுடன் ரூ.20,000/- வரையிலான சிறு வழக்குகளையும் விசாரித்து வருகின்றன. இம்மாநிலத்தில் 160 மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

### (ஈ) மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தின் ஒருசில பகுதிகளில் உள்ள வழக்காடும் பொதுமக்கள் தங்கள் உரிமையியல் தொடர்பான குறைகளைத் தீர்த்துக் கொள்வதில் மிகுந்த இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனா. அவர்கள் வசிக்கும் பகுதியில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத காரணத்தால் அதற்காக அவர்கள் வெளியே உள்ள

[2007 ஏப்ரல் 13

நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அவர்களுடைய இடர்பாடுகளைக் களையும் பொருட்டு மாவட்ட குற்றவியல் (ம) நடுவர் நீதிமன்றங்கள், உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளைத் தீர்த்து வைக்கின்றன. அத்தகைய நீதிமன்றங்கள் மொத்தம் 65 உள்ளன.

வெளியூரிலுள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் தொடர்பாக 2007-2008 ஆம் ஆண்டிற்கு செலவு ரூ.11,200 இலட்சங்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**(உ) தொழிலாளர் நல நீதிமன்றங்கள்**

சென்னையில் மூன்று நீதிமன்றங்களும் மற்றும் மதுரை, கோயம்புத்தூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் பத்து தொழிலாளர் நல நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் அனைத்துப் பகுதிகள் மீதும் அதிகார வரம்பு கொண்ட தொழில் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது. தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றிற்கு தலைமை தாங்குபவர்கள் மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் உள்ளவர்கள் ஆவர். அரசு அனுப்பி வைக்கும் தொழிலாளர் குறித்த தகராறுகளையும், பாதிக்கப்பட்ட தரப்பினர் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் விசாரிக்கின்றன. தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நடுவர்கள் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் சென்று, முகாம் நீதிமன்றம் நடத்தி தொழிலாளர் பற்றிய வழக்குகள் மற்றும் உரிமை கோரிக்கை மனுக்கள் மீது விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்குகின்றனர். சென்னையிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றிற்கு 2007-2008 ஆம் ஆண்டு ரூ.308 இலட்சம் செலவும் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**9. தமிழ்நாட்டிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களின் நிர்வாக அமைப்பு**

**9.1. சென்னை நகரம்**

சென்னை நகரில், தலைமைப் பெருநகர குற்றவியல் நீதிமன்றம் மற்றும் கூடுதல் தலைமைப் பெருநகர குற்றவியல் நீதிமன்றம் உட்பட



2007 ஏப்ரல் 13]

மொத்தம் 24 பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தலைமைப் பெருநகர குற்றவியல் நடுவர், கூடுதல் தலைமைப் பெருநகர குற்றவியல் நடுவர் மற்றும் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பத்தாவது, பதினொன்றாவது பெருநகர குற்றவியல் நடுவர்கள் உரிமையியல் நீதிபதி (முதுநிலை) பதவி நிலையைச் சார்ந்தவர்கள் ஆவர். ஏனைய அனைத்து பெருநகர குற்றவியல் நடுவர் உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவி நிலையை சார்ந்தவர்கள் ஆவர். பெருநகர குற்றவியல் நடுவர்கள் சென்னை நகரில் அவரவர் அதிகார வரம்புக்குட்பட்ட குறிப்பிட்ட காவல் நிலைய வழக்குகள் குறித்து விசாரிக்கும் அதிகாரம் பெற்றவராவர்.

மாநகரிலுள்ள பெருநகர நீதிமன்றங்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 582 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**9.2. வெளியூர்**

**(அ) தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்**

தற்போது மாநிலத்தில் 27 நீதித் துறை தலைமை நடுவர்கள் உள்ளனர். திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூரில் தனியாக ஒரு தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 3-11-2006 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. சிலவகை வழக்குகளில் உதவிக் குற்றவியல் நடுவருக்குரிய அதிகாரங்கள் தலைமைக் குற்றவியல் நடுவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி நீதித் துறை தலைமை நடுவர்கள் அவரவர் மாவட்டத்திலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களை ஆய்வு செய்வர்.

**(ஆ) நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**

ஏறக்குறைய அனைத்து வட்டங்களிலும் நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் 181 நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. மாவட்டங்களில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் 2007-2008 ஆம் ஆண்டிற்கான செலவு ரூ.4,828 இலட்சங்கள் ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 13

## 10. தமிழ்நாட்டில் செயல்படும் தனி நீதிமன்றங்கள்

### 10.1. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள்

1989 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம்) குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென 14 மாவட்டங்களின் ஆட்சி எல்லையை உள்ளடக்கிய நான்கு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இந்தக் கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் குறித்த விவரங்களும், அவற்றின் அதிகார வரம்பும் இக்கொள்கை விளக்கக் குறிப்பின் இணைப்பு-IV ஆக இணைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், தொடர்புடைய முதன்மை அமர்வு நீதிமன்றம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்(வன்கொடுமை) தடுப்புச் சட்டத்தின்கீழ் வரும் குற்றங்களை விசாரணை செய்யும் குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் செலவு 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.84 இலட்சம் என்று மதிப்பிடப்படுகிறது.

### 10.2. பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்

பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களும், அதாவது கூடுதல் தலைமைப் பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களும் (பொருளாதாரக் குற்றப்பிரிவு-I மற்றும் பொருளாதாரக் குற்றப்பிரிவு-II) மற்றும் மதுரையில் ஒரு நீதிமன்றமுமாக மூன்று தனி நீதிமன்றங்கள் உள்ளன. கூடுதல் தலைமைப் பெருநகர குற்றவியல் நடுவர் (பொருளாதார குற்றப் பிரிவு-I மற்றும் பொருளாதாரக் குற்றப்பிரிவு-II) மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ளார். மதுரையிலுள்ள தலைமைக் குற்றவியல் நடுவர், உரிமையியல் நீதிபதி (முதுநிலைத்தரம்) பதவித்தரத்தில் உள்ளார். 2007-2008 ஆம் ஆண்டிற்கு இந்நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவு ரூ.59.62 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### 10.3. குடும்ப நல நீதிமன்றங்கள்

சென்னையில் மூன்றும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய ஒவ்வொரு இடங்களில் ஒன்றுமாக மொத்தம் ஆறு குடும்ப



2007 ஏப்ரல் 13]

நீதிமன்றங்கள் உள்ளன. குடும்ப நீதிமன்றங்கள் குறித்த செலவு 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ. 205 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் 2 திருமண ஆலோசகர்கள் என்ற வீதத்தில், ஆறு நீதிமன்றங்களுக்கும் 12 திருமண ஆலோசகர்கள் நியமனம் செய்வதற்கும் அரசு முடிவுசெய்துள்ளது.

### 10.4. சிறப்பு நீதிமன்றங்கள்

குறிப்பிட்ட தனிச் சட்டத்தின்கீழ் குற்றங்கள் குறித்த தனிக் கவனம் செலுத்தவும் அல்லது சட்டம் ஒழுங்கு நோக்கிலும் சமூகச் சீர்திருத்தம் மற்றும் நீதி வகையிலும் தனித்தன்மை வாய்ந்த வழககுகளை விசாரணை செய்யவும் அவசியமான நேர்வுகளில் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படுகின்றன. அதற்கிணங்க, இம்மாநிலத்தில் பின்வரும் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:

(i) மத்திய குற்றபபுலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள் சென்னையில் இரண்டும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் ஒவ்வொன்றுமாக மொத்தம் 4 நீதிமன்றங்கள் உள்ளன.

(ii) போதை மருந்துகள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ், வழக்குகளை விசாரணை செய்வதற்காக சென்னையில் தனி நீதிமன்றம் ஒன்று உள்ளது.

(iii) 1908 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின்கீழ் நடுவர் மன்றம் ஒன்று உயர் நீதிமன்றத்தில் செயல்பட்டு வருகிறது.

(iv) சந்தனக்கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களுக்கான தனி நீதிமன்றங்கள் திருப்பத்தூரில் உள்ளன.

(v) இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ், பயணச்சீட்டில்லா பயணம் மற்றும் ஏனைய குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னையில் எழும்பூர், சென்ட்ரல் ஆகிய இரயில் நிலையங்களிலும், இரயில்வே நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

(vi) போக்குவரத்து தொடர்பான குற்றங்களை விசாரணை செய்வதற்காக சென்னையில் இரண்டு நடமாடும் நீதிமன்றங்கள் உள்ளன.

[2007 ஏப்ரல் 13

(vii) தடாச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்காக் சென்னையில் இரண்டும் திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஒவ்வொன்றுமாக மொத்தம் நான்கு தனி நீதிமன்றங்கள் உள்ளன.

(viii) இன்றியமையாப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்காக சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்று என்ற வகையில் ஆறு தனி நீதிமன்றங்கள் உள்ளன.

(ix) குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்கு சென்னையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு நீதிமன்றங்கள் உள்ளன. பொடா சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கான வழக்குகளும் சென்னையில் உள்ள இத்தனி நீதிமன்றத்தில் நடத்தப்படுகின்றன.

(x) இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக மதுரையில் ஒரு அமர்வு நீதிமன்றம் செயல்பட்டு வருகின்றனது.

(xi) பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்காக மட்டுமே சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், பெரம்பலூர் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் தலா ஒவ்வொன்று வீதம் எட்டு மகளிர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

(xii) உயர் நீதிமன்றத்தின் இசைவுடன், மாநிலத்தில் உள்ள அனைத்து முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றங்களை மனித உரிமைகள் நீதிமன்றங்களாக அரசு குறிப்பிட்டுள்ளதுடன் சென்னை நகர உரிமையியல் நீதிமன்றம், முதன்மை நீதிபதியும் இப்பொருள் பற்றி கவனிப்பார். உயர் நீதிமன்ற உத்தரவுகளின்படி, இவ்வழக்குகளை கையாளுவதற்காக குற்றவியல் சிறப்பு வழக்கு நடத்துநர்களை அரசு நியமித்துள்ளது.

(xiii) நிதி நிறுவனங்களில் வைப்பீடு செய்பவர்கள் நலன் பாதுகாப்புச் சட்டம் 1997-ன்கீழ் குற்றங்களை விசாரணை செய்வதற்காக சென்னையில் ஒரு தனி நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.



2007 ஏப்ரல் 13]

(xiv) வெள்ளை ரவி மற்றும் சேரா மீதான வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றே ஒரு கூடுதல் அமர்வு நீதிமன்றம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

### 10.5. விரைவு நீதிமன்றங்கள்

பதினொன்றாவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி நீதிமன்றங்களில் வழக்குகளின் தேக்கநிலையைக் குறைக்கும் பொருட்டு, குறிப்பாக மாவட்ட அமர்வு நீதிமன்றங்கள் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களில் தேங்கியுள்ள குற்ற வழக்குகளில் விரைவாக தீர்வு காண்பதற்கு ஏதுவாக மாநிலத்தில் 49 விரைவு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இந்நீதிமன்றங்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.526 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த விரைவு நீதிமன்றங்களை மேலும் 2010 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து செயலில் இருப்பதற்கு மத்திய அரசு இசைவு அளித்துள்ளது.

### 11. சென்னை அரசு தலைமை சொத்தாட்சியர்–பொறுப்பு சொத்தாட்சியர்

சென்னையில் உள்ள அரசு தலைமை சொத்தாட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாக உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித்தரத்தில் துணைத் தலைமை சொத்தாட்சியர் பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். உரிய வயதடையாதவர்கள் மற்றும் அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துக்களுக்கும் இவ்விரு அதிகாரிகளும் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள், அரசுத் தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்தின் விதிமுறைகளின்படி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றார்கள். 2007-2008 ஆம் ஆண்டிற்கான தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் அலுவலகத்தைப் பொறுத்தமட்டில் செலவு ரூ. 60.41 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### 12. சட்ட இதழ்

மாதத்திற்கு இருமுறை "தீர்ப்பு திரட்டு" என்னும் பெயரில் வெளிவரும் சட்ட இதழை வெளியிடுவதற்கான பணியாளரமைப்புச் செலவு 2007-2008 ஆம் ஆண்டிற்கு செலவு ரூ.31.48 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு இதழ் ரூ.32/- என்னும் விலையில் இது வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது.

## 13. நீதித் துறை பயிற்சிக் கழகம்

மாவட்ட நீதிபதிகள், சார்நிலை நீதிபதிகள் மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் மற்றும் குற்றவியல் நீதிபதிகள் போன்ற நீதித் துறை அதிகாரிகளுக்கும் மற்றும் நீதித் துறை பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக நீதித் துறை பயிற்சிக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்கான உத்தேசச் செலவு ரூ.46.76 இலட்சம் ஆகும். போபாலில் உள்ள தேசிய நீதித் துறை பயிற்சிக் கழ முன்னாள் இயக்குநர், பேராசிரியர் (டாக்டர்) என்.ஆர். மாதவமேனன் (பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்) தொடக்கத்தில் இரு ஆண்டுகளுக்கு தமிழ்நாடு மாநில நீதித் துறை பயிற்சிக் கழகத்தின் கௌரவ ஆலோசகராக நியமிக்கட்பட்டுள்ளார். அவர் பணியிலுள்ள அதிகாரிகள் மற்றும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நீதித் துறை அதிகாரிகளுக்கு, சிறந்த முறையில் பயிற்சி அளித்து, நடைமுறையில் மிகவும் பயனுள்ளவகையில் பயிற்சி அலகுகளை தயாரிப்பதுடன் தலைப்புகளையும்; திறமையான நபர்களையும் தெரிந்தெடுபபதிலும் பயிற்சிக் கழகத்தின் பணிமுறைகளைக் கண்காணிப்பதிலும் தமிழ்நாடு நீதித் துறை பயிற்சிக் கழக இயக்குநருக்கு வழிக்காட்டி, பயிற்சிக் கழகத்தில் நீதித் துறை பயிற்சித் தரத்தை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய முறையான நடவடிக்கைகள் குறித்து இயக்குநருக்கு ஆலோசனை வழங்குவார். பயிற்சிக் கழகத்தின் கலந்தாய்வுக் கூடத்துக்கு ஒலியெழுப்பான், கூடுதல் குளிர்சாதன வசதி, நூலகத்திற்கு புத்தக அலமாரிகள், போன்ற பல்வேறு அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு அரசு ரூ. 55.75 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

## 14. சார்நிலை நீதிமன்றங்களை பரவலாக்குதல்

குறிப்பிட்ட ஒரே இடத்தில் பல நீதிமன்றங்கள் செயல்படுவதைத் தவிர்க்கவும், வழக்காடும் பொது மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும், வெளியூர்களிலுள்ள சார்நிலை நீதிமன்றங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன.

வெளியூர்களிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, தற்போது, தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதைப்போன்றே சென்னை மாநகர அதிகார வரம்பினை சென்னை மாநகர், மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டமும், சிறு வழக்குகள் நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றச் சட்டமும் வரையறுத்துள்ளன.



மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கும், சார்நிலை நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்கும் பரந்துள்ளது. திருவாரூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களைப் பொறுத்தவரை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களில் பரந்திருக்கும். குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், அதன் அதிகார வரம்பு குற்றவியல் நடைமுறைச் சட்டவிதித் தொகுப்பின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காவல் நிலையங்களுக்குப் பரந்திருக்கும். அரசு உயர் நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து, தேவைப்படுமிடங்களில் புதிதாக நீதிமன்றங்களை ஏற்படுத்தும்.

## 15. கணினிமயமாக்கல்

சென்னை உயர் நீதிமன்றத்தைக் கணினிமயமாக்கும் பணிக்கென மைய அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறை புதுதில்லியில் இயங்கும் தேசிய தகவல் மையத்திற்கு 2006 ஜனவரியில் ரூ.348 இலட்சம் வழங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட தேசிய தகவல் மையம இத்தொகையில், சென்னை உயர் நீதிமன்றத்திற்கு 253 கணினிகளையும் அதன் துணைப் பாகங்களையும் வாங்கி வழங்கியுள்ளது. சென்னை உயர் நீதிமன்ற பல்வேறு பிரிவுகளில் இக்கணினிகளை நிறுவும் பணி நடைபெற்று வருவதுடன் அவை இணையதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், மாநகர நீதிமன்றங்கள் ISDN வசதி மூலமாக இணையதளத்துடன் இணைக்கப்படவுள்ளன. மேலும் 8 பெரிய அளவிலான கூட்டுத் திரைக்காட்சி பலகைகளும் (சென்னையில் 6 பலகைகளும், மதுரையில் 2 பலகைகளும்) 43 சிறிய நீதிமன்றக்கூட காட்சிப் பலகைகளும் (சென்னையில் 31 பலகைகளும், மதுரைக் கிளையில் 12 பலகைகளும்) நிறுவும் பணி விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாண்புமிகு நீதிபதிகள் பயன்படுத்துவதற்காக 39 மடிக் கணினிகளும், மாண்புமிகு நீதிபதிகளின் இல்ல அலுவலக பயன்பாட்டிற்கு, உச்ச நீதிமன்ற வழக்குகளை நேரடியாகப் பெறுவதற்கு 30-CD-ROMS வழங்கவும் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மாண்புமிகு தலைமை நீதிபதியின் இல்ல அலுவலகப் பயன்பாட்டிற்காகவும் அனைத்து மாண்புமிகு நீதிபதிகளின் தீர்ப்புகளை சொல்லச் சொல்ல எழுதுவதற்காகவும, 31 குரல் அடையாளம் காணும்

[2007 ஏப்ரல் 13

மென்பொருட்களும் வழங்கப்பட்டன. அவை தானாகவே டிஜிட்டல் முறையில் மாற்றப்படும்.

மேற்சொன்னவை தவிர இணைப்புக் கட்டடத்தின், தரைத்தளத்திலுள்ள, தகவல் மையத்தில் பிரிண்டர்களுடன் கூடிய 3 சொந்தப் பயன்பாட்டுக் கணினியும் நிறுவப்பட்டுள்ளது. வழக்கின் நிலை குறித்த தகவலை வழக்குரைஞர்கள் மற்றும் வழக்கு தொடர்ந்த பொதுமக்களுக்கு அளிக்கப்படுகிறது.

மேலும், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் மதுரையில் உள்ள சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை இடையே வழிகலந்தாய்வுக்காக (Video conferencing) காட்சித்திரை கலந்துரையாடல் சாதனத்தை நிறுவுவதற்காக மாநில அரசு ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு செய்து, இச்சாதனம் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.

வழக்குகளை தொகுத்தல், குறியீடு செய்தல், ஆகியவற்றிற்கு கணினி மயமாக்கப்பட்ட குறியீட்டு தாள்கள் ஆகியவை 12-6-2006-லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

உரிமையியல் வழக்குகள் தொடர்பான ஜாமீன்/முன்ஜாமீன் ஆணைகள் மற்றும் இடைக்கால ஆணைகள் போன்ற நாள்தோறும் பிறப்பிக்கப்படும் ஆணைகள் 7-2-2001-லிருந்து கணினி மூலம் வழங்கப்பட்டு வருவதுடன், அதே நாளிலேயே வழங்கப்பட்டு வருகின்றன. முடிவுறாத வழக்குகள் மீதான ஆணையின் நகல்களும் ஒருவார காலத்திற்குள்ளேயே வழங்கப்பட்டு வருகிறது.

## 16. உயர் நீதிமன்ற அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ் மொழியை அறிமுகப்படுத்துதல்

உயர் நீதிமன்ற அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ் மொழியை அறிமுகப்படுத்திட இந்த அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளதை அனைத்து உறுப்பினர்களும் அறிந்ததே. இதன் தொடர்பாக 6-12-2006 அன்று இந்த அவையில் ஏக மனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டம் 348, உட்பிரிவு 2-ன் உடன் இணைந்த 1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச்சட்டப் பிரிவு 7-ன்படி மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற மைய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கான ஒப்புதலைப் பெற மைய அரசின் உயர்மட்ட அளவில், வலியுறுத்தியுள்ளார்.



2007 ஏப்ரல் 13]

## 17. 2007–2008 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி இந்நிதியாண்டில் ரூ.125 கோடி செலவில் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த காலத்தில் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைக் காட்டிலும் 8 மடங்கு அதிகமாகும். மேலும் இவ்வரசு மாநிலத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கு ஒருங்கிணைந்த கட்டடங்களை வருகின்ற, 4 வருடங்களில் கட்டி நிறைவு செய்ய முடிவு எடுத்துள்ளது. இதைத்தவிர 2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ், கீழ்கண்டவற்றையும் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது:—

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | உயர் நீதிமன்றத்தில் ஆங்கிலப் பதிவேடு பிரிவு மற்றும் கூடுதல் நூலகப் பகுதிக்கு கூடுதல் ஸ்டீல் பதிவேட்டு பலகணி அமைத்தல் | 16.60 |
| 2. | வேலூர் சத்துவாச்சாரி ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தில் மின்தூக்கி வசதி அமைத்தல் | 15.00 |
| 3. | திண்டுக்கல் மாவட்டம் பழனியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வளாகத்தில் நீதிபதி குடியிருப்பு கட்டுதல் | 13.80 |
| 4. | சங்ககிரியில் சார்பு நீதிபதி மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிபதிகளுக்குக் குடியிருப்பு கட்டுதல் | 13.80 |
| 5. | விழுப்புரம் மாவட்டத்தில் 10 நீதிபதிகள் அலுவலர்கள் குடியிருப்புகளில் உள்ள சமையல் அறைகளில் புகைபோக்கி மின் விசிறி வசதி ஏற்படுத்துதல் | 0.22 |
| | மொத்தம் ... | 59.42 |

[2007 ஏப்ரல் 13

## 18. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு

### 18.1. நோக்கங்கள்

சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு இலவசமாக, பொருத்தமான சட்டப் பணிகளை வழங்குவதற்கும், பொருளாதார அல்லது ஏனைய இயலாமைகள் காரணமாக யாதொரு குடிமக்களுக்கும் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்வதற்கும், ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சமுதாயத்தின் ஏனைய வறிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் அவர்களுடைய உரிமைகள் குறித்துப் பயிற்றுவிப்பதற்கும், பல்வேறு சமூக நலச் சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளில் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பயன்கள் மற்றும் சலுகைகளை அவர்கள் பெற இயலச் செய்வதற்கும், தகராறுகளுக்குத் தீர்வு காணும் ஒரு மாற்று அமைப்பாக சட்டப்படிக்கான அடிப்படையில் மக்கள் நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்கும் 1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் சட்டம் (59/1994 ஆம் எண் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு) இயற்றப்பட்டது. மேற்சொன்ன அலுவல்களை ஆற்றுவதற்கு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள், வட்டச் சட்டப் பணிகள் குழுக்கள் மற்றும் உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் குழு ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு இச்சட்டம் வகை செய்கிறது. சட்டத்தின் III ஆம் அத்தியாயம், 6-3-1997 ஆம் நாளிலிருந்து தமிழ்நாடு மாநிலத்திற்கு நீட்டிக்கப்பட்டது. III ஆம் அத்தியாயத்தின்கீழ் தேவையான விதிகள் அறிவிக்கையிடப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான மாவட்ட சட்டப் பணிகள் ஆகியவற்றை அரசு, இம்மாநிலத்தில், 1997 ஆம் ஆண்டில் ஏற்படுத்தியது. மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு மாநிலம் முழுவதிலும் ஒரு நீதிமன்றம் காணப்படுகிற ஒவ்வொரு பகுதியிலும் 127 வட்ட சட்டப் பணிகள் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது.

### 18.2. பணிகள்

வழக்காடு பொதுமக்களுக்கு, குறிப்பாக சமுதாயத்தின் வறிய பிரிவினரைச் சேர்ந்த மக்களுக்கு பல இடையீட்டு இணைக்குவிப்புகள் மூலம் சட்டப் பணிகள் ஆணைக் குழு சேவை செய்கிறது. அவற்றில்



2007 ஏப்ரல் 13]

சில கீழே விவரிக்கப்பட்டுள்ளன. வழக்குத் தொடருவதற்கு முன்னர் தீர்வுகள் காண்பதற்கான ஒரு கருவியாக சமரச மையங்களும் அறிவுரை மையங்களும் செயல்படுகின்றன. அறிவுரை வழங்கும் வழக்குரைஞர் தகராறுக்குட்பட்ட தரப்பினர்களுக்கிடையில் பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்வுகள் காண்பதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்கிறார். இவ்வாறாக அவர்கள், அடிமட்ட நிலையில், தகராறுகளுக்குத் தீர்வுகாணும் ஒரு மாற்று முறையை அளிக்கின்றனர். மாநிலத்தில் உள்ள மகளிர் நலமன்றம், மகளிர் தங்களுடைய திருமணம் குறித்த பிரச்சினைகளுக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு உதவி செய்கிறது. முக்கியமான வழக்குகளில், காவலில் வைக்கப்பட்டவர்களுக்கு ஜாமீன் பெறுவதற்கும், அவர்களுடைய வழக்குகளை நடத்துவதற்கும், தேவை ஏற்படின் மேல்முறையீடு செய்வதற்கும் ஆணைக் குழு/குழுக்கள் சட்ட உதவி அளிக்கின்றன. குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட சிறைக் கைதிகளுக்குக்கூட அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அவர்களுடைய குடும்பம் சம்பந்தமான ஏனைய சட்டத் தகராறுகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும் ஆணைக் குழு உதவி செய்கிறது.

பல்வேறு அரசுத் திட்டங்களின்கீழ் உதவி பெறுவதற்கு தனி நபர்களுக்கும் ஆணைக் குழு உதவி செய்கிறது. தொடர்புடைய பதிவுருக்களைப் பெறுவதற்கும் வரையறுக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிப்பதற்கும், அதிகார மன்றங்களிடம் அளிப்பதற்கும் அவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது. அதேபோன்று, தீர்ப்பு வழங்கப்பட்ட தொகையை வங்கியில் வைப்பீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் மோட்டார் வண்டி விபத்துகள் வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையின் அதிகபட்சப் பயன்களைப் பெறுவதற்கு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உதவி அளிக்கப்படுகிறது.

மாநில மற்றும் மாவட்ட ஆணைக் குழுக்களுக்கும், வட்ட சட்டப் பணிகள் குழுக்களுக்கும், உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் குழுவிற்கும் மக்கள் நீதிமன்றங்களை (Lok Adalats) அமைப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது: மோட்டார் வண்டி விபத்துக் கோரிக்கை அசல் மனு (MCOP) மற்றும் நிலம் கையகப்படுத்தல் அசல் மனு (LAOP) ஆகியவற்றில் வழக்குகளை எடுத்துக்கொள்வது மட்டுமின்றி, மக்கள் நீதிமன்றங்களில் பின்வரும் வழக்குகளும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன:

கடன் வசூல் நடுவர் மன்றங்கள், தொழிலாளர் நல நீதிமன்றங்கள், வங்கிக்கடன் மீதான வழக்குத் தொடர்வதற்கு முந்தைய நிலைகள், சொத்துவரி மேல்முறையீடுகள், மாநகர, மாநகர உரிமையியல் நீதிமன்றம் ஆகியவற்றில் முடிவுறாமல் உள்ள வழக்குகள், நிலம் கையகப்படுத்தல் வழக்குகளைப் பொறுத்தவரையில் உயர் நீதிமன்றத்தில் முடிவுறாமலுள்ள மேல்முறையீட்டு வழக்குகள் மற்றும் இத்தகைய ஏனைய வழக்குகள்.

பொதுமக்களுக்கு, தங்களுடைய சட்ட உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆணைக் குழு குறிப்பிட்ட காலந்தோறும் ஊரகப் பகுதிகளில், சட்ட உதவி மற்றும் சட்ட அறிவு விளக்க முகாம்களை நடத்துகிறது. பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இந்தக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அரசின் வருவாய்த் துறையைச் சேர்ந்த ஏனைய அதிகாரியும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதால் இந்தக் கூட்டத்தில் பெற்றுக் கொள்ளப்படும் மனுக்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஆண் மற்றும் மகளிர் சிறைக் கைதிகளுக்காக, ஆணைக் குழு, மத்தியச் சிறையில் சிறைச்சாலை நீதிமன்றங்களையும் நடத்துகிறது. இந்த நீதிமன்றங்களில் குற்றத்தை ஒப்புக்கொள்கிற சிறைக் கைதிகளின் வழக்குகளை விரைந்து முடிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 18.3. சட்ட உதவி ஆலோசனைத் திட்டம்

சட்ட உதவி ஆலோசனைத் திட்டத்தின்கீழ், காவலில் வைக்கப்படுவதற்காக குற்றவியல் நடுவர்கள் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படுகின்ற, ஆனால் வழக்குரைஞரை அமர்த்திக் கொள்ள வசதி இல்லாதவர்களுக்கு சட்ட உதவி அளிப்பதற்காக, சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள்/குழுக்கள், குற்றவியல் நடுவர்மன்ற நீதிமன்றங்கள் அனைத்திலும் சட்ட உதவி வழக்குரைஞர்களை அமர்த்துகின்றன. காவலில் வைக்கும் நேரத்தில் சட்ட உதவி வழக்குரைஞர் ஆஜராவது, அத்தகைய நபர்களின் அரசமைப்பு ரீதியான மற்றும் சட்ட உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது. மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு, மாநிலத்தில் இத்திட்டத்தைச் செயற்படுத்துகிறது. இத்திட்டம், காவலில் உள்ள நபர்களுக்கு பின்வரும் மூன்று நிலைகளில் சட்ட உதவி அளிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது:



(அ) ஜாமீனில் விடுவிக்கப்படுவதற்கு மற்றும் காவலில் வைப்பதற்கான விண்ணப்பங்களுக்கு மறுப்பு தெரிவிப்பதற்கான சட்ட உதவி.

(ஆ) குற்றச்சாட்டுக்கு எதிராக தன்னிலை விளக்கம் அளிப்பதற்கான விசாரணையின்போது சட்ட உதவி வழங்குதல்.

(இ) பாதகமான ஆணைகள் பிறப்பிக்கப்படும் வழக்குகளில் மேல்முறையீடுகள் அல்லது சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்வதற்கு சட்ட உதவி வழங்குதல்.

சட்டக் கல்லூரிகள் செயல்படுகின்ற சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சட்ட உதவி மையங்கள் (Legal Aid Clinics) ஏற்படுத்தப்பட்டுள்ளன. சட்டக் கல்லூரி மாணவர்களை சட்டப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கும் நலிவடைந்த பிரிவினர் குறித்த கவனம் செலுத்துவதற்கும், சட்டக் கல்லூரி மாணவர்கள் வழக்குரைஞர் ஆன பின்னர் வழக்குரைஞர் தொழிலை ஒரு சிறந்த முறையில் நடத்துவதற்கு, அவர்கள், தாங்களே தகுதிப்படுத்திக்கொள்வதற்காகவும் சட்ட உதவி மையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் அலுவலகத்தில் உள்ள சட்ட உதவி மையக் கட்டடத்தில் சட்ட உதவிக் குழுவில் தொலைபேசி இணைப்பு ஒன்று செயல்படுகிறது. தொலைபேசி அழைப்புகளைக் கவனிப்பதற்கும், காலையிலும் மாலையிலும் முறை மாற்றுப்பணி அடிப்படையில் கருத்துகளை அளிப்பதற்கும் அனைத்து வேலை நாட்களிலும் வழக்குரைஞர்கள் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். வழக்காடுபவர்கள், 25342441 ஆம் எண் தொலைபேசி மூலம் உதவிக் குழுவை தொடர்பு கொள்ளலாம். வழக்காடுபவர்கள், அதே வளாகத்தில் உள்ள வழக்குரைஞர்களிடமிருந்து சட்டக் கருத்துகளைப் பெற்றுக்கொள்ளுவதற்காக நேரடியாகவும் சட்ட உதவி மையத்திற்கு வருகை தருகின்றனர்.

## 19. அரசு வழக்காடும் துறை, உயர் நீதிமன்றம், சென்னை

மாநில அரசின் ஆணைப்படி, 1997 ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு வழக்காடும் துறை தமிழ்நாடு அரசின் மாநில

அரசு தலைமை வழக்குரைஞர் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டது. அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்-I முதல் அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்-IV வரையானவர்கள் சென்னை, அரசு குற்றவியல் வழக்கறிஞர், மதுரையிலுள்ள உயர் நீதிமன்ற ஆயத்தின் அரசு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர், சென்னை மாநில அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர், மாநில அரசு சிறப்பு உரிமையியல் வழக்கு நடத்துநர் ஆகியோரின் ஏனைய பிரிவு அலுவலகங்களும் அடங்கும்.

மதுரையில் உள்ள உயர் நீதிமன்ற ஆயத்தின் பிரிவு அலுவலகமும் அவருடைய கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. மதுரையில் உயர் நீதிமன்றத்தின் ஆயம் செயல்படுவதன் விளைவாக, குற்றவியல் மற்றும் உரிமையியல் தரப்பில் மதுரையில் புதிய சட்ட அலுவலகங்களை உருவாக்க அரசு அனுமதி அளித்தது. சென்னை உயர் நீதிமன்றத்தின் அரசு வழக்காடும் துறை, உள்துறையின் ஒட்டுமொத்த நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் 100-க்கும் மேற்பட்ட சட்ட அலுவலர்களையும், 175 பணியாளர்களையும் கொண்டு முக்கியமான துறைகளில் ஒன்றாக விளங்கி வந்துள்ளது. தமிழ்நாடு அரசின் தலைமை வழக்குரைஞர், மதுரையில் உள்ள உயர் நீதிமன்ற ஆயத்தில் பட்டியலிடப்பட்ட வழக்குகளில் ஆஜராவது மட்டுமின்றி மதுரையிலுள்ள பிரிவு அலுவலகங்களையும் அடிக்கடி பார்வையிடுகிறார். மதுரையிலுள்ள பிரிவு அலுவலகங்களின் பணிகளைச் சீரமைக்கும் பொருட்டும், புதிதாக ஏற்படுத்தப்பட்ட அலுவலகங்களுக்கான நிருவாக அமைப்பிற்காகவும், சட்ட அலுவலர்கள் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் தக்க முறையில் ஆற்ற இயலும் பொருட்டும், சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு குற்றவியல் வழக்கு நடத்துநரும், அரசு உரிமையியல் வழக்கு நடத்துநரும் அவரவர் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகங்களை முறைப்படி பார்வையிடுகின்றனர்.

## 20. குற்றவழக்குத் தொடர்வு இயக்ககம்

குற்றவழக்குகளைத் திறம்பட நடத்தி நிர்வகிப்பதுடன், மாநில முழுவதிலுமுள்ள பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் தலைமை நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் சட்ட அலுவலர்கள் குற்றவியல் வழக்குரைஞர்கள், ஆகியோரின் பணிகளைக் காண்காணிப்பதே குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்தின் தலையாய நோக்கமாகும்.



சட்ட ஆணையத்தின் பரிந்துரைகளையொட்டி 1984 ஆம் ஆண்டில் இத்துறை ஏற்படுத்தப்பட்டது. காவல் துறை தலைவர் பதவித் தரத்தில் உள்ள ஓர் இயக்குநர் இத்துறைக்குத் தலைமை வகிக்கிறார்.

### 20.1. அமைப்பு முறை

தலைமையிடங்களில் குற்றவழக்குத் தொடர்வு இயக்குநருக்கு, குற்றவழக்குத் தொடர்வு இணை இயக்குநர் உதவி செய்கிறார். அவர், குற்றவழக்குத் தொடர்வுத் துறையின் நிர்வாக மேற்பார்வைப் பணிகளைக் கவனிக்கிறார். வட்டாரங்களில் 11 குற்றவழக்குத் தொடர்வு துணை இயக்குநர்களும், 14 குற்றவழக்குத் தொடர்வு உதவி இயக்குநர்களும் பணியாற்றுகின்றனர். அவர்கள், முறையே சரகம் மற்றும் மாவட்டங்களின் நிருவாகத் தலைவர்களாகச் செயல்படுகின்றனர். குற்றவழக்குத் தொடர்வு உதவி இயக்குநர் பதவித் தரத்தில் உள்ள இணைப் பதிப்பாசிரியர் (வெளியீடு) ஒருவர், தலைமையிடங்களில் அமைந்துள்ள தமிழ்நாடு குற்ற வழக்குத்தொடர்வோர் இதழை வெளியிடும் பணியைக் கவனிக்கிறார். இதுதவிர, தலைமை நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைச் சேர்ந்த 25 அரசு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர்கள், தலைமை நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களால் குற்ற வழக்குத் தொடரும் பணிகளைக் கவனிக்கின்றனர். முறையே பல்வேறு மாவட்ட முன்சீப்/நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைச் சேர்ந்த அரசு உதவி குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் நிலை I மற்றும் II, நீதிமன்றங்களில் குற்ற வழக்குகள் தொடரும் பணியைக் கவனிக்கின்றனர். நிர்வாகப் பணிகளைக் கவனிப்பதற்காக, ஒரு நேர்முக உதவியாளர் (நிர்வாகம்), 2 கண்காணிப்பாளர்கள், 5 உதவியாளர்கள், 3 இளநிலை உதவியாளர்கள், 2 தட்டச்சர்கள், 2 சுருக்கெழுத்தர்கள், 1 பதிவுரு எழுத்தர், 1 ஓட்டுநர் மற்றும் 1 அலுவலக உதவியாளர் ஆகியோர் சென்னையிலுள்ள இயக்குநர் அலுவலகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்துறையைச் சேர்ந்த அமைச்சுப் பணியாளர்களைக் கொண்டும், அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட பணியாளர்களைக் கொண்டும் வட்டாரப் பிரிவு அலுவலகங்கள் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

[2007 ஏப்ரல் 13

## 20.2. வழக்குத் தொடரும் அதிகாரிகளின் பணிகள்

குற்றவழக்குத் தொடர்வு துணை இயக்குநர், வட்டாரப் பிரிவின் நிர்வாகப் பணிகளைக் கவனிப்பது மட்டுமின்றி, குற்றவழக்குத் தொடர்வு உதவி இயக்குநர்கள், அரசுக் கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர் ஆகியோரின் கட்டுப்பாட்டில் உள்ள பணிகளை மேற்பார்வையும் செய்கிறார். குற்றவழக்குத் தொடர்வுத் துணை இயக்குநர், பல்வேறு விவகாரங்கள் குறித்து காவல் துறை மற்றும் பிற அரசு துறைகளுக்கு சட்டக் கருத்துகளையும் வழங்குகிறார். அவர்கள் அமர்வு நீதிமன்ற வழக்குகள் மற்றும் ஏனைய முக்கியமான வழக்குகளில் இறுதி வரைவு அறிக்கைகளையும் அளிக்கின்றனர். மாவட்ட அளவில், குற்றவியல் வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர், அரசு உதவி குற்றவியல் வழக்கு நடத்துநர்களின் பணியை மேற்பார்வை செய்வதோடு, காவல் துறை மற்றும் ஏனைய அரசுத் துறைகளுக்கு கருத்துரைகளையும் அளிக்கின்றனர். மேலும், அமர்வு நீதிமன்ற வழக்குகளில் காவல் துறையினருக்கு இறுதிக் கருத்தின் வரைவையும் அளிக்கிறார். குற்றவழக்குத் தொடர்வு உதவி இயக்குநர்களின் பதவித் தரத்திற்கு சமமான பதவித்தரத்தில் உள்ள அரசு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் தலைமை நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை நடத்துகின்றனர். அரசு உதவி குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் அரசின் சார்பாக, நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை நடத்துகின்றனர். அவர்கள் இறுதி வரைவு அறிக்கைகளை அளிப்பதோடு, அவர்களின் நீதிமன்றங்களில் முடிவுறாமலுள்ள வழக்குகளுக்கு சட்டக் கருத்துகளையும் அளிக்கின்றனர். அரசு உதவி குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் சிலர், ஒழுக்கக் கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு, பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துகள், மருந்துப்பொருள் கட்டுப்பாடு, உணவுப் பகுப்பாய்வுக்கூடம் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறையின் குற்றப்பிரிவு (CBCID) போன்ற பிரிவுகளுக்கு, அவற்றின் வழக்குகளை நடத்துவதற்காக முகமையில் நியமிக்கப்படுகின்றனர். துறையை கணினிமயமாக்குவதற்காக அரசு இதுவரையில் ரூ.12.02 இலட்சம் ஒதுக்கியுள்ளது. செயல்திறன் நிலையை உயர்த்துவதற்கும், சிறந்த மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பிற்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை அளிக்கவும் பெருமுயற்சி செய்யப்படுகிறது.



2007 ஏப்ரல் 13]

## 20.3. சட்ட இதழ்

தமிழ்நாடு வழக்கு நடத்துவோர் இதழ் என்று அழைக்கப்படுகிற சட்ட இதழ் ஒன்று ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்டு வருகிறது. அதில், துறை அதிகாரிகளின் பயனுக்காக சட்டம் சம்பந்தமான கட்டுரைகளும் முக்கியமான நீதிமன்றத் தீர்ப்புகளும் வெளியிடப்படுகின்றன. துறையை கணினிமயமாக்குவதற்காக 2007-2008 ஆம் ஆண்டில் அரசு ரூ.8.55 இலட்சம் அளிக்கும். இதைத் தவிர இணை இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் அலுவலக உபயோகத்திற்கு நகல் அச்சுடன், நிகரி வசதி வழங்குவதற்கு ரூபாய் 5.01 இலட்சம் வழங்கப்படும்.

## 21. முடிவுரை

வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்த இயலும் வகையில், நீதித் துறைக்குப் போதிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்க அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும். அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்கப்படுவதுடன், நமது மாநிலத்தில், அனைத்து நிலைகளிலும் உள்ள நீதிமன்றங்களை கணினிமயமாக்கத் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## இணைப்பு—I

### தமிழ்நாடு நீதித் துறையின் படிநிலை அமைப்பு

முதன்மை இருப்பிட உயர் நீதிமன்றம் சென்னை.
மதுரையிலுள்ள சென்னை உயர் நீதிமன்றக் கிளை

| உரிமையியல் நீதிமன்றங்கள் | |
|---|---|
| சென்னை மாநகர் சென்னை மாநகரத்துக்குள் எழும் ரூபாய் பத்து இலட்சத்திற்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரிக்கிறது | வெளியூர் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றம்<br><br>சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள்<br><br>சார்பு நீதிமன்றங்கள்<br><br>மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்.<br><br>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள். |

| குற்றவியல் நீதிமன்றங்கள் | |
|---|---|
| சென்னை மாநகர் | வெளியூர் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றம் குற்றவியல் நீதிமன்றமாக செயல்படும்<br><br>பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | அமர்வு நீதிமன்றங்கள்.<br><br>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்.<br><br>குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள். |



## இணைப்பு—II

### சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| தொடர் எண் | நீதிமன்றங்களின்/ தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை | மாவட்ட நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள் | உரிமையியல் நீதிபதி (முதுநிலைப்பிரிவு) | | உரிமையியல் நீதிபதி இளநிலை பிரிவு/ குற்றவியல் நடுவர் மன்ற குடும்ப நல நீதிமன்றங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | த.பெ.மா. | ஏனையோர் | |
| 1 | மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | 11 | 5 | .. | 18 | 1 |
| 2 | சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | 1 | .. | .. | 8 | 8 |
| 3 | தலைமைப் பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் | 2 | .. | 1 | 6 | 17 |
| 4 | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | 3 | .. | .. | .. | .. |
| 5 | தொழில் தீர்ப்பாயம் | 1 | .. | .. | .. | .. |
| 6 | விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | .. | .. | 1 | .. |
| 7 | அரசு போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | .. | .. | .. | .. |
| 8 | இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் தனி நீதிமன்றம் | 1 | .. | .. | .. | .. |

## இணைப்பு–II-தொடர்ச்சி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | .. | .. | .. | .. |
| 10 | துணை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | .. | .. | .. | .. | 1 |
| 11 | குடும்ப நீதிமன்றங்கள் | 3 | .. | .. | .. | .. |
| 12 | மகளிர் நீதிமன்றங்கள் | 1 | .. | .. | .. | .. |
| 13 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களின்) பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றங்கள் | 1 | .. | .. | .. | .. |
| 14 | N.D.P.S. சட்டத்தின் கீழ் கூடுதல் தனி நீதிமன்றம் | 1 | .. | .. | .. | .. |
| 15 | குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | .. | .. | .. | .. |
| 16 | வெள்ளை ரவி மற்றும் சேராவுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் கூடுதல் அமர்வு நீதிமன்றம் | 1 | .. | .. | .. | .. |
| 17 | மாநாராட்சி | 1 | .. | .. | .. | .. |
| | மொத்தம் | 31 | 5 | 1 | 33 | 27 |
| | ஒட்டு மொத்த எண்ணிக்கை | மாவட்ட நீதிபதி நிலையில்–31 | வி.நீ.ப. நிலையில்–5 | உரிமையியல் நீதிபதி நிலையில் (முதுநிலை பிரிவு)–34 | | உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு)–27 |
| | மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை–97 | | | | | |



## இணைப்பு–III

### தமிழ்நாட்டில் மாவட்டங்களில் இயங்கிவரும் நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| வரிசை எண் | மாவட்டங்கள் | மாவட்ட நீதிபதி நிலை | | | | | | | | | | உரிமையியல் நீதிபதி (முதுநிலைப் பிரிவு) | | | உரிமையியல் நீதிபதி (இ.நி. பிரிவு) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மாவட்ட நீதிபதிகள் | குடியுரிமை பாதுகாப்புச் சட்ட தனி நீதிமன்றங்கள் | குண்டு வெடிப்பு வழக்கு நீதிமன்றங்கள் | இனக்கலவர வழக்கு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நீதிமன்றங்கள் | இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் | மத்திய புலனாய்வுத் துறை வழக்குகள் விசாரிக்கும் நீதிமன்றங்கள் | குடும்ப நீதிமன்றங்கள் | மகளிர் நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள் | தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | மாநகராட்சி வரிவிதிப்பு மேல்முறையீட்டு ஆணையம் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| 1. | கோயம்புத்தூர் | 2 | .. | 1 | .. | 1 | 1 | 1 | 1 | 1 | 5 | 1 | 7 | 2 | 7 | 14 | 4 |
| 2. | கடலூர் | 1 | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 3 | 1 | 7 | .. | 8 | 8 | 4 |
| 3. | தருமபுரி | 2 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 2 | 4 | .. | 3 | 5 | 6 |
| 4. | திண்டுக்கல் | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 | 3 | .. | 5 | 5 | 3 |
| 5. | ஈரோடு | 2 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 4 | 1 | 8 | .. | 10 | 9 | 2 |
| 6. | காஞ்சிபுரம் | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | 1 | 4 | .. | 6 | 7 | 2 |
| 7. | கன்னியாகுமரி | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 5 | .. | 9 | 7 | 1 |

இணைப்பு—III-தொடர்ச்சி

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 கரூர் | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 2 | .. | 3 | 4 | .. |
| 9 மதுரை | 2 | 1 | .. | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 3 | 1 | 6 | 2 | 5 | 10 | 1 |
| 10 நாகப்பட்டினம் | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 5 | .. | 7 | 9 | 1 |
| 11 நாமக்கல் | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 | 1 | .. | 4 | 4 | 1 |
| 12 நீலகிரி | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | 1 | 3 |
| 13 பெரம்பலூர் | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 | 1 | 1 | .. | 4 | 3 | .. |
| 14 புதுக்கோட்டை | 1 | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 | 1 | .. | 3 | 3 | 2 |
| 15 இராமநாதபுரம் | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 | 2 | .. | 2 | 3 | 4 |
| 16 சேலம் | 2 | .. | .. | .. | 1 | 1 | .. | 1 | 1 | 2 | 1 | 5 | 1 | 6 | 12 | 1 |
| 17 சிவகங்கை | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 2 | .. | 2 | 3 | 4 |
| 18 தஞ்சாவூர் | 1 | 1 | .. | .. | .. | 1 | .. | .. | .. | 2 | 1 | 6 | .. | 7 | 6 | 3 |
| 19 தேனி | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 | 2 | .. | 3 | 3 | 2 |
| 20 தூத்துக்குடி | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | 1 | 2 | .. | 6 | 6 | 2 |
| 21 திருச்சிராப்பள்ளி | 1 | 1 | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 2 | 1 | 4 | 1 | 7 | 9 | 1 |
| 22 திருநெல்வேலி | 2 | 1 | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 2 | 1 | 7 | 1 | 12 | 9 | 4 |
| 23 திருவள்ளூர் | 1 | .. | .. | .. | .. | .. | .. | 1 | 3 | 1 | 3 | .. | 5 | 7 | 2 | .. |
| 24 திருவண்ணாமலை | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 4 | .. | 7 | 5 | 3 |
| 25 வேலூர் | 1 | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | 3 | 1 | 4 | .. | 8 | 14 | 4 |
| 26 விழுப்புரம் | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 3 | 1 | 7 | .. | 15 | 9 | 2 |
| 27 விருதுநகர் | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 | 4 | .. | 3 | 6 | 3 |
| மொத்தம் | 33 | 4 | 1 | 1 | 7 | 5 | 2 | 3 | 7 | 44 | 27 | 107 | 7 | 160 | 181 | 65 |
| மாவட்ட நீதிபதி நிலை—63 | | உரிமையியல் நீதிபதி (முதுநிலைப்பிரிவு)—141 | | | | | | | விரைவு நீதிமன்றங்கள்-44 | | உரிமையியல் நீதிபதி (இளநிலைப்பிரிவு)—406 | | | | | |
| மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை—654 | | | | | | | | | | | | | | | | |



## இணைப்பு—IV

### வன்கொடுமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள்

| வரிசை எண் | நீதிமன்றத்தின் பெயர் | நீதிமன்றத்தின் அதிகார வரம்பு |
|---|---|---|
| 1 | IV கூடுதல் அமர்வு நீதிமன்றம், மதுரை | மதுரை<br>திண்டுக்கல்<br>தேனி<br>இராமநாதபுரம்<br>சிவகங்கை<br>விருதுநகர் |
| 2 | II கூடுதல் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் | தஞ்சாவூர்<br>நாகப்பட்டினம்<br>திருவாரூர் |
| 3 | III கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருநெல்வேலி | திருநெல்வேலி<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி |
| 4 | II கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி<br>புதுக்கோட்டை |

2007 ஏப்ரல் 13]

# இணைப்பு II

*(...94 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 33—சட்டத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

**முன்னுரை**

சட்டம் என்பது சமூக மாற்றத்தைக் கொண்டுவரும் ஒரு கருவியாகும். சட்டமன்றமானது சட்டம் இயற்றும் நடைமுறையை மேற்கொள்கின்ற அதிகார அமைப்பாகும். தனி மனித கருத்துக்கு மேலாக பொதுக் கருத்து உருவாகி அதனை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள அமைப்பே மக்களாட்சி ஆகும். சட்டம் என்பதானது ஒழுக்கம், அறம், இயல்பறிவு ஆகியவற்றின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட விதிகளேயன்றி வேறல்ல என்பது சட்டம் என்பதன் பொருள் வரையறை ஆகும். மக்களாட்சி நடைபெறும் ஒரு சமுதாயத்தில் சட்டமன்றத்தின் மூலமாக மக்களின் ஒட்டுமொத்தமான விருப்பத்தைத் தெரிவிப்பதே சட்டங்கள் எனப்படுகின்றன. சமுதாயம் வளர்ச்சி அடைகின்ற அதே வழியிலேயே சட்டமும்கூட வளர்ச்சி பெற்று நன்கு சிறப்புறுகின்றது. சமுதாயத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் தனது அன்றாட வாழ்க்கையில் எந்த ஒரு வடிவத்திலுமாவது சட்டத்தைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. சமுதாயத் தேவைகள் மற்றும் அதன் போக்கு நடத்தைகளின் வெளிப்பாடே சட்டமாகும். குறிப்பிட்டதொரு சமூகத் தேவையின் அடிப்படையில் சட்டம் ஒன்று இயற்றப்படுவதானது அந்தச் சமுதாயத் தேவையை கோருகிறவர்களின் சட்டப் பின்னணியுடனான ஆதரவினை குறித்துரைக்கிறது. சமூக நீதிக்கு இணங்கிய வகையில் சட்டமன்றமானது சட்டத்தை இயற்றுவதன் மூலமாக மக்களை மகிழ்விக்க இயலும்.

இந்த அரசின் சட்டத் துறையானது, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளைச் செயல்படுத்துவதற்காக மேற்சொன்ன கொள்கைகளை கவனத்திற்கொண்டு பல்வேறு சட்டங்களை இயற்றுகிறது.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத் துறை, தொடர்புடைய துறையுடன்

ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்கு சட்டவடிவமளித்து, சட்ட முன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டப் பேரவை சட்ட வரைவிற்கு ஒப்புதல் அளித்த பின்னர், ஆளுநரின் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றபின் அது சட்டமாகும் வரையில் சட்டத் துறையின் பணி தொடர்கிறது. சட்டப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்பின் 213 ஆவது உறுப்பின்படி அவசரச் சட்டம் வாயிலாகச் சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப உருவாக்குகிறது. சட்டத் துறையின் பணி அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து அதைப் பிரகடனப்படுத்தும் வரையில் தொடர்கிறது.

மேலும், சட்டத் துறையின் முக்கியப் பணியானது, சட்டமன்றப் பேரவைச் செயலகம் உட்பட, தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை வழங்குவதாகும்.

இவை தவிர சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஒரு தரப்பினராக இருக்கிற ஆவணங்கள் ஆகியவற்றையும் அவற்றின் சட்ட வகைமுறைகள் தொடர்பாகவும் சட்டத் துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மாநில அரசுத் தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதி மொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத் துறையால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன.

மேலும், பின்வருவன தொடர்பான நிர்வாகப் பணிகளையும் சட்டத் துறை செய்து வருகிறது—

(1) சட்டக் கல்வி

(2) சான்றுறுதி அலுவலர்களின் அமர்த்துகையும் நீக்கமும்

(3) மாநிலச் சட்ட ஆணையம்

(4) மாநில ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு

(5) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்



**சட்டக் கல்வி**

சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் சட்டக் கல்வித் துறையானது 1953 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை தோற்றுவிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளதோடு மென்மேலும் முன்னேற்றமடைய இத்துறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996-97 ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஒரு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. 2006-2007 ஆம் கல்வியாண்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரியை அரசு சட்டக் கல்லூரியாக அறிவித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டில் ஆறு அரசு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

2007-2008 ஆம் கல்வியாண்டில் அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டக் கல்லூரியின் பெயர் | மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1482 |
| அரசு சட்டக் கல்லூரி, மதுரை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1438 |
| அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1430 |
| அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர் (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1430 |
| அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்) | 1415 |
| அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு (இளநிலை சட்டப் படிப்பு மட்டும்) | 880 |

[2007 ஏப்ரல் 13

அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளும் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் தனித்தனி விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் மாணவியர்களுக்கும் விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளது. அது விரைவில் செயல்படவிருக்கிறது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் ஏழு மாணவர்கள் வியன்னா, ஹாங்காங் ஆகிய இடங்களில் 2007 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைபெறவிருக்கிற சர்வதேச நீதிமன்ற வழக்கு வாதப் பயிற்சி (Moot Court) போட்டிகளில் பங்கேற்பதற்காக, ரூ.5.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவர்களுக்கு விடுதி வசதி இல்லை. எனவே, ரூ.168 இலட்சம் செலவில் மேற்கண்ட அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்ட அனுமதிக்கப்படவுள்ளது.

ரூ. 30 இலட்சம் செலவில் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தினுள் கட்டப்படவுள்ள சட்டக் கல்வி இயக்குநரகத்திற்கான கட்டடத்தில் முதல் தளம் கட்ட அனுமதிக்கப்படவுள்ளது.

**சான்றுறுதி அலுவலர்கள் நியமனம் மற்றும் நீக்கம்**

1952 ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி முறையாவணங்களைச் சான்றொப்பமிடும் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். 1-1-2007 அன்று உள்ளபடி இம்மாநிலத்தில் 1695 சான்றுறுதி அலுவலர்கள் உள்ளனர்.



2007 ஏப்ரல் 13]

**மாநிலச் சட்ட ஆணையம்**

மாநிலச் சட்ட ஆணையம் இதுவரையில் பின்வரும் பொருள் குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது:—

(1) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது இயற்றப்பட்ட "நீக்கறவு செய்யப்படாத தமிழ்நாடு ஒழுங்குமுறை விதிகள்"

(2) தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துகிற மையச் சட்டங்கள்

(3) 1884 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம நீதிமன்றங்கள் சட்டத்தின் பொருள் வழி "கிராமத்தினர்களுக்கு நீதி வழங்குதல்"

(4) 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு சட்டம்

(5) 1867 மற்றும் 1891 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வகைமுறைகள் விளக்கச் சட்டம்

(6) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் கேலி தடைச் சட்டம்

(7) 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடுச்) சட்டம்.

திருத்தியமைக்கப்பட்ட மாநிலச் சட்ட ஆணையத்தின் தலைவர், முழுநேர உறுப்பினர்கள் மற்றும் பகுதி நேர உறுப்பினர் பதவிக் காலம் 28-1-2002 பிற்பகலுடன் முடிவுற்று அவர்களது பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டனர். மாநிலச் சட்ட ஆணையம் இன்னும் திருத்தி அமைக்கப்படவில்லை.

**மாநில ஆட்சிமொழி (சட்டப்) பிரிவு**

1965 ஆம் ஆண்டு முதன்முதலாக மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சட்டச் சொற்களை அறுதி செய்து சட்டச் சொல் அகராதி வெளியிடுவதற்காகவும், மையச் சட்டங்களையும் மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழிபெயர்ப்பதற்காகவும், அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும் பிற பணி எதனையும் மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டது.

[2007 ஏப்ரல் 13

(2) மாநிலச் சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டத் துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழும், சட்டத் துறை கூடுதல் செயலாளரின் தலைமையிலும் சட்டத் துறையின் ஒரு பிரிவாக 1992 ஆம் ஆண்டு சட்டத் துறையுடன் சேர்க்கப்பட்டது. இது மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும் மொழி பெயர்த்து வருகிறது. மையச் சட்டங்களை மொழி பெயர்த்து புத்தகவடிவில் அச்சிடுவதற்கான செலவினை மைய அரசு ஏற்றுக் கொள்ளும். மாநிலச் சட்டங்களை மொழிபெயர்த்து அச்சிடும் செலவினை மாநில அரசு மேற்கொள்கிறது.

**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்**

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் செயல்படும் ஆறு அரசு சட்டக் கல்லூரிகளும் மற்றும் சேலத்தில் செயல்படும் ஒரு தனியார் சட்டக் கல்லூரியும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயிற்றுவித்து வந்த பி.ஏ.பி.எல். (ஹானர்ஸ்) சட்டக் கல்வியினை அப்பொழுதிருந்த அப்படிப்பு மாணவர்களுடன் தமிழ்நாடு டாக்டர் அமபேதகர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு 2006-2007 ஆம் கல்வியாண்டு முதல் மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி மாற்றப்பட்ட மாணவர்கள் சீர்மிகு சட்டப் பள்ளியில் அனுமதிக்கப்பட்டு கல்வி பயின்று வருகிறார்கள். தற்போதைய சீர்மிகு சட்டப பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 650 ஆகும்.

சட்டப் பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்கப்படும் முதுநிலை சட்ட மேற்படிப்பு துறையில் 2007 ஆம் ஆண்டு முதல் கீழ்காணும் பிரிவுகளில் சேர்க்கைக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது—

(1) குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதி நிருவாகச் சட்டம்

(2) மனித உரிமை சட்டம்.

முனைவர் ஆராய்ச்சிக் கல்வி முதலில் சட்டக் கல்வி ஆசிரியர்களுக்கு மட்டும் பகுதி நேரப் படிப்பாக தொடங்கப்பட்டது. தற்போது அக்கல்வியானது 2007 ஆம் ஆண்டு முதல் விரிவுபடுத்தப்பட்டு மாண்புமிகு நீதியரசர்கள், வழக்கறிஞர்கள்,



2007 ஏப்ரல் 13]

நிருவாகப் பணியாளர்கள் மற்றும் இதரப் பிரிவினருக்காக விரிவுபடுத்தப்பட்டன. மேலும், அது மாணவர்களுக்கு முழுநேரப் படிப்பாக படிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சட்டப் பல்கலைக்கழகத்தில் 2007 ஆம் ஆண்டு முதல் தொலைதூரக் கல்வி மூலம் தொழில் முறை பணி அல்லாத பி.ஏ.எல். பட்டப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு முதல் சட்டப் பல்கலைக்கழகத்தில் கீழ்க்கண்ட முதுநிலை பட்டயப் படிப்பு தொலைதூரக் கல்வி மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது—

1. வணிகவியல் சட்டங்கள்
2. சுற்றுச்சூழல் சட்டங்கள்
3. தொழில்நுட்பத் தகவல் சட்டங்கள்
4. அறிவுசார் சொத்து சட்டங்கள்
5. தொழிலாளர் சட்டங்கள்
6. மனித உரிமைகள் மற்றும் கடமைகள் கல்வி சட்டங்கள்.

2007 ஆம் ஆண்டு முதல் சட்டப் பல்கலைக்கழகத்தில் ஆவணங்கள் வரைதல் குறித்த சான்றிதழ் படிபபு தொலைதூரக் கல்வி வழி மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ரூ.1.90 கோடி செலவில் முதுநிலை மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு துறைகளுக்கான (2 மாடி) கட்டடம் பல்கலைக்கழக நிதியால் உருவாக்கப்பட்டுள்ளது.

சீர்மிகு சட்டப் பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததையடுத்து, கூடுதல் வகுப்பறைகள், கணினி ஆய்வுக்கூடம், மாணவர்கள் ஓய்வறைகள், ஆசிரியர்கள் ஓய்வறைகள் ரூ.66.35 இலட்சம் (ரூ.54 இலட்சம் தமிழக அரசின் நிதி உதவியும், மீதமுள்ள தொகையான ரூ.12.35 இலட்சம் பல்கலைக்கழக நிதி உதவி) மதிப்பீட்டில் கட்ட தீர்மானிக்கப்பட்டு, ஆரம்பக் கட்ட கட்டடப் பணிகள் ஏற்கெனவேயுள்ள சீர்மிகு சட்டப் பள்ளிக் கட்டடத்தின் தென் பகுதியில் விரிவுபடுத்திட ஏதுவாக, பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2007 ஏப்ரல் 13

சட்டப் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவிகளின் வசதிக்காக ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில், மாணவியர் விடுதிக் கட்டடம் ஏற்படுத்திட, கட்டட வேலைகள் முனைப்புடன் நடைபெற்று வருகின்றன.

அமெரிக்காவிலுள்ள ஒக்களகாமா பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சட்டப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தியுள்ளது. மேற்படி ஒப்பந்தத்தின்படி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர்களை இரு பல்கலைக்கழகங்களும் பரிமாற்றம் செய்துகொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அயல்நாட்டுடன் ஏற்பட்டுள்ள இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவே முதல் ஒப்பந்தமாகும்.

சட்டப் பல்கலைக்கழகத்தில் கல்வி முடித்து வெளிச் செல்ல உள்ள பி.ஏ.பி.எல். (ஹானர்ஸ்) மாணவர்களின் நலனுக்காக பணி அமைப்புப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் 25 மாணவர்கள் சட்ட எழுத்தர்களாக சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள மாண்புமிகு நீதியரசர்களின் கீழ் பணியாற்றிட 2006-2007 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார்கள். மேலும், பல்வேறு பணியமைப்புத் தேர்வாளர்கள், உதாரணமாக சுராணா மற்றும் சுராணா, சட்ட நிறுவனங்கள் மற்றும் பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் இறுதியாண்டில் பயிலும் பி.ஏ.பி.எல். (ஹானர்ஸ்) மாணவர்கள் கலந்தாய்வு செய்து வேலைவாய்ப்பு வழங்குவதற்காக வளாகத் தேர்வினை நடத்தியுள்ளார்கள். இந்தப் பணியமைப்புப் பிரிவு இப்பள்ளியில் பயிலும் 4 ஆம் மற்றும் 5 ஆம் ஆண்டு மாணவர்களின் புள்ளிவிவரங்களை பணியமைப்பு நிமித்தம் தொகுத்துள்ளது. மேலும், பல தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் உள்ள வேலைவாய்ப்பு நிறுவனங்கள் சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட பணியமைப்புப் பிரிவினை அணுகியுள்ளது.

சட்டப் பல்கலைக்கழக "சாப்ட் ஸ்கில்" தொடர்பான சிறப்பு விரிவுரைகளை அத்துறையின் நிபுணர்களைக் கொண்டு மாணவர்களின் தொடர்பு மற்றும் நேர்முகத் தகுதி தலைமைத் திறன் போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையில் பழக்கியுள்ளது.

சட்டப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை சட்டக் கல்வியில் முழு நேரம் சட்டம், மருத்துவம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உள்ளடக்கிய ஒரு பிரிவு (பிரிவு எண் 8) அறிமுகப்படுத்தப்படவுள்ளது.



2007 ஏப்ரல் 13]

2007–2008 ஆம் ஆண்டுகளுக்கான பகுதி–II திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல்

(ரூபாய் இலட்சத்தில்)

| வரிசை எண் | திட்டப்பணிகளின் விவரம் | இறுதிநிலைச் செலவு | | | 2007–2008-ல் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவு | தொடரா செலவு | மொத்தம் | வருவாய் கணக்கில் செலவு | மூலதன கணக்கில் செலவு | கடன் கணக்கில் செலவு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | அரசு சட்டக் கல்லூரிகளுக்குப் புத்தகங்கள் வாங்குதல் | 0.00 | 12.00 | 12.00 | 12.00 | 0.00 | 0.00 | 12.00 |
| 2 | திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டுதல் | 0.00 | 84.00 | 84.00 | 0.00 | 33.60 | 0.00 | 33.60 |
| 3 | திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிக்கு அறைகலன்கள் வாங்குதல் | 0.00 | 2.00 | 2.00 | 2.00 | 0.00 | 0.00 | 2.00 |
| 4 | திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டுதல் | 0.00 | 84.00 | 84.00 | 0.00 | 33.60 | 0.00 | 33.60 |
| 5 | சென்னை, புரசைவாக்கம், டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதி வளாகத்திலுள் கட்டப்படவுள்ள சட்டக் கல்வி இயக்ககத்திற்கான கட்டடத்தில் முதல் தளம் கட்டுதல் | 0.00 | 30.00 | 30.00 | 0.00 | 12.00 | 0.00 | 12.00 |

| (1) | (2) | (3) | (4, | (5) | (6) | 7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சீர்மிகு சட்டப்பள்ளி நூலகத்திற்கு தேவையான புத்தகங்கள் வாங்குதல் | 0.00 | 4.00 | 4.00 | 4.00 | 0.00 | 0.00 | 4.00 |
| 7 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக பட்டமேற்படிப்பு ஆராய்ச்சித் துறைக்கு நூலகப் புத்தகங்கள் வாங்குதல் | 0.00 | 4.00 | 4.00 | 4.00 | 0.00 | 0.00 | 4.00 |
| | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு அதிகப் பணித் திறனுடைய நகலெடுக்கும் இயந்திரங்கள் இரண்டு வாங்குதல் | 0.00 | 2.00 | 2.00 | 2.00 | 0.00 | 0.00 | 2.00 |
| | **மொத்தம்** (நிதிநிலைக் குழுவால் ஏற்பளிக்கப்பட்டது) | **0.00** | **222.00** | **222.00** | **24.00** | **79.20** | **0.00** | **103.20** |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227568
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.